DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

IMMIGRATION MATTERS?
OUR SERVICE ARE:
Immigration and Refugee
Landlord and Tenants
Small Claims Matters
Provincial Offences
416-334-9464

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX

27ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices

# UTHAYAN உதயன்

திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாராச் செய்தி இதழ்

$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

உதயம் 1485 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 20, 2024

# “ பிரிந்து நின்ற எமது தமிழினம் ஒரு தேசமாக எழுந்த நின்று குரல் எழுப்பும் வாய்ப்பை ‘ தமிழ் பொதுவேட்பாளர்’ என்னும் எழுச்சி ஏற்படுத்தியுள்ளது”

### கனடாவில் நடைபெற்ற ‘ தமிழ் பொதுவேட்பாளர்’ எழுச்சிக்கு ஆதரவு வழங்கும் கூட்டத்தில் ராஜா யோகராஜா தெரிவிப்பு




”கடந்த பல வருடங்களாக இலங்கை அரசியலிலும் தமிழர் அரசியலிலும் பல கூறுகளாக பிரிந்து நின்ற எமது தமிழினம் ஒரு தேசமாக எழுந்த நின்று இணைந்து குரல் எழுப்பும் வாய்ப்பை “ தமிழ் பொதுவேட்பாளர்“ என்னும் எழுச்சி ஏற்படுத்தியுள்ளது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இந்த முயற்சி ஒரு சாதாரணமான விடயமல்ல. தமிழ் மக்களாகிய எமது எதிர்காலத்தை தீர்மானிக்கவும் திட்டங்களைத் தயாரிக்கவும் ஏற்ற ஒரு ஆரம்பப் புள்ளியாகவே நாம் இந்த “ தமிழ் பொதுவேட்பாளர்“ என்னும் முக்கிய கருப்பொருளைக் கருத வேண்டும். கடந்த காலங்களில் பல்வேறு கட்சிகள்.போராளி இயக்கங்கள் மற்றும் அமைப்புக்கள் என பிரிந்து நின்ற தமிழ் மக்களாகிய நாம் இந்த அவசியமான தருணத்தில் “ தமிழ் பொதுவேட்பாளர்“ என்னும் கருத்தியலின் அடிப்படையில் ஒன்றுபட்டுள்ளோம். இந்த ஒற்றுமையையும் இணைவையும் நாம் இழந்து விடக்கூடாது. அதைக் கட்டிக் காக்க வேண்டும்.

தொடர்ச்சி 17ம் பக்கம்

# “தாம் வாழும் சமூகத்தின் மீது அக்கறை கொண்டவர்களே இலக்கியவாதிகளாக பிரகாசிக்கின்றார்கள்”

### கனடாவில் கவிஞர் ‘ஆரணி’ யின் நினைவிடைத்தோய்தல்’ வெளியீட்டு விழாவில் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி புகழாரம்

”தாம் வாழும் சமூகத்தின் மீது அக்கறை கொண்டவர்களே இலக்கியவாதிகளாக பிரகாசிக்கின்றார்கள். அத்துடன் அவர்கள் சமூகத்தின் அங்கமாக விளங்கும் மாந்தர், அரசு மற்றும் அமைப்புக்கள் ஆகியவற்றை நாடி பிடித்துப் பார்த்து தமது அவதானிப்பை கவிதை போன்ற இலக்கிய வடிவங்களின் மூலம் வெளிக்கொண்டுவந்து பிரச்சனைகளுக்கான தீர்வையும் தேடுகின்றவர்களாக விளங்குகின்றார்கள். இந்த வகையில் இலக்கியவாதிகள் கூட ஒரு சமூக வைத்தியர்கள் என்ற முடிவிற்கு நாம் வரலாம் இவ்வாறு கடந்த 14-09-2024 சனிக்கிழமையன்று மாலை கனடா மார்க்கம் நகரில் உள்ள அரச சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற யாழ்ப்பாணம் முன்னாள் அரசாங்க அதிபரும் கவிஞர் “ஆரணி“ என்னும் புனைபெயரைக் கொண்டவருமான அம்பலவாணர் சிவபாலசுந்தரனின் “நினைவிடைத்தோய்தல்“ கவிதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி புகழாரம் சூட்டினார்.

தொடர்ச்சி 18ம் பக்கம்



தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிராம்ரனிலும் அமைந்துள்ள எமது அடைவு மாளிகையை நாடுங்கள்.
107 Dundas St, East (2nd flr) Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524


SEP
22
5:00 PM
அன்புநெறி
Anpuneri
Humanitarian Relief Organization. No: 1824730
பெருமையுடன் வழங்கும்
FIVE STAR
PLASTICS GROUP CORP.
111 Vinyl Court, Woodbridge
905-265-7530
www.fivestarplastic.com
HOMELIFE
Killi Chelliah BSc. Eng
SALES REPRESENTATIVE
416.624.7562
மன்னாரில் அமையவிருக்கும் மாற்றுத்திறனாளிகளின்
மேம்பாட்டுக்கான பல்நோக்கு மைய நிர்மாணிப்பு நிதிக்காக
2024
நாத சங்கமம்
BY N.S.WAGESHAN
ARMENIAN COMMUNITY CENTER
50 HALLCROWN PL,
NORTH YORK, ON M2J 1P6
TICKETS
VIP | $100 | $50
647-800-8724
Lucvaa
KITCHENS
www.Lucvaa.com
நந்தா உணவகம்
NANTHA TAKEOUT & CATERING
Best Caters in Town
416 - 626 - 8421
B W K
BRIGHT WOOD KITCHEN & FLOORING
Dream of your style
416-321-2844
brightwoodkitchen.ca
380 Tapscott Road Unit-1 Scarborough-ON,
CCI
Chemicheck Inc.
Thas Thambirajah
Director of Operations
Tel: 416 335 0666
Fax: 416 900 1091
10 Thornmount.Scarborough
Toronto, ON M1B 3J4
YA Smiles
Dental Clinic
Call Us: (905) 554-5524
7475 McCowan Rd, Markham, L3S 3J6
www.yasmiles.ca
GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance
Best Compliments
From
Sinnadurai Jeyakumar
BIDDINGTON
Building Quality for Generations™
Gobal Mailwaganam
1962 Yonge Street Suite 200
Toronto, Ontario M4S 1Z4
ARS
construction
INTERLOCKING, DECK, FENCE, ASPHALT PAVING
(647) 861-1979
North America's #1 Dosa Corner
Yarl
DOSA
corner
Dine-in | Take-out Catering | Book us for ALL your events!

Canada
We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | உதயன் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign)
JOURNALISTS: Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# "சுயநலன்" கொண்ட "தமிழரசு" தலைவர்களின் துரோகமும் தலை நிமிர்ந்து நிற்கும் நமது "தமிழ் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரனும்!

தமிழ்ப் பொது வேட்பாளரை எமது தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்கள் மத்தியிலிருந்து தேர்ந்தெடுக்கும் முயற்சியில் ஆரம்பத்தில் பல சவால்களும் சங்கடங்களும் நிறைந்து காணப்பட்டாலும் அந்த முயற்சியில் கடுமையாக உழைத்தவர்களின் தொடர் முன்னெடுப்புகளுக்கு பயனளிக்கும் வகையில் அந்த தேசிய ரீதியிலான வாக்குப் போட்டிக்கு எமது தமிழர் தரப்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர் அரியநேத்திரன் அவர்கள் அனைவரின் புன்னகையோடு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒருவராக வலம் வந்தவண்ணம் 21ம் திகதிய வாக்கெடுப்பு தன்னை தயார்படுத்திய வண்ணம் பிரச்சாரங்களில் ஈடுபட்டு வருகின்றார்.

எமது தமிழ்ப் பொதுவேட்பாளர் பா. அரியநேத்திரன் அவர்கள் ஈழத்தமிழர்களாலும் புலம் பெயர் தமிழர்களாலும் முழுமனதோடு வரவேற்பைப் பெற்றுள்ளார். அவருக்கான பிரச்சாரக் கூட்டங்கள் மற்றும் வீடு வீடாகச் சென்று மக்களிடம் ஆதரவு கேட்பது போன்ற தேர்தல் பணிகள் சிறப்பாக இடம்பெற்று வருவதைக் காண "தமிழ்ப் பொது வேட்பாளர் தெரிவு" என்னும் உயரிய நோக்கங்கள் கொண்ட "சிந்தனையின்" வெற்றியை எமது இனம் எட்டி விட்டதாகவே பார்க்க வேண்டியுள்ளது. சற்று ஆறுதல் அடையவும் செய்கின்றது.

இவ்வாறான நிலையில் . எமது தமிழ்ப் பொது வேட்பாளருக்கு எதிரான கோசங்கள் ஆங்காங்கே எழுந்தவண்ணம் உள்ளன. அது தமிழர் தரப்பிலிருந்து தான். அதற்கு மேலாக நாம் வெட்கப்பட்டு தலைகுனிந்து நடக்க வேண்டிய வகையில் "எமது தமிழ்ப் பொது வேட்பாளர்" எந்தக் கட்சியைச் சேர்ந்தவரோ அந்த தமிழரசுக் கட்சியிலிருந்தே பாரிய எதிர்ப்புக்கள் தோன்றி எழுந்த வண்ணம் உள்ளன. நாளுக்கு நாள் புதிய புதிய தந்திரமான வார்த்தைகளோடு தமிழரசுக் கட்சியினால் "மோசமான" விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

மறு பக்கத்தில் தென்னிலங்கை வேட்பாளர்கள் மத்தியிலிருந்து கூட விமர்சனங்கள் பெருமளவில் வெளிவராத நிலையில் தமிழரசுக் கட்சியின் சுமந்திரன்- கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா- அவரது புதல்வர்- மற்றும் சி. வி. கே. சிவஞானம் உட்பட சுமந்திரனின் ஏவல் நாய்களாகத் திரியும் பலரும் தென்னிலங்கை வேட்பாளருக்கு ஆதரவு தேடும் கபடத்தனத்தில் ஈடுபட்டு கொண்டு எமது தமிழ்ப்பொது வேட்பாளரையும் வையும் செயலையும் மேற்கொண்டு வருகின்றார்கள். எமது தமிழ்ப் பொது வேட்பாளரின் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளதாகவும் சுமந்த்திரன் "எச்சரித்து வருவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

இவர்களுக்கு எதிர்காலத்தில் எமது மக்கள் தகுந்த பாடத்தை புகட்ட வேண்டும் என்பதையும் நாம் இந்த பக்கத்தில் எழுதி வைக்க விரும்புகின்றோம்.

மற்றொரு பக்கத்தில் எமது தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் உள்ள தமிழர் அமைப்புக்கள் தமிழ்ப்பொது வேட்பாளருக்கு தங்கள் இதயபூர்வமான ஆதரவை வழங்கி நிற்கையில், கனடாவிலும் ஏனைய சில நாடுகளிலும் உள்ள தமிழரசுக் கட்சியின் கிளைகைள் பல சுமந்திரன் போன்றவர்களின் பாதகமான செயற்பாடுகளினால் மேற்படி கட்சிக் கிளைகளிலும் பிளவுகளை ஏற்படுத்தி வருகின்றனர். இந்த வகையில் கனடாவிலுள்ள தமிழரசுக் கட்சிக்கிளையினரும் "சுமந்திரன்" வழியில் பாதாளத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

எவ்வாறாயினும். கனடாவிலும் தாயக மண்ணிலும் ஏன்கொழும்பு நகரிலும் கூட தமிழ்ப் பொது வேட்பாளருக்கு நிலையான ஆதரவு இருந்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. சில நாட்களுக்கு முன்னர் கனடாவில் நடைபெற்ற தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவு தேடும் கூட்டமொன்றில் உ ரையாற்றிய ஒரு அரசியல் செயற்பாட்டாளரின் கருத்துக்கள் தற்போது உலகெங்கும் உள்ள அரசியல் ஆர்வலர்களைச் சென்றடைந்துள்ளது.

" தமிழ் பொதுவேட்பாளர்" என்னும் எழுச்சிக்கு ஆதரவு வழங்கும் கூட்டத்தில் உரையாற்றிய் ராஜா யோகராஜா அழுத்தமாகவும் தெளிவாகவும் தன் கருத்துக்களை முன்வைத்து உரையாற்றினார்.

"கடந்த பல வருடங்களாக இலங்கை அரசியலிலும் தமிழர் அரசியலிலும் பல கூறுகளாக பிரிந்து நின்ற எமது தமிழினம் ஒரு தேசமாக எழுந்த நின்று இணைந்து குரல் எழுப்பும் வாய்ப்பை " தமிழ் பொதுவேட்பாளர்" என்னும் எழுச்சி ஏற்படுத்தியுள்ளது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இந்த முயற்சி ஒரு சாதாரணமான விடயமல்ல. தமிழ் மக்களாகிய எமது எதிர்காலத்தை தீர்மானிக்கவும் திட்டங்களைத் தயாரிக்கவும் ஏற்ற ஒரு ஆரம்பப் புள்ளியாகவே நாம் இந்த " தமிழ் பொதுவேட்பாளர்" என்னும் முக்கிய கருப்பொருளைக் கருத வேண்டும்.

கடந்த காலங்களில் பல்வேறு கட்சிகள்.போராளி இயக்கங்கள் மற்றும் அமைப்புக்கள் என பிரிந்து நின்ற தமிழ் மக்களாகிய நாம் இந்த அவசியமான தருணத்தில் " தமிழ் பொதுவேட்பாளர்" என்னும் கருத்தியலின் அடிப்படையில் ஒன்றுபட்டுள்ளோம். இந்த ஒற்றுமையையும் இணைவையும் நாம் இழந்து விடக்கூடாது. அதைக் கட்டிக் காக்க வேண்டும்.

எமக்கான ஒரு பொது வேட்பாளரை தெரிவு செய்த பணியானது ஒரு சாதாரணமான ஒன்றாக இருக்கவில்லை என்பதை இந்த மண்டபத்தில் அமர்ந்திருப்பவர்கள் அனைவரும் அறிவார்கள்.சுமார் எட்டு மாதங்கள் பல கலந்துரையாடல்களை நடத்திய பல சவால்களைச் சந்தித்தே இந்த முடிவு எடுக்கப்பட்டது. அதன் பின்னரே தமிழ்ப் பொது வேட்பாளரை தெரிவு செய்யும் கட்டம் வந்தது. அதுவும் இலகுவானதாக இருக்கவில்லை. எனவே மிகவும் சிரமங்களையும் சவால்களையும் சந்தித்து முடிவு எடுக்கப்பட்ட " தமிழ் பொதுவேட்பாளர்" என்னும் கருத்தியல் அழிக்கப்பட்டோ அன்றி ஒதுக்கப்பட்டோ போய்விடக்கூடாது. நாம் அனைவரும் ஒன்று பட்டு இந்த கருத்தையும் எழுச்சியையும் பயன்படுத்த வேண்டும். எமது தமிழ்ப் பொது வேட்பாளர் போட்டியிடுவதன் நோக்கம் நிறைவேறு ஒன்றாகவும் ஒரு தேசமாகவும் இயங்குவோம் என்ற வார்த்தைகளோடு, இம்மாத தேசக்குரலை நிறைவு செய்து மீண்டும் எமக்கு சாதகமான செய்திகளோடு இனிவரும் மாதத்தில் சந்திப்போம்.!

**DZ Driver Wanted**
GTA and surrounding area
Call Nathan: 416-520-1324
or Email
Sentax72@gmail.com

**Kitchen Jobs in Markham**
Looking for part-time kitchen helper, Dishwasher and delivery.
Also needed, South Indian cook and continental breakfast
Line Cook Part Time.
**2800/14th avenue and woodbine Markham**
**Call AMAR: (416) 988-9518**

**CAR RECONDITIONING GARAGE IN WHITEHORSE, YUKON FOR SALE OR LEASE.**
**Owner has it for 35 years but as he is too old (83 years) he wants to retire. Need minimum 300,000- to run it.**
**For details contact Rajah : (647) 923-8750.**






இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வடக்கின் இரண்டு ஏற்றுமதி செயலாக்க வலயங்கள் இன்று அங்குரார்ப்பணம்!

வடக்கு மாகாணத்தில் ஸ்தாபிக்க திட்டமிடப்பட்டுள்ள மூன்று ஏற்றுமதி செயலாக்க வலயங்களில் இரண்டு வலயங்கள் அன்று (13-09-2024) உத்தியோகபூர்வமாக பெயரிடப்பட்டன.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை மற்றும் கிளிநொச்சி பரந்தன் ஆகிய ஏற்றுமதி செயலாக்க வலயங்கள் 13-09-2024 அன்று பெயரிடப்பட்டன.



இந் நிகழ்வுகளில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ். எம். சார்ள்ஸ் அவர்களும், முதலீட்டு ஊகுவிப்பு அமைச்சர் திலும் அமுனுகம அவர்களும், முதலீட்டு பிரதிநிதிகளும் கலந்துக்கொண்டு கொண்டனர்.

இரண்டு ஏற்றுமதி செயலாக்க வலயங்களிலும் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

# தமிழ் பொதுவேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து இலங்கை தமிழரசு கட்சியினரால் பிரசார பணிகள் முன்னெடுப்பு!





தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிக்கிளையினரால் பிரசார பணிகள் 16-09-2024 அன்று காலை முதல் முன்னெடுக்கப்பட்டது.

இதனடிப்படையில் வட்டுக்கோட்டை, சங்கானை, பண்டத்தரிப்பு, காரைநகர், மாதகல் உட்பட்ட பகுதிகளில் பிரசார பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்பொழுது இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிகிளை தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன், இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிகிளை மகளிர் அணி, இளைஞர் அணியினர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, வட்டுக்கோட்டை மூளாய் வேரம் பகுதியில் செவ்வாய்க்கிழமை தொகுதிக்கிளையின் பிரசாரகூட்டம் இடம்பெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.



# யாழ்ப்பாணம் வடமராட்சி மண்ணிற்கு ஆதரவு வேண்டி வந்த தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன்!



தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரன் வடமராட்சி மண்ணிற்கு 16-09-2024 அன்றைய தினம் திங்கட்கிழமை விஜயம் செய்து தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களது இல்லம் அமைந்திருந்த இடத்திற்கு சென்று பார்வையிட்டதை தொடர்ந்து பரப்புரைக்கூட்டத்திலும் பங்கேற்றிருந்தார்.

வடமராட்சிக்கு விஜயம் செய்த தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு வல்வெட்டித்துறையில் சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது. வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோவிலுக்கு சென்று வழிபாட்டினை மேற்கொண்ட பா.அரியநேத்திரனுக்கு ஆலய பிரதம குரு ஆசிகளை வழங்கியிருந்தார். அங்கிருந்து வல்வெட்டித்துறை ஆலடிப்பகுதி எம்.ஜி.ஆர். சதுக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள தியாக தீபம் நினைவிடத்திற்கு சென்று தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்திற்கு மரியாதை செலுத்தியதுடன் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். திருவுருவச் சிலைக்கும் மரியாதை செலுத்தியிருந்தார்.

தொண்டைமானாறு அம்மா மணிமண்டபத்தில் தமிழ் மக்கள் கூட்டணியின் அமைப்பாளரும் வல்வெட்டித்துறை நகரசபையின் முன்னாள் தலைவருமான செல்வேந்திரா தலைமையில் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்திலும் பா.அரியநேத்திரன் கலந்துக்கொண்டிருந்தார்.

இதன்போது, தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் நீதி யரசர் க.வி. விக்னேஸ்வரன், பொருளார் பேராசிரியர் வி.பி. சிவநாதன், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ் மக்கள் கூட்டணியின் அமைப்பாளர்களான த.சிற்பரன், வி.மணிவண்ணன் உள்ளிட்ட பொதுமக்கள் பலர் பங்கேற்றிருந்தனர்.

# பானி விஜேசிறிவர்தன — யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கு முன்பிருந்து பேசுகின்றார்

## "நான் இலங்கையில் 2024 ஜனாதிபதித் தேர்தலின் சோசலிச சமத்துவக் கட்சியின் வேட்பாளர் பாணி விஜேசிறிவர்தன"

16-09-2024 அன்று யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கு முன்பாக இருந்து உரையாற்றுகிறேன். 1981 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி, அப்போது இலங்கையை ஆண்ட ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன அரசாங்கத்தின், அல்லது ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த குண்டர்கள் குழு, யாழ்ப்பாண நகருக்கு வந்து இந்த நூலகத்தை முற்றாக எரித்தது.

இந்த நூலகத்தில் உலகில் எங்கும் கிடைக்காத பல்லாயிரக்கணக்கான அரிய நூல்கள் இருந்தன. அந்த தீ மூட்டலினால் ஒட்டுமொத்த மனித சமுதாயமும், குறிப்பாக தமிழ் மக்களும், தங்களது கடந்த கால கலாச்சார பாரம்பரியத்தின் மிகவும் மதிப்புமிக்க பகுதியை இழந்தனர். இந்த நூலகத்தை எரித்த பின்னர், இந்த கும்பல் நகரத்தில் தாக்குதல் நடத்தியதுடன், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் அலுவலகத்தையும் எரித்தது.

அதன்பிறகு நகருக்குள் சுற்றித் திரிந்த குண்டர் கும்பல், தமிழ் மக்களின் கலாச்சாரம் சார்ந்த ஏராளமான நினைவுச் சின்னங்களை அழித்தது. இந்தக் குண்டர் நடவடிக்கையின் பின்னணியில் உள்ள வரலாற்று உண்மைகளைப் பற்றி நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த தீ மூட்டல் 1981 இல் நடந்தாலும், அதன் வரலாறு பல தசாப்தங்களுக்கு முந்தையதாகும். 1948 ஆம் ஆண்டில், இலங்கை என்ற இந்த முதலாளித்துவ அரசு ஸ்தாபிக்கப்பட்ட போதே, தமிழ் மக்களுக்கு பாரபட்சம் காட்டுகின்ற, அவர்களின் ஜனநாயக உரிமைகளை ஒடுக்குகின்ற ஒரு பலாத்கார ஒற்றையாட்சி அரசாகவே நிறுவப்பட்டது.

இலங்கையின் கொழும்பை ஆட்சி செய்த ஒவ்வொரு அரசாங்கமும், தொழிலாள வர்க்கத்தை பிளவுபடுத்த, தமிழர் விரோத இனவாதத்தை தொடர்ந்து பயன்படுத்தி வந்தன. 1977ல் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன, 1978 இல், நிறைவேற்று ஜனாதிபதி முறையை அறிமுகப்படுத்தினார். 1979ல் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்ற கொடூர சட்டம் கொண்டுவரப்பட்டது.

இவற்றுக்குப் பின்னால் இருந்தது என்ன?

குறிப்பாக ஜே.ஆர். ஜயவர்தனவின் அரசாங்கம், இலங்கையின் பொருளாதாரத்தை உலகமயமாக்கப்பட்ட பொருளாதாரத்துடன் இணைக்க விரும்பியது. சுதந்திர சந்தை எனப்படும் கொள்கையை இலங்கையில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்தது. இந்தக் கொள்கைக்கு எதிராக, தொழிலாள வர்க்கத்தின் மத்தியில் இருந்து எழுந்த பாரிய போராட்டமாக, 1980 வேலை நிறுத்தத்தை நாம் கருதலாம். அந்த வேலை நிறுத்தம் தலைதூக்கிய உடன்தான், 1981ல், இந்த நூலகத்திற்கு தீ வைக்க குண்டர் கும்பலை இந்த யாழ்ப்பாண நகருக்கு அனுப்பினர்.

அப்போது நடைபெறவிருந்த மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில், தமிழ் மக்களை வாக்களிக்க விடாமல் தடுத்து, அவர்களை அச்சுறுத்தி, அந்தத் தேர்தலில் அனுகூலத்தை தமக்குத் தாமே பெற்றுக் கொள்வதற்காகவே குண்டர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஆனால், 1981 ஆம் ஆண்டு தீ வைப்பில் ஆரம்பிக்கப்பட்ட இந்த தமிழர் விரோத இனவாதப் பிரச்சாரம், புதிய வழியில் முன்னெடுத்துச் செல்லப்பட்டு, 26 வருடங்களாக இலங்கையை மூழ்கடித்த பாரிய அழிவை ஏற்படுத்திய உள்நாட்டு யுத்தத்தை 1983 ஆம் ஆண்டு தொடங்குவதற்கு ஜே.ஆர். ஜயவர்த்தன அரசாங்கத்தை முன்நகர்த்தினார்.

இப்போது மீண்டும், முழு உலகப் பொருளாதாரமும் நெருக்கடியில் சிக்கியுள்ள சூழ்நிலையில், இலங்கையின் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம், சர்வதேச நாணய நிதியத்தின் கட்டளைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம், தொழிலாள வர்க்கத்துக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் எதிராக, பாரிய தாக்குதலைத் தொடுத்துள்ளது. இந்த நிலையில், தொழிலாள வர்க்கத்தின் போராட்டங்கள் மிகப் பெரிய அளவில் வளர்ச்சியடைகின்ற சூழ்நிலையில், தமிழர் விரோத இனவாதத்தை கிளரிவிட வேண்டிய தேவை சிங்களப் பேரினவாதிகளுக்கு உள்ளது.

எனவே, உழைக்கும் வர்க்கத்தை பிளவுபடுத்தும் இந்த தமிழர் விரோத இனவாதப் பிரச்சாரத்திற்கு எதிராக, சிங்களம் பேசும் தொழிலாள வர்க்கமும், அதே போல் தமிழ் பேசும் தொழிலாள வர்க்கமும் ஒன்றுபட்டு, யாழ்ப்பாணத்தில், வடகிழக்கு மாகாணத்தில் தமிழ் முதலாளித்துவக் கட்சிகளால் தூக்கிப் பிடிக்கப்படும் தமிழ் தேசியவாதத்திற்கு எதிராக, அதே போல் சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு எதிராக சோசலிசக் கொள்கைகளின் அடிப்படையில் ஸ்ரீலங்கா-ஈழம் சோசலிசக் குடியரசைக் கட்டியெழுப்ப வேண்டும், என நாம் உழைக்கும் மக்களுக்கு மிகத் தெளிவாக வலியுறுத்துகிறோம். அதை இந்திய துணைக் கண்ட சோசலிச குடியரசுகளின் ஒன்றியமாகவும், உலக சோசலிசக் குடியரசுகளின் ஒரு பகுதியாகவும் ஸ்தாபிப்பதற்கு, சோசலிச சமத்துவக் கட்சி முன்வைக்கும் வேலைத் திட்டத்துடன் இணைந்துகொள்ளுமாறு அனைத்து பொது மக்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

மிக்க நன்றி.

Best regards,
WSWS group

'Life is beautiful. Let the future generations cleanse it of all evil, oppression, and violence, and enjoy it to the full'.
*-Leon Trotsky-*



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கிருஷாந்தி குமாரசுவாமி நினைவேந்தலில் கொழும்பு மனித புதைகுழிக்கு நீதிக்கான கோரிக்கை விடுக்கப்பட்டது



இரண்டு மாதங்களுக்கு முன்னர், கொழும்பில் உள்ள உயர் பாதுகாப்பு வலயத்தின் துறைமுகப் பகுதியில் தற்செயலாக எலும்புக்கூடு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதோடு, அது பாரிய மனித புதைகுழி என்பதற்கான ஆதாரம் தற்போது வெளிவந்துள்ளது.

கொழும்பு பிரதான நீதவான் பண்டார இலங்கசிங்கவின் உத்தரவின் பேரில் தொல்பொருள் பேராசிரியர் ராஜ் சோமதேவ மற்றும் நிபுணத்துவ சட்ட வைத்திய அதிகாரி சுனில் ஹேவகே ஆகியோர் தலைமையில் செப்டெம்பர் மாதம் 5 ஆம் திகதி முதல் அகழ்வு பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இருபத்தெட்டு வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் மாணவி ஒருவர் இலங்கை இராணுவத்தினரால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு கொல்லப்பட்டதுடன், செம்மணி நினைவுத் தூபிக்கு முன்பாக வார இறுதியில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் அப்பகுதி சிவில் சமூக ஆர்வலர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

கிருஷாந்தி குமாரசுவாமி

சுண்டிக்குளி மகாவித்தியாலய மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி, 1996ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 6ஆம் திகதி உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிவிட்டு வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தபோது, செம்மணி சோதனைச் சாவடியில் இராணுவத்தினரால் வலுக்கட்டாயமாகத் தடுத்து வைக்கப்பட்டு, கூட்டுப் பாலியல் துஷ்பிரயோகம் செய்து புதைக்கப்பட்டார்.

அவரது தாமதத்தால் பதற்றமடைந்த அவரது தாயார் ராசம்மா குமாரசாமி மற்றும் பிரணவன் குமாரசாமி குடும்ப நண்பரான சிதம்பரம் கிருபாமூர்த்தியுடன் செம்மணி சோதனைச் சாவடிக்குச் சென்று விசாரித்தனர்.

கிரிஷாந்தி பற்றிய எந்தத் தகவலும் தமக்குத் தெரியாது எனக் கூறிய சோதனைச் சாவடியின் படையினர், மூவரையும் ஒரு பதுங்கு குழிக்குள் அழைத்துச் சென்று வலுக்கட்டாயமாகத் தடுத்து வைத்திருந்தனர். அன்று இரவு இராணுவத்தினர் பிரணவன், கிருபாமூர்த்தி ஆகியோரை கயிற்றால் கழுத்தை நெரித்து, இருவரின் உடல்களையும் பாதுகாப்புச் சாவடிக்குப் பின்னால் புதைத்தனர். அவர்களின் ஆடைகளை தனியாக புதைத்தனர். இராசம்மாவையும் அதே வழியில் கொலை செய்த இராணுவத்தினர், உடலை சோதனைச் சாவடிக்குப் பின்னால் புதைத்தனர்.

கிரிஷாந்தி குமாரசுவாமி கூட்டு பாலிஸ் து்‘பிரயோகம் செய்யப்பட்டு கொல்லப்பட்டதாக அரசாங்கப் படைகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரிக்குமாறு அப்போதைய சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் சர்வதேச அழுத்தங்களுக்கு உள்ளாகியிருந்தது.

அதன் பின்னர், நான்கு சிவிலியன்கள் காணாமல் போனமை தொடர்பில் இராணுவ அதிகாரிகளுக்கு கிடைத்த அநாமதேய மனு மீதான விசாரணையைத் தொடர்ந்து, செம்மணி இராணுவ முகாமில் கடமையாற்றிய இராணுவத்தினர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். இதற்கமைய செம்மணி இராணுவ சோதனை சாவடி அருகே புதைக்கப்பட்ட நிலையில் நான்கு அழுகிய உடல்கள் மற்றும் ஆடைகள் கண்டெடுக்கப்பட்டன.

9 இராணுவ வீரர்கள் மீது 18 குற்றச்சாட்டுகளுடன் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்த பின்னர், உயர்நீதிமன்றத்தின் 3 நீதிபதிகள் கொண்ட குழு வழக்கை விசாரித்து, குற்றம் சாட்டப்பட்டவர்களின் வாக்குமூலம் மற்றும் பிற வாய்மொழி ஆதாரங்களின் அடிப்படையில் தீர்ப்பை வழங்கியது.

இந்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகக் காணப்பட்ட 5 இராணுவ வீரர்களான ராஜபக்ச தேவகே சோமரத்ன ராஜபக்ச, ஜே.எம்.ஜயசிங்க, ஜி.பி.பிரியதர்ஷன மற்றும் ஏ.எஸ்.பிரியஷாந்த பெரேரா ஆகியோருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட மற்ற மூன்று இராணுவ உறுப்பினர்களுக்கு இருபத்தைந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட 4 இராணுவத்தினர் விடுதலை செய்யப்பட்டனர்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரஞ்சித் அபேசூரிய மற்றும் சட்டத்தரணி ரஞ்சித் பெர்னாண்டோ மற்றும் பல சட்டத்தரணிகள் உயர் நீதிமன்றில் மேன்முறையீடு செய்திருந்த போதிலும், அதனை ஆராய்ந்த அப்போதைய உச்ச நீதிமன்ற நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்க தலைமையிலான ஐவர் அடங்கிய அமர்வு மேன்முறையீட்டு மனுவை நிராகரித்து, உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அமுல்படுத்த வேண்டும் என தீர்மானித்தார்.

செம்மணி வெகுஜன புதைகுழிகள்

கிரிஷாந்தி குமாரசுவாமி புதைக்கப்பட்ட பிரதேசத்தில் மேலும் நானூறு முதல் ஐந்நூறு சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளதாக லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ச தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

செம்மணியில் வெகுஜன புதைகுழி தோண்டப்பட்ட நேரத்தில், ஐந்து பேர் கொண்ட குழு 15 பாதுகாப்புப் படையினரை பொறுப்புக்கூறியதோடு நான்கு இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்பட்டனர்.

ஆனால் குழுவின் அறிக்கை வெளியிடப்படவில்லை. மாறாக 2000ஆம் ஆண்டு ஜூலை மாதம் சட்டமா அதிபர் அலுவலகத்தில் இருந்த அரசாங்கத்தின் சிரே்‘ட சட்டத்தரணி மொஹான் பீரிஸின் ஏற்பாட்டில் சந்தேக நபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

பின்னர் நான்கு பேரும் பதவி உயர்வு பெற்றனர். பின்னர் சட்டமா அதிபர் பதவிக்கு உயர்த்தப்பட்ட ஜனாதிபதி சட்டத்தரணி பீரிஸ், இலங்கைக்கு எதிராக மனித உரிமை குற்றச்சாட்டுக்கள் எழுந்த போரின் போது அரசாங்கத்தின் பிரதான சட்ட ஆலோசகராக இருந்தார். 2013 ஆம் ஆண்டு பிரதம நீதியரசர் பதவியில் இருந்து சர்ச்சைக்குரிய வகையில் பதவி நீக்கம் செய்யப்பட்ட ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு பதிலாக மொஹான் பீரிஸை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நியமித்தார். இன்று அவர் நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாக செயற்படுகின்றார்.




Dr. புஷ்பா வன்னித்தம்பி
பல் வைத்தியர்

Dr. Pushpa.V & Associates
Dentist

New Patients Welcome
Open 7 Days a week
Sunday by Appointment only

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்

Scarborough
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
416-289-7187

Markham
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
905-201-8900





# யாழ்ப்பாணத்தில் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில்!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

புு. கஜிந்தன்

யாழ்ப்பாணத்திற்கு இன்றைய 14ம் திகதி சனிக்கிழமை விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தல் பிரச்சார கூட்டத்தில் கலந்து கொண்டார்.

யாழ்ப்பாணம் நாவந்துறை சென் மேரிஸ் மைதானத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்தொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்த தலைமையில் நடைபெற்றது.





குறித்த பிரச்சாரக் கூட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் யாழ் மாநகர முன்னாள் மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா, முன்னாள் வடமாகாண எதிர்கட்சித் தலைவர் தவராஜா மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# சங்குக்கு வாக்களித்து தமிழர்களாக எமது ஒற்றுமையை உலகிற்கு உணர்த்துவோம்

## நெல்லியடி வாணிபர் கழகம் அழைப்பு

சங்குக்கு வாக்களித்து தமிழர்களாக எமது ஒற்றுமையை உலகிற்கு உணர்த்துவோம் என நெல்லியடி வாணிபர் கழகம் அழைப்பு! விடுத்துள்ளது.

தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரனுக்கு ஆதரவாக சங்கு சின்னத்துக்கு வாக்களித்து தமிழர்களாக எமது ஒற்றுமையை உலகிற்கு உணர்த்துவோம் என நெல்லியடி வாணிபர் கழகம் அழைப்பு விடுத்துள்ளது.

தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரனுக்கு ஆதரவாக நெல்லியடி வாணிபர் கழகத்தின் ஆதரவுடன் நெல்லியடி மத்திய சந்தைக்கு அருகாமையில் 13-09-2024 அன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு இரா.மயூதரன் தலைமையில் இடம்பெற்ற "நமக்காக நாம்" பரப்புரை கூட்டத்தின் போது இவ் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.







நெல்லியடி நகர் பகுதி வர்த்தகர்கள், அயல் பகுதி மக்களிடையே தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு ஆதரவாக சங்கு சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டிய அவசியம் குறித்து இடம்பெற்ற பரப்புரை கூட்டத்தில் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பை சேர்ந்த செல்வின் இரணியேஸ் மரியாம்பிள்ளை, நெல்லியடி வாணபர் கழக நிர்வாகிகள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது நெல்லியடி வாணிபர் கழகம் சார்பி ஆதரவு தெரிவித்து விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, தமிழர்களுக்காக இம்முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் பா.அரியநேத்திரனுக்கு ஆதரவாக சங்கு சின்னத்துக்கு வாக்களிப்பது தமிழர்களாகிய எமது கட்டாய கடமையாகும். சிதறுண்டு போயுள்ள நாம் ஓரணியில் ஒன்றுசேர்ந்து எமது ஒற்றுமையை உலகிற்கு காட்டுவதற்கு இந்த சந்தர்ப்பத்தினை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த அடிப்படையில் தமிழ்ப் பொது வேட்பாளராக போட்டியிடும் பா.அரியநேத்திரனுக்கு நெல்லியடி வாணிபர் கழகமாக எமது பூரண ஆதரவினை வழங்குவதற்கு நாம் தீர்மானித்துள்ளோம். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிக் கிளையும் அரியநேந்திரனுக்கு ஆதரவு!



இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிக் கிளையும் தமிழ் பொது வேட்பாளர் அரியனேந்திரன் அவர்களுக்கு ஆதரவளிப்பதாக தீர்மானத்தை எடுத்துள்ளது.

15-09-2024 அன்றையதினம் இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி கிளையின் கூட்டமானது, தொகுதிக் கிளையின் தலைவர் ஈஸ்வரபாதம் சரவணபவன் அவர்களது தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தமிழ்ப்பொது வேட்பாளர் குறித்தான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இந்நிலையில் ஜனாதிபதி தமிழ் பொது வேட்பாளரான அரியனேந்திரன் அவர்களுக்கு ஆதரவளிப்பதாக ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவளித்து பிரித்தானிய தமிழ் தேசிய அமைப்புக்களினால் ஊர்திப் பேரணி!



தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரனுக்கு ஆதரவளிக்கும் நோக்கத்துடன் பிரித்தானிய தமிழ் தேசிய அமைப்புக்களினால் ஊர்தி எழுச்சிப்பயணம் ஒன்று 15-09-2024 அன்றையதினம் நடத்தப்பட்டது.

குறித்த ஊர்தி எழுச்சிப்பயணமானது, "நாமும் இணைந்தால் பலமே" என்ற தொனிப்பொருளில் தியாக தீபம் திலீபன் நோன்பிருந்த ஆரம்ப நாளான அன்று (15-09-2024) முன்னெடுக்கப்பட்டது.





இந்தநிலையில், தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு கோரும் குறித்த பயணமானது பிரித்தானியாவில் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. இதேவேளை, "Roxeth recreation ground Ha2 8LF South Harrow" இப்பயணம் நிறைவடைந்தது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் பிரித்தானிய கிளையின் முக்கியஸ்தர் திரு.கேதீஸ்வரன் தலைமையில் இந்த பேரணி ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலை – குச்சவெளி பகுதியில்26 விகாரைகளை அமைப்பதாக சஜித் பிரேமதாசவே முன்மொழிந்துள்ளார்

## அம்பலப்படுத்திய ஸ்ரீகாந்தா!




திருகோணமலை - குச்சவெளி பகுதியில் சுமார் 26 விகாரைகளை அமைப்பதற்கான திட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவே முன்மொழிந்துள்ளார் என மூத்த சட்டத்தரணியான என்.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய பொதுகட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் பா.அரியநேத்திரனை ஆதரித்து 16-09-2024 அன்று மாலை யாழ். ஊர்காவற்துறை பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரை கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், "தமிழ் மக்களுக்காக சஜித் பிரேமதாச ஒருபோதும் குரல் எழுப்பியதில்லை. ஆனால், ஒரு மந்திரியாக அவர், 1000 விகாரைகள் அமைக்கப்படும் என கூறியுள்ளார்.

தமிழ் மண்ணில் 2009ஆம் ஆண்டுக்கு பிறகு நுாற்றுக்கணக்கான விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. குச்சவெளியில், 26 விகாரைகளுக்காக சுமார் 3887 ஏக்கர் நிலம், அதாவது ஒரு விகாரைக்கு கிட்டத்தட்ட 150 ஏக்கர் என்ற வகையில் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தை, இவ்வாறான ஒரு கருத்தை விதைத்தது சஜித் பிரேமதாச ஆகும்" என குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# வசந்தாதேவி இராஜகுமார்மாம்பழ உற்பத்தியில் இரண்டாம் கட்ட வெற்றி

## கல்முனை அஸ்-ஸுஹறா வித்தியாலய மாணவர்களை பாராட்டிய அதிபர்

(13-09-2024)

மாம்பழ அறுவடை இரண்டாம் கட்டமாக வெற்றி பெறுவதற்கு கல்முனை அஸ்-ஸுஹறா வித்தியாலய மாணவர்களின் நல்லொழுக்கம் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவமும் தான் காரணம் என கல்முனை அஸ்-ஸுஹறா வித்தியாலய அதிபர் எம்.எச்.எஸ்.ஆர்.மஜிதியா தெரிவித்தார்.

கல்முனை கமு/கமு/அஸ்-ஸுஹறா வித்தியாலயத்தில் மாம்பழ அறுவடை நிகழ்வு 13-09-2024 அன்று பாடசாலை அதிபர் அதிபர் எம்.எச்.எஸ்.ஆர்.மஜிதிய்யா தலைமையில் இரண்டாம் கட்டமாக சிறப்பாக பாடசாலை வளாகத்தில் நடைபெற்ற போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.





இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எஸ் சுஹதுல் நஜீம், கௌரவ அதிதியாக வலய கணக்காளர் வை. எம். ஹபிபுல்லாஹ், பாடசாலை ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் கலந்து சிறப்பித்தனர்.




இதன்போது சுமார் 100க்கும் அதிகமாக மாம்பழங்கள் அறுவடை என்பது மாணவர்களின் நல்லொழுக்கம் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவமும் தான் காரணம் மாணவர்களின் சுற்றாடல் சார் நடவடிக்கைகள் இந்த அறுவடை செயற்பாட்டில் தங்கி இருந்துள்ளது. ஒழுக்கம் உள்ள இடத்தில் தான் காய் கனிகள் பாதுகாப்பாக இருக்கும் என அதிபர் எம். எச்.எஸ்.ஆர்.மஜிதிய்யா குறிப்பிட்டார்.

மேலும் இப்பாடசாலையில் கடந்த 04.10.2023 அன்று முதல் கட்ட அறுவடை இடம்பெற்றிருந்ததுடன் இம்முறை இரண்டாம் கட்டத்தில் சுமார் 100க்கும் அதிகமாக அறுவடை செய்யப்பட்ட டொம் டேசி மாம்பழ இனங்கள் அதிதிகளால் உத்தியோகபூர்வமாக வெட்டப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தை வாக்குச்சாவடியாகப் பயன்படுத்த வேண்டாம்!



யாழ்ப்பாணத்தில் உள்ள நாவலர் மண்டபத்தை ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்குச்சாவடியாக பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்ளுமாறு கோரி சர்வதேச இந்து மத பீடத்தின் செயலாளர் இராமச்சந்திரக் குருக்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளருக்கு எழுத்து மூலமாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதாவது, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் என்ற உன்னத புருஷரைச் சைவத் தமிழ் உலகம் என்றும் நினைவில் கொள்ளும் வகையிலும் அவர் தம் கொள்கைகளை பேணும் நினைவாலயமாக ஆறுமுகநாவலர் கலாசார மண்டபம் உருவாக்கப்பட்டது.

பொதுச் செயற்பாடுகளுக்கும் பொதுச் சேவைகளுக்கும் இந்த மண்டபம் கடந்த காலங்களில் பயன்படுத்தப்பட்டுவந்த போதிலும் அதன் புனிதத் தன்மையைப் பேணவேண்டும் என்ற விடயம் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

நாவலர் கலாசார மண்டபம் உருவாக்கப்பட்டதற்கான நோக்கம், அங்கு புனிதம் பேண வேண்டிய கட்டாயம், ஆன்மிக ஸ்தலமாக குறித்த மண்டபம் போற்றப்பட வேண்டும்.

கடந்த காலத்து நிர்வாகங்களோடு முரண்பாடு காரணமாக நாவலர் கலாசார மண்டப வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது.

தற்போது, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அதிக கவனம் எடுத்து இந்த மண்டபத்தின் செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் நிலையில், தேர்தல் முதலான பொது விடயங்களில் கடமைக்கு அமர்த்தப்படுகின்றவர்களுக்கு இத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றுவதில் நிச்சயம் அசௌகரியம் ஏற்படும்.

இக்கலாசார மண்டபத்தின் புனிதத்தையும் சட்டதிட்ட நடைமுறைகளையும் விமர்சனத்திற்கு உள்ளாக்கும். எனவே, தயவுசெய்து இத்தகைய நிலைமையினைக் கருத்திற்கொண்டு இந்த மண்டபத்தை வாக்குச் சாவடியாகப் பயன்படுத்தும் செயற்பாட்டைத் தவிர்த்துக்கொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன் என குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தின் பிரதிகள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

THANA INSURANCE Inc.

Thana Insurance Inc

NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள் Sri Lanka News

# ஜனாதிபதி தேர்தலில் தேசிய ஜனநாயக கட்சி அனுராவுக்கு ஆதரவு வழங்க தீர்மானம்

## கட்சி தலைவர் நாரா அருண்காந் தெரிவிப்பு



தேசிய ஜனநாயக கட்சி இந்த ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அனுரகுமார திசாநாயக்காவிற்கு ஆதரவளிப்பதாக தீர்மானிதுள்ளதுடன் வெற்றிபெறும் அனுராவுக்கு தமிழ் மக்கள் வாக்களித்து அதரவு வழங்க வேண்டும் என கட்சியின் தலைவர் நாரா அருண்காந் தெரிவித்தார்.

கண்டியில் 16-09-2024 திங்கட்கிழமை இடம்பெற்ற தேசிய ஜனநாயக கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேசிய ஜனநாயக கட்சி கடந்த 6 வருடங்களாக மக்கள் மத்தியில் பணியபற்றிவருகின்றது இருந்தபோதும் இந்த நாட்டிலே ஊழல் அற்ற ஆட்சியை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த முறை மாற்றாக சிந்தித்து இந்த ஆதரவை தேசிய மக்கள் சக்திக்கு வழங்க தீர்மானித்தோம்.

கடந்த 4 தேர்தல்களை அவதானித்தால் 2005ம் ஆண்டு ஜனாதிபதியாக போட்டியிட்ட ரணிலை தோற்கடிக்க வேண்டும் என வடக்கு கிழக்கிலே மிகப் பெரும் குரல் எழுந்ததையடுத்து ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைந்ததுடன் மகிந்த ராஜபக்ஸ வெற்றி பெற்றார்.

அதனை தொடர்ந்து சரத் பொன்சேக்காவை ஜனாதிபதியாக்க வேண்டும் என சிறுபான்மை மக்கள் மீண்டும் ஒரு தவறான முடிவை எடுத்தனர். ஆனால் அந்த தேர்தலில் பொன்சேக்கா தோல்வி அடைந்தபோதும் மகிந்த ராஜபக்ஸ வெற்றி பெற்றார் ஆகவே தமிழ் மக்களின் வாக்குகள் இரண்டாவது முறையாக வீனடிக்கப்பட்டது.

மூன்றாவது முறை தேர்தலிலே தமிழ் மக்கள் ராஜபக்ஸ இனிமேல் தொடர்ந்து ஆட்சியல் இருப்பார்கள் என இன்னும் ஒரு தவறான முடிவெடுத்து முடிவேடுத்து அவருக்கு வாக்களித்தபோதும் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றார். இவ்வாறு தமிழ் மக்கள் எடுக்கின்ற தேர்தல் முடிவுகள் தமிழ் மக்களுக்கு பின்னடைவை ஏற்படுத்தி இருக்கின்றது காரணம் உணர்வு பூர்வமாக முடிவெடுத்தல் காரணமாக கடந்த 15 வருடமாக வாக்குகள் வீனடிக்கப்பட்டது.

எனவே உண்மையில் நாங்கள் உணர்வு பூர்வமாக அன்றி சிங்கள மக்கள் மத்தியில் இருக்கின்ற தேர்தல் அலை மற்றும் பெரும்பான்மை மக்கள் என்ன முடிவு எடுக்கின்றனர் என ஓரளவு ஊகித்து அதற்கு ஏற்றால் போல அறிவு பூர்வமாக முடிவெடுத்தோம் என்றால் யார் வெற்றி பெறுவார் என்று கணித்து அந்த வேட்பாளருக்கு எங்கள் ஆதரவை கொடுப்பதன் ஊடாக தமிழ் மக்களுடைய வள அபிவிருத்தி தேவைகளை அல்லது உரிமை சார்ந்த விடையங்களை வென்று எடுக்க கூடிய வாய்ப்பு இருக்கின்றது.

இருந்தபோதும் இன்று நாட்டிலே பல கட்சிகள் இரண்டாக உடைக்கப்பட்டுள்ளதுடன் கட்சிக்கு கட்சியில் தாவியுள்ளனர் எனவே இவ்வாறான சூழ்நிலையில் கட்சிகளின் வாக்குகள் உடைந்துள்ளது ஆனால் இந்த முறை பெரும்பான்மையான சிங்கள மக்கள் அனுரகுமார திசாநாயக்காவை ஆதரிப்பதாக நாடு முழுக்க அலை ஏற்பட்டுள்ளது அதுமட்டுமல்ல பல கட்சிகளுடன் பேச்சு நடாத்தியுள்ளோம் அதில் தேசிய மக்கள் மக்கள் சகத்தி நிறைவேற்று உறுப்பினர் லால்காந் மிகவும் நேர்மறையான கருத்தை தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு பின்னரும் பேச்சு வார்த்தை தொடர இருக்கின்றோம் எமது மக்களுக்கு ஊழல் அற்ற ஆட்சியை கொடுப்பதன் ஊடாக நாட்டின் பொருளாதார கலாச்சார பண்பாடு. அபிவிருத்தியை மேற்கொள்ள பலமாக அமையும் என்ற காரணத்துக்காக நாங்கள் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு வழங்க தீர்மானித்தோம். ஏனவே எமது மக்கள் மற்றும் ஆதரவாளர்கள் இந்து சம்மேளனம் அனுராவுக்கு ஆதரவு தெரிவித்து வாக்களிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

# பேரினவாதிகளுக்கு வாக்களித்து அவர்களை பலப்படுத்த தமிழர்கள் முன்வரமாட்டார்கள்

## முன்னாள் தவிசாளர் நிரோஸ்



இலங்கை பொருளாதார ரீதியில் திவாலானமைக்கு தமிழ் மக்கள் மீதான யுத்த செலவீனமும் இனவாதத்தினால் தமிழ் மக்களை நாட்டின் அபிவிருத்தியில் பயன்படுத்தத் தவறியமையுமே காரணம் என்ற உண்மையை ஏற்று சிந்திக்காத செயல்படாத பேரினவாதத் தலைவர்களை நோக்கி நாம் இனியும் வாக்களிக்க முடியாது என முன்னாள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் ரெலோவின் தலைமைக்குழு உறுப்பினருமான தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்.

அச்சுவேலி முரசொலி முன்றலில் இடம்பெற்ற தமிழ் பொது வேட்பாளரை முன்னிறுத்திய பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும், தமிழ் மக்களின் வாக்குகள் தமக்குத் தேவை என வெற்றிவாய்ப்புக்காக போட்டியீடுகின்ற வேட்பாளர்கள் முண்டியடிக்கின்றனர். அவர்கள் தமிழ் மக்களிடத்தில் வாக்குகளைக் கேட்கும் போது, கடந்த காலத்தில் தமது அரசியல் நீரோட்டத்தில் எந்தளவு தூரம் இனவாத அணுகுமுறைக்குள் இருந்தனர் என்பதை சிந்தித்து நாட்டின் தலைவராவதற்கு அந்தஸ்தற்றவர்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று வெற்றி வாய்ப்புள்ளவராகக் கருதப்படும் வேட்பாளர்கள் இலங்கை பொருளாதார ரீதியில் நாடு திவாலான நிலைக்குச் சென்ற போது சிங்கள மக்களிடத்தில் வெளிப்படையாகவே இந்த மோசமான நிலைமை அத்தனைக்கும் சொந்த தாய் நாட்டில் ஒரு தேசிய இனமான தமிழ் மக்கள் மீது அரச இயந்திரத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொடிய யுத்த செலவீனம் காரணம் என்பதை நாட்டிற்கு தெளிவு படுத்தவில்லை. சர்வதேசத்திடம் கடன் வாங்கச் சென்ற அரசு தமிழ் மக்கள் உலக அளவில் புலம்பெயர்வினால் பொருளாதார ரீதியில் முன்னிலையில் உள்ளனர் என்ற அடிப்படையில் அவர்களது முதலீடுகளையும் பங்களிப்பினையும் நாட்டிற்குள் கொண்டு வருவதற்கான உண்மையான முயற்சிகளை எடுக்கவில்லை. தமிழ் மக்கள் அங்கீகரிக்கத்தக்க அரசியல் தீர்வும் தமிழ் மக்களுக்கு போர் மற்றும் போருக்கு பின் முன்னான சூழ்நிலைகளில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு பொறுப்புக் கூறல் இடம்பெற்று இருக்குமாயின் நாங்கள் ஒட்டுமொத்த இலங்கையராக முன்னேறியிருப்போம். இவற்றுக்கு இந்த பேரினவாத பௌத்த சிங்கள மேலாதிக்கத்தில் இருக்கக் கூடிய சிங்கள வேட்பாளர்கள் தயாரில்லை. அந்நிலையில் நாம் அவர்களுக்கு வாக்களிக்க மாட்டோம். எமது பிரச்சினைகளை முன்னிறுத்தும் தமிழ் வேட்பாளருக்கே வாக்களிப்போம் என்பதில் உறுதியாக இருப்போம் என முன்னாள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத்தவிசாளரும் ரெலோ கட்சியின் தலைமைக்குழு உறுப்பினருமான தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்.

# சிங்களக் கட்சிகளை தாயகத்தில் அனுமதிப்பது ஆக்கிரமிப்புக்கு வழிவகுக்கும்

## அரசியல் ஆய்வாளர் சட்டத்தரணி சி.அ.யோதிலிங்கம்

சிங்களக் கட்சிகளை தாயகத்தில் அனுமதிப்பது ஆக்கிரமிப்புக்கு வழிவகுக்கும் என அரசியல் ஆய்வாளரும், சட்டத்தரணியும், சமூக விஞ்ஞான ஆயவு மைய்ய இயக்குநருமான சி.அ.யோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் சங்கு சின்னத்தில் போட்டியிடும் தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

சிங்கள வேட்பாளர்களுக்கு தமிழ் மக்கள் வாக்களிப்பது மூன்று பெரிய பாதிப்புகள் ஏற்படும். ஒன்று சிங்களக் கட்சிகள் தாயகத்தில் ஊடுருவும். இது காலப்போக்கில் ஆக்கிரமிப்புகளுக்கு வழிவகுக்கும். சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்படலாம். விகாரைகள் நல்லூரிலும் வரலாம். செல்வச் சந்நிதியிலும் வரலாம். வல்லிபுர கோவிலிலும் வரலாம். இரண்டாவது ஆக்கிரமிப்புகள் என்பது சிங்கள அரசாங்கங்களில் தீர்மானங்களல்ல. அது சிங்கள பௌத்த அரசின் தீர்மானம். எனவே யார் ஆட்சிக்கு வந்தாலும் ஆக்கிரமிப்புகள் தொடரும். இதற்கு ரணில் விக்ரமசிங்கவோ, சஜித் பிறேமதாசாவோ, விதிவிலக்காக இருக்கப் போவதில்லை. மூன்றாவது பொருளாதாரப் பிரச்சினையை காட்டி இனப் பிரச்சினையை நிலவிரிப்புக்குள் தள்ளும் முயற்சிக்கு நாமும் துணை நின்றவர்களாவோம் என அரசியல் ஆய்வாளரும் சட்டதரணிமான சி.அ.யோதிலிங்கம் குறிப்பிட்டார்.

தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேந்திரனுக்கு ஆதரவாக 15ம் திகதி குப்பிழான் தெற்கு அறிவொளி சனசமூக நிலைய முன்றலில் இடம்பெற்ற பிரச்சாரக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது, முன்னிலையில் உள்ள சிங்கள வேட்பாளர்கள் நால்வரும் தமிழ் மக்களின் நண்பர்களல்லர். நால்வருமே பெருந்தேசிய வாதத்தின் கூலிகள். ரணில் விக்கிரமசிங்க காலத்தில் தான் வெடுக்கு நாறிமலை, குருந்தூர் மலை, முல்லைதீவு நீராவியடிப் பிள்ளையார் கோவில், மயிலத்தமடு ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டன. அவற்றைத் தடுத்து என நிறுத்த அவர் முன்வரவில்லை. 13வது திருத்தத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இருக்கும் காணி, பொலிஸ் அதிகாரங்களைப் நடைமுறைப்படுத்தக்கூட தயங்குகின்றார் சஜித் பிறேமதாசா வடக்கு - கிழக்கில் ஆயிரம் விகாரைகளைக் கட்டுவேன் சூழுரைத்தவர். இனப்படுகொலை செய்த படைத்தளபதிகளை தனது கூடாரத்தில் வைத்திருப்பவர். நாமல் ராஜபக்சவைப் பற்றி சொல்லவே தேவையில்லை. இன அழிப்பின் நேரடிக் குற்றவாளி. இவர்களுக்கு எப்படித்தான் தமிழ் மக்கள் வாக்களிக்க முடியும்.

இவற்றிற்கு அப்பால் தமிழ் மக்கள் தங்களுக்கு என்ன தேவை என்பதை தொடர்ச்சியாக சொல்ல வேண்டியுள்ளது. தமிழ் மக்களை தேசமாகத் திரட்ட வேண்டியுள்ளது. தமிழ் மக்கள் தேசமாக திரளாமல் சிங்கள - பௌத்த ஆக்கிரமிப்புகளை கையாள முடியாது. சர்வதேச அரசியலையும் கையாள முடியாது.

தவிர ஆக்கிரமிப்பு செயற்பாடுகளை அம்பலப்படுத்தி ஆக்கிரமிப்புகளை நிறுத்துவதற்கு சர்வதேசப் பாதுகாப்பு பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டிய தேவையும் உள்ளது.

இவையெல்லாவற்றையும் சாத்தியப்படுத்த வேண்டுமென்றால் இத்தேர்தலைப் பயன்படுத்தி தமிழ் மக்கள் அனைவரையும் ஓரணியில் திரட்ட வேண்டும். உலகத்தமிழர்களை ஓரணியில் திரட்ட வேண்டும், உலக முற்போக்கு ஜனநாயகசக்திகளின் ஒன்று திரண்ட ஆதரவை பெற வேண்டும்.

இதற்கெல்லாம் முக்கிய நிபந்தனை தமிழ் மக்கள் தேசமாகத் திரள்வது தான். இதற்கான ஆரம்பப்புள்ளி தான் தமிழ் பொது வேட்பாளர். தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவளிப்பது தமிழ் மக்களின் தேசிய கடமை என குறிப்பிடப்பட்டுள்ளது.



# வடக்கு மாகாண ஆளுநர் அவர்களின் மனிதாபிமானப் பணி!



வடமாகாணத்தில் விவசாயத்தை வாழ்வாதாரமாக நம்பி காணப்படும் கிராமங்களில் மணலாறு என்ற கிராமமும் ஒன்றாகும். மகாவலி L வலயமாக இந்த பகுதி அடையாளப்படுத்தப்படுகிறது. இந்த கிராமத்திலுள்ள எதா வெட்டுனு வெவ வித்தியாலயத்தில் 382 மாணவர்கள் கல்வி பயில்வதுடன், 19 ஆசிரியர்கள் சேவையாற்றுகின்றனர்.

இந்த பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விடுதியில் நீர் விநியோக கட்டமைப்பு சீர்க்குழைந்தமையால் பல நாட்கள் விடுமுறையில் ஆசிரியர்கள் தங்களின் வீடுகளுக்கு செல்ல வேண்டி ஏற்பட்டது. இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடு பாதிக்கப்பட்டது. இந்த சிக்கல் நிலைமை தொடர்பில் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் கவனத்திற்கு கடந்த 12 ஆம் திகதி கொண்டுவரப்பட்டது. விடயங்கள் குறித்து ஆராய்ந்த கௌரவ ஆளுநர் அவர்கள் பாடசாலைக்கான நீர் பிரச்சினையை நிவர்த்தி செய்யுமாறு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்தார்.

இந்த பணிப்புரைக்கு அமைய விரைந்து செயற்பட்ட வடக்கு மாகாண கல்வி அமைச்சு, எதா வெட்டுனு வெவ வித்தியாலயத்தின் நீர் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு பெற்றுக் கொடுத்தது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# அம்பாறை மாவட்டத்தில் இதுவரை சுவரோட்டிகள் அகற்றப்படவில்லை

## தேர்தல் கண்காணிப்பு பவரல் அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் கந்தையா சத்தியநாதன்

கனகராசா சரவணன்

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை தொகுதியில் 2 முறைப்பாடும் கல்முனை தொகுதியில் 3 முறைப்பாடுகளும் பொத்துவில் தொகுதியில 3 முறைப்பாடுகளும் அம்பாறை தொகுதியில் இருந்து 3 முறைப்பாடுகள் உட்பட 11 முறைப்பாடுகள் இதுவரை கிடைத்துள்ளது அதேவேளை தேர்தல் பிரச்சாரம் நேற்று இரவு 12 மணிவரை முடிவுற்றாலும் மாவட்டத்தில் இரண்டுமணிவரை சில பிரச்சார கூட்டம் இடம்பெற்றுள்ளதுடன் சுவரொட்டிகள் அகற்றப்படாத நிலை காணப்படுகின்றது என தேர்தல் கண்காணிப்பு பவரல் அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் கந்தையா சத்தியநாதன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பெவஸ்ஒப் மீடியா கற்கை நிலையத்தில் 19-09-2024 அன்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாவட்டத்திலுள்ள 115 வாக்களிப்பு நிலையங்களில் 115 நிலைகொள் கண்காணிப்பாளர்களையும் 16 நடமாடும் கண்காணிப்பாளர்களையும் ஒரு தேர்தல் தொகுதிக்கு ஒருவாகன வீதம் 4 தொகுதியிலும் 4 வாகனங்களில் கண்காணிப்பில் ஈடுபடவுள்ளதுடன் வாக்கு கணக்கெடுப்பு நிலையத்தில் 10 கண்காணிப்பாளர்கள் கச்சேரியில் இருந்து வாக்கு எண்ண ஆரம்பிக்கும் போது இருந்து வாக்கு எண்ணிமுடியும்வரை கண்காணிப்பில் இருப்பார்கள்.

அதேவேளை இந்த முறை இரண்டாவது விருப்பு வாக்கு எண்ணவேண்டிய தேவை ஏற்படும் அப்படியாயின் 15 மணித்தியாலம் தங்கியிருந்து கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபடுவார்கள். அதேபோன்று நீண்டநாள் கண்காணிப்பாளர்கள் 4 பேர் நியமிக்கப்பட்டு அவர்கள் மறைமுகமாக கண்காணிப்பில் ஈடுபடுவார்கள் என்பதுடன் வேட்பாளர்களின் நிதி செலவு தொடர்பாக ஆராய்வதற்கு 3 பேரை நியமித்துள்ளோம்.

தேர்தல் பிரச்சாரம் நேற்று இரவு 12 மணிவரை முடிவுற்றாலும் மாவட்டத்தில் இரண்டுமணிவரை சில பிரச்சார கூட்டம் இடம்பெற்றுள்ளது இது தொடர்பாக தலைமைகாரியாலயத்துக்கு அறிவத்துள்ளோன் அதேபோன்று சுவரொட்டிகள் அகற்றப்படாதுள்ளது தொடர்பாக பிரதி பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்துள்ளேன்.

கடந்த ஜனாதிபதி தேர்தலை விட இந்த வருடம் குறைவான முறைப்பாடு கிடைத்துள்ளது தற்போதை தேர்தல் சட்ட விதிகளின்படி வாக்குசாவடிகளுக்குள் முகவர்கள், கண்காணிப்பாளர்கள் மற்றும் அந்த வாக்குசாவடிகளில் பணியாற்றும் பொலிசார், அதிகாரிகளஈ உத்தியோகத்தர்கள் மட்டும்தான் உள்நுழையமுடியும் என்றார்.

# ஜனாதிபதி தேர்தல் அமளிகளுக்கிடையில் இலங்கையில் கடந்த 48 மணித்தியாலயத்தில் வாகன விபத்துக்களில் சிக்கி 6 பேர் உயிரிழக்க ஒருவர் படுகாயம்கு 4 சாரதிகள் கைது

அம்பாறை காரைதீவு, கிளிநொச்சி, வெயாங்கொடை, கட்டுகஸ்தோட்டை, வவுனியா ஓமந்தை பிரதேசங்களில் கடந்த 24 மணித்தியாலயத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் 14 வயது சிறுமி ஒருவர் உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாகவும் 4 பேரை கைது செய்துள்ளதாக அந்தந்த பிரதேச பொலிசார் தெரிவித்தனர்.

அம்பாறை காரைதீவு பொலிஸ் பிரிவிலுள்ள மாவடிப்பள்ளியில் இருந்து சம்மாந்துறை நோக்கி பயணித்த தனியார் பேருந்து ஒன்றுடன் குறுக்கு வீதியில் இருந்து பிரதான வீதிக்கு சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்டன் 19-09-2024 அன்று வியாழக்கிழமை (19) மோதிய விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திய தந்தை படுகாயமடைந்ததுடன் அவரது 14 வயது மகளான சிறுமி உயிரிந்துள்ளதுடன் படுகாயமடைந்த தந்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்துடன் பஸ்வண்டி சாரதியை கைது செய்துள்ளனர்.

அதேவேளை கிளிநொச்சியில் கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சி செல்லும் வீதியின் பன்னங்கண்டி பாலத்திற்கு அருகாமையில் 19-09-2024 அன்று அதிகாலை வீதியால் சென்று கொண்டிருந்த இளைஞன் மீது டிப்பர் வாகனம் மோதிய விபத்தில் பன்னங்கண்டி பகுதியைச்சேர்ந்த அந்தோனி அல்பிரட்அனுஷன் என்ற இளைஞன் உயிரிழந்ததுடன் டிப்பர் சாரத்தியை கைது செய்துள்ளதாக கிளிநொச்சி பொலிசார் தெரிவித்தனர்.

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவிலுள்ள பன்றிக்கெய்தகுளம் பகுதியில் இருந்து வவுனியா நோக்கி மோட்டார் சைக்கிளில் சம்பவதினமான 18-09-2024 இரவு பிரயாணித்த மோட்டார் சைக்கிள் ஓமந்தை எாிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் வீதி ஓரத்தில் துவிச்சக்கரவண்டி ஒன்றுடன் நின்றிருந்வர் மீத மோதிய விபத்தில் மோட்டார் பிரயாணித்த ஓமந்தை பகுதியைச் சேலர்ந்த 46 மற்றும் 48 வயதுடைய இருவர் ஒயிரிழந்துள்ளதாக ஓமந்தை பொலிசார் தெரிவித்தனர்.

இதேவேளை வெயாங்கொடை மினுவாங்கொடை பிரதான வீதியில் 20 மையில்கல் பகுதியில் வீதியை குறுக்கறுத்த பெண் ஒருவர் மீது மொட்டார் சைக்கிள் ஒன்று மோதியதில் படுகாயமடைந்த வத்தகா வெயங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடைய பெண்ணை மினுவாங்கொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்துள்ளார் இதனையடுத்து மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றவரை பொலிசார் கைது செய்தனர்.

கண்டி-யாழ்ப்பாணம் ஏ-09 வீதியில் கட்டுகஸ்தோட்டை நகரில் பாதசாரி ஒருவர் மீது கார் மோதிய விபத்தில் 71 வயதுடைய முதியவர் ஒருவர் உயிரிழந்ததையடுத்து கார்சாரதியை கைது செய்துள்ளதாக கட்டுகஸ்தோட்டை பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த விபத்து இடம்பெற்ற பிரதேசங்களச் சேர்ந்த பொலிஸ் நிலைய பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.









# செப் – 21 இல் மௌனப் புரட்சிக்கு அணி திரள்வோம்

## யாழ் வடமராட்சி ஊடக இல்ல செயலாளர் இரா மயூதரன் அழைப்பு!

இலங்கை செய்திகள் Sri Lanka News

**பு. கஜிந்தன்**

சிதறடிக்கப்பட்டுள்ள தமிழர்களை மீளவும் தமிழ்த் தேசியத்தின் வழியே தேசமாக ஒன்றிணைக்கும் தமிழ்ப் பொதுவேட்பாளர் முயற்சியானது தமிழர் ஒற்றுமையின் வாடிவாசலாகும். செப்டெம்பர் 21 ஆம் திகதி இடம்பெறப்போகும் மௌனப் புரட்சியில் விடுதலையின் விழுதுகளாக அணியமாவோம் என யாழ் வடமராட்சி ஊடக இல்ல செயலாளர் இரா மயூதரன் அழைப்பு விடுத்துள்ளது.

தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரித்து யாழ் வடமராட்சி ஊடக இல்ல செயலாளர் இரா.மயூரதன் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது, முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டதன் பின்னரான கடந்த 15 ஆண்டுகளில் தமிழர் போராட்ட வரலாற்றின் தாங்கு தூண்களாக விளங்கும் மாபெரும் மக்கள் சக்தியானது, நிலத்திலும் புலத்திலும், அமைப்புகளாகவும், குழுக்களாகவும், இயக்கங்களாகவும், கட்சிகளாகவும் சிதறடிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் தமிழர் ஒற்றுமை சிதைக்கப்பட்டு பிழைப்புவாத அரசியல் மேலாங்கிவருகிறது.

ஆயுதப் போராட்டத்தின் அதியுச்ச நிலையில், தமிழ்த் தேசிய அரசியல் தரப்புகள் ஒன்றிணைக்கப்பட்டு ஜனநாயக வழிமுறை போராட்டம் முகிழச் செய்யப்பட்டிருந்தது. தமிழர் விடுதலைப் போராட்டம் வீழ்த்தப்பட்டதற்கும் தமிழர்கள் இன்று பல கூறுகளாக சிதறடிக்கப்பட்டதற்கும் தமிழ்த் தேசிய அரசியல் தரப்புகளின் தமிழர் விரோத செயற்பாடுகளே மூலகாரணமாகும். அதுவே தமிழர் சிதைவுக்கும் காரணமாக அமைந்துள்ளது.

இவ்வாறு எண்ணற்ற சவால்களுக்குள்ளாக, தமிழர்கள் பல கூறுகளாக சிதறடிக்கப்பட்டு, தமிழ்ச் தேசிய நீக்கம் செய்யப்பட்டு சிங்கள பௌத்த பெருந்தேசியவாத்திற்குள் கரைந்துபோகும் பேராபத்து சூழ்ந்துள்ளது. இவ்வாறான நெருக்கடிமிக்கதான காலகட்டத்தில், நடைபெற உள்ள அரசு தலைவருக்கான தேர்தலை தமிழ்ப் பொதுவேட்பாளர் ஊடாக தமிழர்கள் எதிர்கொள்ளும் தீர்மானம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

எமது மரபுவழித்தாயக மண்ணிலே, நாம் நிம்மதியாக, கௌரவமாக, அந்நியரின் அதிகார ஆதிக்கமோ தலையீடுகளோ இன்றி, எமது வாழ்வை நாமே தீர்மானித்துக் கொள்ளும் இலக்கு நோக்கியதான பயணத்தில் நாம் தேசமாக ஒன்றிணைவது மிக மிக அவசர அவசியமாகும். அந்தவகையில் கடந்த 15 ஆண்டுகளில் தமிழர் பெரும்பரப்பில் நிகழ்ந்துவரும் அத்தனை எதிர்மறை விடையங்களையும் சீர்ப்படுத்தி தமிழ்த் தேசிய அரசியலை தமிழர் அபிலாசைகளின் வழியே நெறிப்படுத்தும் வகையில், தமிழர்கள் தேசமாக ஒன்றிணைவதற்கான வாடிவாசலாக தமிழ்ப் பொதுவேட்பாளர் முயற்சியை நாம் பார்க்கின்றோம்.

இவ்வாறான பின்னணியில், கட்சி அரசியல் கடந்து தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பாக ஒன்றிணைந்துள்ள சிவில் சமூகங்கள் என்ற வகையில் யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தினராகிய நாம் எமது ஆதரவுக் கரத்தை "சங்கு" எனும் அடையாளத்தை நோக்கி காட்டிநிற்கின்றோம்.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு எந்த நிலையிலும் எவ் வடிவிலேனும் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை தீர்வாக ஏற்றுக்கொள்ள நாம் தயாராக இல்லை. தமிழ் மக்களின் நியாயமான அரசியல் தீர்வாக சமஷ்டியையே தமிழ் மக்களாகிய நாம் கோரி நிற்கின்றோம். இதனையே யாழ் வடமராட்சி ஊடக இல்லமும் எதுவித சமரசத்திற்கும் இடமின்றி வலியுறுத்தி நிற்கின்றது.

இனவழிப்பு செய்யப்பட்ட இனமாக சர்வதேசத்திடம் நீதிகேட்டு எழுந்து நிற்கும் இனமாக அதனை வலுப்படுத்தும் வகையில் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு நாமும் எமது ஆதரவை வழங்கி நிற்கின்றோம்.

ஆகவே இவ் வரலாற்று சந்தர்ப்பத்தினை எமதாக்கும் வகையில், செப்டெம்பெர் 21 ஆம் திகதி தமிழ் மக்கள் அனைவரும் வாக்குச்சாவடிகளை நோக்கி அலைகடலெனத் திரண்டு "சங்கு" சின்னத்துக்கு நேராக ஒரே ஒரு புள்ளடியை மட்டும் இட்டு மௌனப் புரட்சியின் விழுதுகளாக அணியமாவோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய சோசலிசக் கட்சியின் சிறீதுங்க ஜயசூரிய தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழர்களுக்கு உச்ச பட்ச உரிமையை வழங்குவோம் என தெரிவித்துள்ளார்

## மூத்த போராளி இராகவன்




அரகலய போராட்டத்தின் பின்னர் தென்னிலங்கையில் இருந்து வெளிவரும் இனவாதக் கருத்துக்கள் குறைந்துள்ள நிலையில் தமிழ் பொது வேட்பாளரின் பின்னணியில் இருப்பவர்களே இனவாதத்தை கக்குவதாக குற்றஞ்சாட்டிய மூத்த போராளி இராகவன் தமிழ் பொது வேட்பாளர் என்பது கூட்டு முயற்சி அல்ல அது கூட்டு களவு என்றார்.

யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், தமிழ் பொது வேட்பாளர் தரப்பைச் சேர்ந்தவர்கள் குறுகிய நோக்கில் இனவாதத்தை பேசி தமது எதிர்கால அரசியலுக்கு திட்டமிடுகின்றனர்.

இன்று புலம்பெயர் நாடுகளில் செல்வ செழிப்போடு வாழ்பவர்கள் விடுதலைப் போராட்டத்திற்காக பணம் தாருங்கள் என புலம்பெயர் தமிழ் மக்களிடம் பணத்தைப் பெற்று அதனை கையகப்படுத்தி உள்ளனர்.

அவர்களுக்கு தமிழ் மக்களுடைய பிரச்சனை தீர்ந்து விடக்கூடாது என்பதில் அக்கறையாக உள்ளனர்.

ஏனெனில் பிரச்சனை தீர்ந்து விட்டால் நீதி திரட்ட முடியாது தாங்கள் நினைத்தது போல் வாழ முடியாது என்ற அச்சத்தின் காரணமாக தற்போது பொது வேட்பாளரை நிறுத்தி இனவாத கருத்துக்களை பரப்புகின்றனர்.

தமிழ் பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டதன் நோக்கம் ஆரம்பத்தில் சரியாக இருந்தாலும் பின்னர் புலம்பெயர் அமைப்புக்களின் வழிகாட்டலில் தவறான பாதையில் பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அதற்கான நிதியினை வழங்கும் புலம்பெயர் புலிகள் என தம்மை அடையாளப்படுத்தும் விடுதலைப் புலிகள் காலத்தில் பணத்தை பதுக்கிய கும்பல் தற்போது பொது வேட்பாளருக்கு நிதியை வழங்குவதாக அறிகிறோம்.

இவர்களது செயற்பாடுகளால் தெற்கில் குறைந்திருக்கும் இனவாதத்திற்கு உரம் போட்டுள்ளனர். தமிழ் பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டுள்ளார். இந்தியா உதவும், சர்வதேசம் வரப்போகுது, இதனால் தமிழீழம் வரப்போகிறது என சொல்லி தெற்கில் பூதாகரமாக காட்டப்படும்.

எனவே தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிப்பது என்பது தொடர்பில் சிந்தித்து செயற்பட வேண்டும். ஆனால் தமிழ் பொது வேட்பாளர் என்ற மாய மானுக்கு வாக்களிப்பது எதிர்காலத்தில் எமது தமிழ் மக்களின் அரசியல் பொருளாதார இருப்பை பாதிக்கும்.

தெற்கில் தமிழர்களுக்கு உச்ச பட்ச உரிமையை வழங்கும் வகையில் இம்முறை ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய சோசலிசக் கட்சியின் சிறீதுங்க ஜயசூரியவும் மக்கள் போராட்ட முன்னணியின் நுவான் போபகேவும் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளனர். அவர்களுக்கு வாக்களிப்பதன் மூலம் தேவையற்ற இனவாத கருத்துக்களை தவிர்க்க முடியும்.

தற்போதைய நிலையில் ரணிலோ சஜித்தோ அனுரவோ மூவரில் யார் வந்தாலும் தமிழர்கள் ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வுக்காக பேரம்பேசும் நிலைமை காணப்படுகின்றது.

தமிழ் பொது வேட்பாளர் என்பது கூட்டு முயற்சி என்பதை விட கூட்டு களவு என்றே சொல்லலாம். எந்தவொரு அரசியல் கட்சியும் தமது பணக்கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படையாக வைக்க வேண்டும்.

ஜனநாயகம் வெளிப்படைத் தன்மை என பேசுபவர்கள் அதனை செய்யவேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகள் அவ்வாறு செயற்பட முடியாது. அவர்கள் ஆயுத இயக்கம். மில்லியன் கணக்கில் ஆயுதம் வாங்கினோம் என கணக்கு காட்டமுடியாது. வெளிப்படையாக ஜனநாயக அரசியல் செய்பவர்கள் மற்றும் தமிழ் மக்களின் பிரச்சினையை சர்வதேசத்துக்கு காட்ட வேண்டும் என்பவர்கள் தமது கணக்கு விடயத்தில் பலவீனமாக இருக்கிறார்கள். அது பாரிய மோசடி என நான் நம்புகிறேன்.

விடுதலைப் புலிகள் இருக்கும்போது இலங்கை அரசாங்கத்தை வெல்வோம் என்ற நம்பிக்கை இருந்தது. சரி தவறுக்கு அப்பால் இராணுவ கட்டமைப்பை வைத்திருந்தனர்.

ஆனால் இவர்களுக்கு எதுவும் கிடையாது. விடுதலைப் புலிகளின் நிறங்களான சிவப்பு மஞ்சளை பயன்படுத்தி சிறுவர்கள் மற்றும் இளையோரை பயன்படுத்தி உணர்ச்சியை தூண்டி தற்கொலைக்கு அனுப்ப செயற்படுகிறார்கள் - என்றார்.

# அரசியல் அந்தகர்களே தமிழ்ப் பொதுவேட்பாளரை எதிர்க்கிறார்கள் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு



தமிழ்ப் பொதுவேட்பாளரைத் தென்னிலங்கை அரசியல்வாதிகள் எதிர்ப்பதன் காரணம் வெளிப்படையானது. சஜித் பிரேமதாச, ரணில் விக்கிரமசிங்க, அனுர குமார திசாநாயக்க ஆகியோருக்கிடையே மும்முனைப் போட்டி நிகழுகின்ற நிலையில் அவர்களுக்குத் தமிழ்ப் பொதுவேட்பாளர் இடையூறாக இருக்கிறார்.

ஆனால் தமிழ்த் தேசியம் பேசுகின்ற சிலரும் தமிழ்ப் பொதுவேட்பாளர் மீது வசைபாடுகின்றனர். யானை பார்த்த அந்தகர்களைப் போன்று, தமிழ்ப் பொதுவேட்பாளர் நிறுத்தப்பட்டிருப்பதன் தார்ப்பரியங்களை முழுமையாகப் புரிந்துகொள்ளாத அரசியல் அந்தகர்களாக இவர்கள் இருக்கிறார்கள் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரனை ஆதரித்து இணுவில் அண்ணா சனசமூகநிலைய முன்றலில் செவ்வாய்க்கிழமை (17.09.2024) இடம்பெற்ற பரப்புரைக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், தமிழ்ப் பொதுவேட்பாளர் இந்தியாவின் ஆலோசனையின் பேரில் நிறுத்தப்பட்டிருப்பதாக இந்த அரசியல் அந்தகர்கள் விமர்சிக்கின்றார்கள். எதற்கெடுத்தாலும் இந்தியாவைக் குற்றம் சாட்டும் மனோநிலையில் உள்ள அரசியல் அந்தகர்களின் விமர்சனமே இது. இதுவரையில் இந்தியா தமிழ்ப் பொதுவேட்பாளருக்குச் சாதகமான கருத்துகள் எதனையும் எங்கும் தெரிவித்திருக்கவில்லை. மாறாக, கொழும்பு அரசியலில் தலையீடு செய்ய விரும்பும் எந்தவொரு வெளிநாட்டு அரசியல் சக்திக்கும் பொதுவேட்பாளர் என்பவர் இடையூறாகவே அமைவார்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை வெல்ல வைப்பதற்காகவே நிறுத்தப்பட்டுள்ளார் என சஜித் பிரேமதாசாவுக்கு வாக்குக் கேட்டுத் திரியும் தமிழ் அரசியல் வாதிகள் விமர்சிக்கிறார்கள்.

ரணில் விக்கிரமசிங்காவுக்கு ஆதரவாகச் செயற்படுவதாயின் இந்த அரசியல்வாதிகளைப் போன்றே ரணிலிடம் பெருந்தொகைப் பணத்தைப் பெற்றுக்கொண்டு பொதுவேட்பாளரை நிறுத்தாமல் நேரடியாகவே அவருக்குப் பிரச்சாரத்தை செய்திருக்கமுடியும்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் யாரோ ஒருவரின் வெற்றி வாய்ப்பைப் பாதிப்பார். அதற்காக யாரோ ஒருவரின் சார்பில் பொதுவேட்பாளர் நிறுத்தப்பட்டிருப்பார் என்று கூறுவது அபத்தமானது. தமிழ்ப் பொதுவேட்பாளர் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் இக்காலகட்டத்தின் ஒரு தவிர்க்க முடியாத முடிவு.

எவரது தூண்டுதலில் பேரிலும் எடுத்த முடிவு அல்ல இது. தமிழ்த் தேசியக் கட்சிகளும் பொது அமைப்புகளும் நீண்டகாலமாக ஆராய்ந்து தமிழ்த் தேசிய அரசியலை வீறுடன் தொடர்ந்து முன்னெடுப்பதற்காக எடுத்த ஓர் உறுதியான முடிவு இது. ஆகவே தமிழ் மக்கள் இந்த விமர்சனங்களை எல்லாம் கருத்திற் கொள்ளாது சங்குச் சின்னத்துக்கு வாக்களித்து பொதுவேட்பாளர் என்ற கோட்பாட்டை வெற்றியடையச் செய்ய வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# சங்கு சின்னத்திற்கு வாக்கு அளிப்பதன் மூலம் தமிழர் தேசம் என்றுமே சிங்கள ஆட்சி அதிகாரத்தினை ஏற்கவில்லை என்ற செய்தி வழங்கப்படவேண்டும்

## பொத்துவில் பொலிகண்டி பேரியக்கம் அறிக்கை

தமிழ் பொது வேட்பாளரின் சங்கு சின்னத்திற்கு வாக்கு அளிப்பதன் மூலம் தமிழர் தேசம் என்றுமே சிங்கள ஆட்சி அதிகாரத்தினை ஏற்றுக்கொள்ளவில்லை என்ற செய்தி வழங்கப்படவேண்டும் என்று பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி பேரியக்கம் அறிக்கை ஒன்றினை இன்று வெளியிட்டுள்ளது.

அதன் முழு வடிவம் வருமாறு

இலங்கைக்கான 9வது சனாதிபதி தேர்தல் -
பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் நிலைப்பாடு

அன்பிற்குரிய தமிழ் மக்களே!

இம்மாதம் 21ம் திகதி நடைபெறவுள்ள சிறிலங்காவின் சனாதிபதி தேர்தலானது தமிழர் தேசத்திக்குரிய தேர்தல் அன்று. அது சிங்கள பேரினவாதம் தமது நாட்டிக்குரிய தமது அதிபரை தேர்வு செய்யும் தேர்தலாகும். தற்போது போட்டியிடும் வேட்பாளர்களுள் எவர் சிறப்பாக இனவாத கோட்பாட்டினை முன்னெடுத்துச் செல்வார் என சிங்கள தேசம் தெரிவு செய்யும் தேர்தலே ஆகும். இந்த தேர்தலில் தமிழ் மக்களின் அபிப்பிராயங்கள் எவ்விதத்திலும் கணக்கில் கொள்ளப்படப் போவதில்லை. சிறிலங்கா தேசத்தில் முதல் சனாதிபதியாகிய திரு. ஜே ஆர் ஜெயவர்த்தன முதல் தற்போது மக்கள் ஆணையின்றி பின்கதவால் சனாதிபதியாகிய அவரின் மருமகன் திரு ரணில் விக்கிரமசிங்க வரை அனைத்து சிறிலங்காவின் சனாதிபதிகளும் தமிழ் மக்களின் உரிமைகளை ஒடுக்குவதிலும், எமது நிலங்களை ஆக்கிரமிப்பதிலும், எமது சமய கலாசார விழுமியங்களை சீரழிப்பதிலும், எமது வளங்களை அந்நியர்களுக்கு தாரை வார்ப்பதிலுமே கூடிய கவனம் செலுத்தினர். அதேவேளையில் தமிழ் மக்களின் அரசியல் மற்றும் வாழ்வியலில் எவ்விதமான நன்மைகளையும் இத்தேர்தல் வழங்கப் போவதில்லை. இதுவரை நடந்த தேர்தல்களில் இத்தேர்தலே தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சனையை முற்றாக புறந்தள்ளி சிங்கள தேசத்தின் பொருளாதார பிரச்சனையை மையப்படுத்தியே கட்டமைக்கப்படுகின்றது. சிறிலங்காவின் படுபாதகமான பொருளாதார வீழ்ச்சிக்கு தீர்க்கப்படாத இனப்பிரச்சனையே முக்கிய காரணம் என்பது கூட வசதியாக இன்று மறைக்கவும் மறக்கவும் படுகின்றது.



ஆயினும் இந்த தேர்தலானது தமிழர் தேசம் மீது இன்று திணிக்கப்பட்டுள்ளது. தமிழர் மீது திடீர் பாசம் கொண்ட சிங்கள வேடதாரிகள் எமது தேசம் எங்கும் இன்முகத்துடன் வலம்வந்து வாக்கு சேகரிக்கின்றனர். இதில் தமிழராகிய நாம் எந்த சிங்கள வேட்பாளர்களுக்கும் வாக்களிக்க முடியாது. தமிழ் பொதுவேட்பாளருக்கு மட்டும் சங்கு சின்னத்திற்கு வாக்கு அளிப்பதன் மூலம் தமிழர் தேசம் என்றுமே சிங்கள ஆட்சி அதிகாரத்தினை ஏற்றுக்கொள்ளவில்லை என்ற செய்தியினை வெளி உலகிற்கு வெளிப்படுத்த வேண்டும். இரண்டாம் விருப்பு வாக்கு என்ற விடயத்தை தமிழர்கள் முற்றாக புறந்தள்ள வேண்டும். ஈழத்தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் தொடர்பாக எவ்வித வாக்குறுதிகளையோ அல்லது கரிசனைகளையோ வெளிப்படுத்தாத சிங்கள வேட்பாளர்களை ஆதரிக்க துடிக்கும் எந்த தமிழர் தரப்பையும், குறிப்பாக போலி தமிழ் தேசியத்தை நுனிநாக்கில் பேசிக்கொண்டு சிங்கள பேரினவாதத்திற்கு சேவகம் செய்யும் அனைவரையும் தமிழ் மக்கள் எமது அரசியல் வெளியிலிருந்து முற்றாக அகற்ற வேண்டும்.

நாம் பலமாக இருந்த காலத்திலேயே சர்வதேச முன்னிலையில் சிங்கள தேசத்துடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தீர்வுகளின்றி கபடத்தனமாக முடக்கப்பட்டன. எமது வரலாற்று பாடத்தினூடாக இலங்கை தீவுக்கான புதிய அரசியல் யாப்பினூடாகவோ, பேச்சுவார்த்தைகள் ஊடாகவோ அல்லது உள்ளூர் பொறிமுறைகள் ஊடாகவோ தமிழ் மக்களின் பிரச்சனை நீதியான முறையில் தீர்க்கப்படாது. தமிழ் மக்களின் தேசிய கேள்விக்கு தமிழ் மக்களிடையே சர்வதேசத்தினால் நடாத்தி கண்காணிக்கப்படும் ஒரு சர்வசன வாக்கெடுப்பினூடாகவேதான் ஓர் நிரந்தர அரசியல் தீர்வினை அடைய முடியும் என்பதை நாம் திடமாக நம்புகின்றோம். நிரந்தரமான தமிழர் தேசம் இந்த பூமிப்பந்தில் உதிக்க தொடர்ந்தும் பாடுபடுவோம் என உறுதி எடுத்துக்கொள்வோம். ஏன்றுள்ளது.

# யாழ்ப்பாணத்தில் கட்டிலிலிருந்து கீழே விழுந்த காத்தான்குடி பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தை மரணம்!

யாழ்ப்பாணத்தில் கட்டிலில் இருந்து கீழே விழுந்தவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். இதன்போது காத்தான்குடி பகுதியைச் சேர்ந்த நீரான் சாய்பு முகமது மர்சூ என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.


இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், காத்தான்குடியைச் சேர்ந்த இவர் யாழ்ப்பாணத்தில் உள்ள உணவகம் ஒன்றில் கடமை புரிந்து வருகின்றார். இந்நிலையில் தனது அறையில் உறங்கிக்கொண்டு இருந்தவேளை 17-09-2024 அன்று இரவு கட்டிலில் இருந்து கீழே விழுந்துள்ளார்.

இவ்வாறு விழுந்தவர் மயங்கிய நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். இருப்பினும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும்
1112

## நாச்சிமாஉ திருக்கோயில்
## வண்ணாஉபண்ணை, யாழ்ப்பாணம்

--------------

கோவிலின் நடுவில் அமைந்திருப்பது கருவறை. இதனைக் கர்பக்கிருகம் எனவும் குறிப்பிடுவர். கருவறைச்சுவரின் மூன்று பக்கங்களிலும், விக்கிரகங்களை வைப்பதற்காக நிறுவப்பட்ட கோஷ்ட பஞ்சரங்கள் காணப்படும். இவற்றிலே விக்கிரகங்களை நிறுவுவர். நாச்சிமார்கோவில் கர்ப்பக்கிருகத்தில், மூலமூர்த்தியாக அமைந்துள்ள காமாட்சி அம்பாளின் வடிவம், ஸ்தானக நிலையிலே, கருங்கல்லில் அமைக்கப்பட்டுள்ளது. அம்பாளின் இடக்கரங்களில் முல்லை, அசோகு, மா, நெய்தல், தாமரை ஆகிய ஐந்துவகை மலர் அரும்புகளும் காணப்படுகின்றன. வலக்கரங்களுள் ஒன்றிலே கரும்பு வில்லும், மற்றொன்றிலே அங்குசமும் காணப்படுகின்றன.

கருவறையை அடுத்து அதனுடன் இணைந்தவாறே காணப்படுவது, அர்த்தமண்டபம். அர்த்தமண்டபத்தின் வாயிலில், துவாரபாலகர்கள் காணப்படுவர். அர்த்த மண்டபத்தின் முன் இருப்பது மகாமண்டபம் என அழைக்கப்படும். நாச்சிமார்கோவில் மகாமண்டபத்திலே சிவன், சண்டேசுவரி, நந்தன கோபாலர், சுக்கிரவாரஅம்மன், முருகன், பிள்ளையார், ஆகியோரின் பித்தளை உருவச்சிலைகள் காணப்படுகின்றன. மகாமண்டபத்து வாசலிலே நந்தா, சகந்தா, என்னும் துவாரபாலகர்களின் சிலைகள் காணப்படுகின்றன. பிள்ளையார், பூமாதேவி, மகாலக்சுமி சமேத வி'ணு, விஸ்வப்பிரமா, மகாலக்சுமி, முருகன், வைரவர், நவக்கிரகங்கள் ஆகியோர் இக்கோயிலிலுள்ள பரிவார மூர்த்திகளாவர். கோவிலின் உட்பிரகாரச் சுவர்களிலே சமயகுரவர், காமாட்சி அம்மன், மாரியம்மன், ஐம்முகங்கொண்ட விஸ்வப்பிரம்மன் ஆகியோரின் உருவங்கள் அழகிய ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. திருமுறைகளுக்கும், விராட்புரு'னாகிய விஸ்வப்பிரம்மனுக்கும் பூசை செய்வது, இக்கோவிலுக்கேயுரிய மரபாகக் காணப்படுகின்றது.

ஆரம்பகாலத்திலிருந்து தேர்த்திருவிழாவன்று கட்டுத்தேரிலேறி உலாவருவதே வழக்கமாகக் காணப்பட்டது. கட்டுத்தேர் என்புத, அவவ்வப்போது தேவையேற்படும்போது தற்காலிகமாக அமைப்பதையே குறிக்கும். பின்னர் கோவிலுக்குரிய அழகிய சிற்பத்தேர் அமைக்கப்பட்டது. இத்தேரின் அடித்தளத்திலே, ஆலயத்தோடு தொடர்பான கர்ணபரம் பரைக்கதைகளை அடிப்படையாகக் கொண்ட சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

காமாட்சிஅம்மன், இலக்குமி, விஸ்வப்பிரம்மன், சரஸ்வதி, பிள்ளையார், நவசக்திகள், ஆறுமுகன், அர்த்தநாரீஸ்வரர், தட்சிணாமூர்த்தி, வைரவர், இராஜராஜேஸ்வரி, துர்க்கை, தனலக்சுமி, கஜலக்சுமி, ஆகியோரின் வடிவங்களும், சரவணப்பொய்கையிலே குமாரக்கடவுள் உற்பவித்தமை, திருக்கைலாயத்திலே பார்வதியின்கோலம், கம்பநதிக்கரையிலே பார்வதி இலிங்கத்தை வழிபாடு செய்தமை முதலிய காட்சிகளும் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளன. திருவிழாக்கலத்திலே அம்மனுக்குக் கட்டியங் கூறப்படும்போது,

யாழ்ப்பாணம் வண்ணை மாநகரே ஸ்ரீமத்
குளங்கரை மருதடி ஸ்ரீ காமாட்சி அம்பிகா
ஜாக த்வஜாரோகணாதி தீர்த்தாந்த
பஞ்சதசதின பரியந்தம மஹோத்சவ
கல்யாண சேவாந்தே மனு மய
துவஷ்டா சில்பி விஸ்வக்ஞ வம்சகுல
தேவாலயே அனுமத்த்வஜ மேகவாகன
பஞ்சானன பரபிரம்ம விராட் விஸ்வப்பிரம்ம
குல சமூக சித்தே.

எனக் கூறப்படுகின்றது.

இக்கோவிலில் நித்திய, நைமித்திய வழிபாடுகள் சீராகவும், சிறப்பாகவும் நடைபெறும். தினமும் ஐந்துகாலப்பூசை இடம்பெறும். சில சமயங்களிலே சங்காபிஷேகமும் நடைபெறுவதுண்டு. வெள்ளிக்கிழமை இங்கு நடைபெறும் பூசைகள், சிறப்பானபூசைகளாக அமையும். இந்நாளில் கன்னிகளும், சுமங்கலிகளும் நன்மை பெறும்பொருட்டு, திருவிளக்குப்பூசை வழிபாடு நடைபெறுகின்றது. இக்கோவில் வருடாந்த மகோற்சவம் 1967 ஆம் ஆண்டு முதல் பதினைந்து நாட்களாக நடைபெற்று வருகின்றது. மகாமாரியம்மன் ஊர்வலத்தோடு, திருவிழா ஆரம்பமாகும். அதற்கடுத்தநாள், குளிர்த்தி, பிள்ளையார்பூசை, கிராமசாந்தி, கொடியேற்றம் என்பன நிகழும். தேர், தீர்த்தம், பூங்காவனம், சண்டேசுவரிபூசை, வைரவர்மடை ஆகியவற்றோடு மகோற்சவம் நிறைவுபெறும். திருவிழாக்காலங்களில் பல்வேறுவிதமான கலைநிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கம். ஒவ்வொரு மாதமும் அந்தந்த மாதத்திற்குரிய சிறப்பான நாட்கள், மிக விமரிசையாகக் கொண்டாடப்படும்.

மக்கள்சேவையே மகேசன் சேவை என்பதற்கிணங்க இவ்வாலயத்தை ஆதாரமாகக் கொண்டு, பல பொதுப்பணிகளும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 1950 ஆம் ஆண்டிலே அமைக்கப்பட்ட கருணைக் கழகம் என்ற அமைப்பு, கோவிலுக்கு வடக்கிலே வாசிகசாலையொன்றை நடத்திவந்துள்ளது. 1958 ஆம் ஆண்டிலே அமைக்கப்பட்ட வண்ணை கந்தர்வ கானசபா இசைக்கலையை முன்னேற்றும் நோக்குடன், வகுப்புக்களை நடத்தி சங்கீத ஆர்வத்தை மக்களிடையே ஊக்குவித்தது. வண்ணை கலைவாணர் நாடகமன்றம் என்ற அமைப்பு, நாடகத்துறையிலே பல சேவைகளைப் புரிந்தது. 1960 ஆம் ஆண்டளவில் உருவாகிய வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் கூட்டுப்பிரார்த்தனை சபை, வெள்ளிக்கிழமைதோறும் பிள்ளைகள், திருமுறைகளைக் கற்க ஏற்பாடு செய்தது. இவற்றோடு திருக்குறள் வகுப்பு, சமய வகுப்புக்களையும் நடத்தி, இளந்தலைமுறையினரின் சமய ஊக்கத்திற்கு ஆதாரமாயிருந்தது. 1986 ஆம் ஆண்டிலே அன்னதான சபை உருவாக்கப்பட்டது. திருவிழாக்காலங்களிலும், ஆலய விசேட தினங்களிலும், அன்னதானம், குளிர்த்தி ஆகியவற்றை இச்சபை செய்து வருகின்றது. 1989 ஆம் ஆண்டிலே தோன்றிய ஆலயத்தொண்டர் சபை, ஆலயத்தொண்டுகளைச் செய்ய உதவி வருகின்றது.

ஆரம்பகாலத்தில், மருதமரத்தடியில் ஆரம்பித்த தேவதைவழிபாடு, தற்காலத்தில் பெருவளர்ச்சியடைந்து, நாளடைவில், ஆகமவழிபாட்டைக் கொண்ட கோவிலாக மாற்றமடைந்துள் ளது. இக்கோவில், யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை காமாட்சிஅம்மன் ஆலயம் என வழங்கப்பட்ட போதிலும், நாச்சிமார்கோவில் என்ற பெயரே புகழ்பெற்ற பெயராகி, யாழ்ப்பாணத்திலுள்ள அம்பிகை ஆலயங்களுள் அருளும், பெருமையும் மிக்க ஆலயங்களுள் ஒன்றாகத் திகழ்கின்றது.

வளரும்...

## Markham - Thornhill's MPP Logan Kanapathi hosted his Annual BBQ Get together

கனடிய செய்திகள் Canadian News

## மாகாண பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி வழங்கிய வருடாந்த ஆதரவாளர் ஒன்று கூடல்




Markham - Thornhill's Ontario MPP Logan Kanapathi and his staff hosted his Annual BBQ Get together on 15th, September, 2024 at Armadale Park from 3.00 PM onwards.

More than 1500 invited Guests were gathered there to grace the event. Many cultural performances from different Ethnic Communities were presented and those beautiful performers were honored by MPP Logan Kanapathi.

-------------------------

Markham - Thornhill மாகாண அரசுத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்களின் வருடாந்த ஆதரவாளர் ஒன்று கூடல் - Annual BBQ Get together - கடந்த 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று பிற்பகல் 3.00 மணி தொடக்கம் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பெற்று நடைபெற்றது.

Thornhill மாகாண அரசுத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்களின் அலுவலகப் பணியாளர்கள் மற்றும் தொண்டர்கள் அனைவரும் அங்கு கூடி நின்று நிகழ்வில் கலந்து கொண்ட அனைரையும் வரவேற்று உபசரித்து உரையாடி மகிழ்ந்தார்கள்.

அங்கு Thornhill மாகாண அரசுத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்களின் பாரியார் வைத்திய கலாநிதி திருமதி. லோகன் கணபதி அவர்களும் அங்கு வருகை தந்து அனைவரையும் உபசரித்தார்.

கனடா உதயன் நண்பர்கள் மற்றும் பல வர்த்தக நண்பர்கள் அங்கு கூடி நின்று தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

**- Ganesh (Local Journalism Initiative Reporter-1)**







## கனடா வாழ் வர்த்தகத்துறை முன்னோடிகள் கணேசன் சுகுமார் – குலா செல்லத்துரை ஆகியோரின் சேவையைப் பாராட்டி வழங்கப்பெற்ற உயர் கௌரவங்கள்




கனடா வாழ் வர்த்தகத்துறை முன்னோடிகளும் சமூக நலன் விரும்பிகளுமான வர்த்தக வழிகாட்டிகளுமான திருவாளர்கள் கணேசன் சுகுமார்-குலா செல்லத்துரை ஆகியோரின் சேவையைப் பாராட்டி கனடிய அரசாங்கத்தின் சிபார்சின் பேரில் அவர்கள் இருவருக்கும் வழங்கப்பெற்ற உயர் கௌரவங்களை அண்மையில் நடைபெற்ற அரச வைபவம் ஒன்றில் பெற்றுக் கொண்டார்க்ள

மேற்படி உயர் கௌரவங்களை கனடா வாழ் 18 சேவையாளர்கள் பெற்றுக் கொண்டார்கள். மேன்மைதங்கிய இங்கிலாந்து மன்னர் மூன்றாம் சார்லஸ் மன்னரின் முடிசூட்டுப் பதக்கங்களே இந்த பதின்மருக்கு வழங்கப்பெற்றன.

இந்த பதக்கம் வழங்கப்பெற்றமை, மேற்படி இருவரும் ஆற்றிய சமூக சேவை மற்றும் தாராளசிந்தை மற்றும் அவை சார்ந்த பணித்திட்டங்கள் ஆகியவற்றிக்கானது என்பதும் இந்த கௌரவம் மக்கள் பணி ஆற்றும் அவர்களது உறுதிப்பாட்டையும் அங்கீகரிக்கிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த கௌரவம் தொடர்பாக திருவாளர்கள் கணேசன் சுகுமார்-குலா செல்லத்துரை ஆகியோர் வெளியிட்டுள்ள நன்றி தெரிவிக்கும் செய்தியில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"நமது சமூகம், நாடு மற்றும் உலகத்தை எதிர்கால சந்ததியினருக்கு சிறந்த இடமாக மாற்ற இந்த அங்கீகாரம் உதவுகின்றது. இந்த அங்கீகாரத்திற்காக அதன் தேர்வுக் குழுவிற்கும் கனடா அரசாங்கத்திற்கும் நாங்கள் மனப்பூர்வமாக நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

எங்கள் பயணம் முழுவதும் எங்களுக்கு வழிகாட்டும் ஒளியாகவும் வலுவாகவும் இருக்கும் ஒவ்வொருவருக்கும் எங்கள் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவிக்க விரும்புகிறோம்.

எங்கள் வாழ்வின் முக்கியமான அங்கமாக விளங்கும் இந்த சாதனையை எங்களுடன் கொண்டாடியதற்கும் மீண்டும் ஒருமுறை நாம் இருவரும் நன்றி தெரிவிக்கின்றோம்".

இவ்வாறு அந்த நன்றி தெரிவிக்கும் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

-







**Ganesh (Local Journalism Initiative Reporter- 1)**

## Durham Tamil Association Hosts 'Hope for Homeland Projects Gala Night

## டுறம் தமிழர் சங்கம் நடத்திய "தாயகத்திற்குரிய உதவித் திட்டங்கள்" நோக்கம் கொண்ட இராப்போசன விருந்து



கனடாவில் வெற்றிகரமாக கடந்த பல ஆண்டுகளாக இயங்கிவரும் "டுறம் தமிழர் சங்கம்" (Durham Tamil Association) நடத்திய "தாயகத்திற்குரிய உதவ-'த் திட்டங்கள்" நோக்கம் கொண்ட இராப்போசன விருந்து கடந்த 15ம் திகதித ஞாயிற்றுக்கிழமையன்று மாலை பிக்கரிங் நகரில் உள்ள மண்டபத்தில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பெற்று நேர்த்தியாக நகர்ந்து சென்றது.

இந்த நல்நோக்கம் கொண்ட இராப்போசன விருந்து விழாவை அறிவிப்பாளர் மதிசயன் அவர்கள் தொகுத்து வழங்கினார்.

அன்றைய தினம் இராப்போசன விருந்து விழாவில் ஆடல் பாடல் மற்றும் உரைகள் ஆகியனவும் இடம்பெற்றன.

"தாயகத்திற்குரிய உதவித் திட்டங்கள்" நோக்கம் கொண்டதான இந்த விழாவில் திட்டத்தின் நோக்கங்கள் பற்றி சங்கத்தின் தலைவர் ஹாந்தன் மாணிக்கவாசகர் மற்றும் திட்டப் பொறுப்பாளர் திரு சுப்பிரமணியம் ஆகியோர் விபரமாக எடுத்துரைத்தனர்.

எமது தாயகத்தின் வடக்கு கிழக்கு பகுதிகளில் உதவிகள் தேவைப்படும் மாணவர்கள் - விதவைத் தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் - வயதில் முதிர்ந்தவர்கள் ஆகியோர்க்கு வழங்கி வரும் உதவிகள் தொடர்பாகவும் எதிர்காலத்தில் அதிகரித்துள்ள தேவைகள் தொடர்பாகவும் விபரங்களை அவர்கள் வெளியிட்டனர்.

இந்த திட்டத்திற்கு பெரும் நிதி வழங்கி ஆதரவு வழங்கிய கல்வி நிறுவனத்தின் அதிபர் திரு முரளி நாராயணதாஸ் அவர்கள் தனது ஆதரவை தொடர்ந்து வழங்கவுள்ளதாகவும். இந்த நல்ல பணிகளைச் செய்து வரும் "டுறம் தமிழர் சங்கம்" (Durham Tamil Association) அமைப்பினருக்கு தனது பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொண்டார்.

மேற்படி நல்நோக்கத்திற்காக அங்கு அனுமதிச் சீட்டுக்கள் வாங்கி சமூகமளித்திருந்த அனைவருக்கும் அங்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

கனடா உதயன் பத்திரிகை சார்பிலும் "தேசம் பத்திரிகை சார்பிலும் அவற்றின் ஆசிரிய பீடத்தின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.





**- Arjune (Local Journalism Initiative Reporter- 2)**



# இலங்கையின் அடுத்த ஜனாதிபதி யார்?

**"நடைபெறவுள்ள ஜனாதிபதித்தேர்தலில் ஒரு வேட்பாளர் ஜனாதிபதியாக வெற்றிபெற வேண்டுமானால் 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற வேண்டும். அதாவது இம்முறை வாக்களிக்க தகுதிபெற்றுள்ள 1 கோடியே 71 இலட்சத்து 40354 வாக்காளர்களில் 1 கோடியே 50 இலட்சம் வாக்காளர்கள் வாக்களிப்பார்களேயானால் அதில் 75 இலட்சம் வாக்குகளையாவது பெற வேண்டும். இவ்வாறான நிலையில் ரணில், சஜித்தை தோற்கடித்து அநுர வெற்றிபெறுவாரானால் அது உண்மையில் இலங்கையின் வரலாற்றில் பொன் எழுத்துக்களினால் பொறிக்கப்பட வேண்டிய வெற்றியாகவே அமைந்திருக்கும். அவ்வாறான ஒரு வெற்றிக்கு "அரகலய" போன்றதையும் விட வலுவான மக்கள் புரட்சி வெடிக்க வேண்டும்" ---------------------------------------- - கே. பாலா ----**

இலங்கையின் 9ஆவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ள நிலையில் ஜனாதிபதி ஆசனத்தில் அமரப்போவது யார்? என்பது தொடர்பில் பல்வேறு கருத்துக் கணிப்புக்கள் வெளியிடப்பட்டாலும் அவை கட்சி அல்லது ஜனாதிபதி வேட்பாளர் ஆதரவு சார்ந்த கருத்துக் கணிப்புக்களாகவே உள்ளன சில கருத்துக் கணிப்புகள் ஜனாதிபதி வேட்பாளர்களின் வெற்றி வாய்ப்புத் தொடர்பில் முன்னுக்கு பின் முரணான அதாவது முதலில் ஒருவர் முன்னணியில் இருப்பதாக கூறுவதும் பின்னர் அடுத்தமுறை கருத்துக் கணிப்பில் அவர் பின்னடைவை சந்தித்துள்ளார் எனக் கூறுவதாகவுமே உள்ளன.

இவ்வாறு கருத்துக் கணிப்புகள் ஒருபக்கம் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில் இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களும் அவர்களின் கட்சிகளும், ஆதரவுக் கட்சிகளும் பிரசார மேடைகளிலும் ஊடக மாநாடுகளிலும் தமது வேட்பாளரின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்து மேற்கொண்ட பிரசாரங்களும் வெளியிட்ட தகவல்களும் வெற்றி வேட்பாளர் யார் என்பது தொடர்பில் மக்கள் மத்தியில் பெரும் குழப்பத்தையே ஏற்படுத்தி வருகின்றன. அதிலும் ஒரு வேட்பாளரின் கட்சி தமது வேட்பாளரின் வெற்றியைகொண்டாட மக்களைத் தயாராக இருக்குமாறும் வெற்றியை அமைதியாகக் கொண்டாடுமாறும் தோல்வியடைந்த வேட்பாளர்களை அவமரியாதைப் படுத்தக்கூடாதெனவும் கோரிக்கை விடுமளவுக்கு தமது வெற்றியில் அதீத நம்பிக்கை கொண்டுள்ளது.

இந்த ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிட 39 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்திய நிலையில் ஒருவர் மரணமடைந்து விட்டதனால் 38 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களில் தற்போதைய ஜனாதிபதியும் சுயேட்சை வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்கட்சித்தலைவரும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் மகனும் வேட்பாளருமான சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தி, ஜே.வி.பி. ஆகியவற்றின் தலைவரும் வேட்பாளருமான அநுரகுமார திசாநாயக்க, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் மகனும் பொதுஜன பெரமுனவின் வேட்பாளருமான நாமல் ராஜபக்ச ஆகியோரிடையிலேயே பிரதான போட்டி இடம்பெறும் நிலையில் தமிழ் பொது வேட்பாளரான அரியநேத்திரனும் இவர்களின் வெற்றி வாய்ப்பில் தாக்கம் செலுத்தக் கூடியதொரு வேட்பாளராகவே உருப்பெற்றுள்ளார்.

இந்த 38 ஜனாதிபதி வேட்பாளர்களுக்கும் வாக்களிக்க இம்முறை இலங்கையின் 25 தேர்தல் மாவட்டங்களில் இருந்து 1 கோடியே 71 இலட்சத்து 40,354 பேர் தகுதி பெற்றுள்ளனர். இவ்வாறான நிலையில் தான் இவர்களில் அதிக வாக்குகளைப்பெற்று ரணில் விக்கிரமசிங்க தான் மீண்டும் ஜனாதிபதியாவார், இல்லை சஜித் பிரேமதாசதான் ஜனாதிபதியாவார். இல்லை, இல்லை இந்த முறை ஜே.வி.பி. அலை அடிப்பதனால் அநுர குமார திசாநாயக்க தான் ஜனாதிபதியாவார், யார் எதனைக் கூறினாலும் ராஜபக்சக்களுக்கென ஒரு வாக்கு வங்கி உள்ளது.அவர்கள் தமதுவெற்றிக்காக எதனையும் செய்யத்துணிந்தவர்கள் எனவே நாமல் ராஜபக்சதான் அடுத்த ஜனாதிபதி என்றவாறாக பல்வேறுபட்ட எதிர்வுகூறல்கள் வெளியிடப்படுகின்றன.

ஜனாதிபதித் தேர்தல் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் ஜனாதிபதி வேட்பாளர்களினதும் அவர்களின் கட்சிகளினதும் பங்காளிக் கட்சிகளினதும் சூறாவளிப் பிரசாரம் நாடு முழுவதும் சுற்றி சுழன்றடித்து புதன்கிழமை நள்ளிரவுடன் ஓய்ந்துவிட்ட நிலையில் எந்தவேட்பாளரை மக்கள் ஜனாதிபதி ஆசனத்தில் அமரவைக்கும் கள நிலைமைகள், வாய்ப்புக்கள் அதிகம் என்பது தொடர்பில் கொஞ்சம் ஆராய்வோம்.



நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, அநுர குமார திசாநாயக்க, நாமல்ராஜபக்ச ஆகிய 4 பிரதான வேட்பாளர்களில் 4ஆவது வேட்பாளரான நாமல் ராஜபக்ச போட்டியில் இல்லை என்பதே உண்மை. அதேநேரம் ஏனைய 3 வேட்பாளர்களில் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சஜித் பிரேமதாச, அநுர குமார திசாநாயக்கவிடையில்தான் கடுமையான போட்டியுள்ளது. இவர்களில் ஒருவரே அடுத்த ஜனாதிபதியாக வெற்றிபெறும் கள சூழல் இருந்தாலும். அநுரகுமார திசநாயக்கவுக்கு தென்பகுதியில் அலை அடித்தாலும் வேட்பாளர்களின் வெற்றியை தீர்மானிக்கும் வாக்காளர்களான தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் வாக்குகளை அநுரகுமார திசாநாயக்க பெறுவதென்பது சாதாரண விடயமல்ல. இதற்கு கடந்த சில ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் தொடர்பில் மீள் பார்வை செலுத்த வேண்டியது அவசியம்.

கடந்த 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 35 வேட்பாளர்கள் போட்டியிட்ட நிலையில் கோத்தபாய ராஜபக்ச, சஜித் பிரேமதாச, அநுரகுமார திசாநாயக்க ஆகிய 3 வேட்பாளர்களே பிரதான போட்டியாளர்களாக இருந்தனர். இந்த தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்த 1 கோடியே 59 இலட்சத்து 92096 வாக்காளர்களில் 1 கோடியே 33 இலட்சத்து 87951 பேர் வாக்களித்த தேர்தல் முடிவுகளின்படி கோத்தபாய ராஜபக்ச 69 இலட்சத்து 24255 வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாக தெரிவானார். சஜித் பிரேமதாச 55 இலட்சத்து 64239 வாக்குகளையும் அநுர குமார திசாநாயக்க 4 இலட்சத்து 18553 வாக்களையுமே பெற்றிருந்தனர்.

இதில் கோத்தபாய ராஜபக்சவுக்கு தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் பெரும்பாலும் வாக்களிக்காத நிலையில் அவர் யுத்தத்தை வெற்றிகொண்ட நாயகனாக அடையாளப்படுத்தப்பட்டு மிக மோசமான இனவாத பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல்மூலம் 350க்கும் மேற்பட்ட அப்பாவைமக்களின் உயிரிகள் குடிக்கப்பட்டே அவருக்கு சிங்களவர்களின் பெருவாரியான வாக்குகள் வேட்டையாடப்பட்டன. சஜித் பிரேமதாசவுக்கு மூவின மக்களும் வாக்களித்தநிலையில் அவர் கௌரவமான தோல்வியை அடைந்தார். அநுரகுமாரவுக்கு சிங்கள இனவாத வாக்குகளும் கிடைக்கவில்லை தமிழ் முஸ்லிம், மலையக மக்களினதும் வாக்குகளும் கிடைக்கவில்லை. இதனால்தான் அவர் படு தோல்வியடைந்தார்.

இதில் 69 இலட்சத்து 24255 வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாக தெரிவான கோத்தபாய ராஜபக்ச பெற்ற வாக்குகள் 52.25 வீதம். 55 இலட்சத்து 64239 வாக்குகளை பெற்ற சஜித் பிரேமதாச பெற்ற வாக்குகள் 41.99 வீதம். 4 இலட்சத்து 18553 வாக்குளை பெற்ற அநுரகுமார திசாநாயகக பெற்ற வாக்குகள் 3.16 வீதம். தற்போது நடைபெறவுள்ள ஜனாதிபதித்தேர்தலில் 1 கோடியே 71 இலட்சத்து 40354 பேர் வாக்களிக்கவுள்ள நிலையில் ஒரு வேட்பாளர் ஜனாதிபதியாக வெற்றிபெறவேண்டுமானால் 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற வேண்டும். அதாவது 1 கோடியே 71 இலட்சத்து 40354 வாக்காளர்களில் 1 கோடியே 50 இலட்சம் வாக்காளர்கள் வாக்களிப்பார்களேயானால் அதில் 75 இலட்சம் வாக்குகளையாவது பெற வேண்டும். ஆனால் இந்த முறை எந்த வேட்பாளரும் இவ்வளவு தொகை வாக்குகளை பெறமுடியாத நிலை இருப்பதனாலேயே விருப்பு வாக்குகளை பெறுவது தொடர்பில் ஜனாதிபதி வேட்பாளர்கள் தீவிர கவனம் செலுத்தினர்.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித்தேர்தலில் மஹிந்த ராஜபக்ச 48 இலட்சத்து 87152 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றநிலையில் அவரை எதிர்த்து போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்க 47 லட்சத்து 06366 வாக்குகளைப்பெற்று 1 இலட்சத்து 86786 வாக்குகளினாலேயே தோல்வியடைந்தார். அந்த தேர்தலை விடுதலைப்புலிகளின் வேண்டுகோளை ஏற்று வடக்கு, கிழக்கு மாகாண தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலை புறக்கணித்திருந்தமையே வடக்கு, கிழக்கில் பெரும் வாக்கு வங்கியை வைத்திருந்த ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைய முக்கிய காரணமானது. அவ்வாறிருந்தும் ரணில் விக்கிரமசிங்க வடக்கில் 92344 வாக்குகளையும் மூவினங்களும் வாழும் கிழக்கில் 5 இலட்சத்து 88438 வாக்குளையும் பெற்றிருந்தார்.

2010 மற்றும் 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் ரணில் விக்கிரமசிங்கவோ சஜித் பிரேமதாசவோ அநுர குமாரவோ போட்டியிடாத நிலையில் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்சவை எதிர்த்து சஜித் பிரேமதாசவும் அநுரகுமாரவும் போட்டியிட்டனர். இதில் கோத்தபாய ராஜபக்ச 69 இலட்சத்து 24255 வாக்குகளைப்பெற்று ஜனாதிபதியானார். சஜித் பிரேமதாச 55 இலட்சத்து 64239 வாக்குகளையும் அநுர குமார திசாநாயக்க 4 இலட்சத்து 18553 வாக்களையுமே பெற்றிருந்தனர். இதில் சஜித் பிரேமதாச வடக்கில் 4 இலட்சத்து 87461 வாக்குகளைப்பெற்ற நிலையில் அநுரகுமார 2531 வாக்குளையும் கிழக்கில் சஜித் பிரேமதாச 6 இலட்சத்து 65163 வாக்குகளைப் பெற்ற நிலையில் அநுரகுமார 13494 வாக்குளை மட்டுமே பெற்றிருந்தார்.

ஆக 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 15 இலட்சத்து 31892 வாக்காளர்கள் வாக்களித்த நிலையில் சஜித் பிரேமதாச 11 இலட்சத்து 52624 வாக்குகளைப் பெற்ற நிலையில் அநுரகுமார 16025 வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தார். 2005 ஆம் ஆண்டு மற்றும் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளைக் கவனித்தால் வடக்கு, கிழக்கில் ரணில், சஜித் ஆதரவு நிலையே உள்ளது. இவ்வாறான நிலையில் நடைபெறவுள்ள ஜனாதிபதித்தேர்தலில் வடக்கில் 8இலட்சத்து 99268 வாக்காளர்களும், கிழக்கில் 13 இலட்சத்து 21043 வாக்களர்களுமாக 22 இலட்சத்து 20311 வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர். இந்த வாக்குகளில் அதிக மானவற்றை ரணில், சஜித் ஆகியோர் பங்கிடவுள்ளநிலையில் தமிழ் பொது வேட்பாளருக்கும் கணிசமானளவு ஆதரவு உள்ளதால் வடக்கு, கிழக்கில் அநுரகுமாரவின் நிலை பின்தங்கியே உள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மட்டுமன்றி மலையகத் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களிலும் அநுரகுமாரவுக்கான வாக்கு வங்கி பலவீனமான நிலையில்தான் உள்ளது. அநுரகுமாரவுக்கான வாக்கு வங்கி பலமாகவுள்ள இடங்களில் கூட இம்முறை பொதுஜன பெரமுன வேட்பாளராக ராஜபக்ச வாரிசான நாமல் ராஜபக்ச களமிறங்கியுள்ளதால் அதிலும் அநுரகுமாரவுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

ஆகவேதான் இம்முறை ஜனாதிபதித்தேர்தலில் 50 வீத வாக்குகளைப்பெற்று வெற்றிபெற குறைந்த பட்சம் 70 முதல் 75 இலட்சம் வாக்குகளையாவது பெற வேண்டிய சூழலில் கடந்த 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 4 இலட்சத்து 18553 வாக்குகள் மட்டும் பெற்ற அநுரகுமாரவின் வாக்குகளின் எண்ணிக்கை 17 மடங்குகளால் அதிகரிக்கும், அந்தளவுக்கு அநுரகுமாரவுக்கு ஆதரவான மக்கள் புரட்சி வெடிக்கும் என்பது சாத்தியமற்றது. அத்துடன் ரணிலுக்கு வாக்களிப்பவர்கள் பெரும்பாலும் சஜித்துக்கும் சஜித்துக்கு வாக்களிப்பவர்கள் பெரும்பாலும் ரணிலுக்கும் நாமல் ராஜபக்சவுக்கு வாக்களிப்பவர்கள் பெரும்பாலும் ரணிலுக்குமே விருப்புவாக்குகளை அளிக்கும் சாத்தியம் அதிகம் இருப்பதால் விருப்பு வாக்குகள் விடயத்திலும் அநுரகுமார பலவீனமான நிலையில்தான் இருக்கின்றார்.

(தொடர்ச்சி 16 பக்கம்)

# மரண அறிவித்தல்



தாய் மடி: 15 - 10 - 1924

இறை மடி: 14 - 09 - 2024

## திருமதி. செல்வமலர் சிவஞானசுந்தரம்

**யாழ்ப்பாணம் மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto தனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. செல்வமலர் சிவஞானசுந்தரம் அவர்கள் 14-09-2024 சனிக்கிழமை அன்று இறைவனின் திருவடி எய்தினார்.**

அன்னார் காலஞ்சென்ற விதானை பொன்னையா இஸ்டிராங் குலதுங்கம், சிவக்கொழுந்து பொன்னையா இஸ்டிராங் குலதுங்கம் தம்பதிகளின் அன்பு நிறை இளைய மகளும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு முத்துக்குமாரு, இராஜலக்ஷ்மி முத்துக்குமாரு (கல்வளைப் பிள்ளையார் கோவிலின் முன்னாள் அறங்காவலர்) தம்பதிகளின் அன்பு மருமகளும்,

காலஞ்சென்ற சிவஞாணசுந்தரம் முத்துக்குமாரு அவர்களின் அன்பு மனைவியும்,

காலஞ்சென்றவர்களான இரத்தினமலர் தாமஸ் போயேஜ் ஹன்ட், இராஜகுலசிங்கம் பொன்னையா இஸ்டிராங் குலதுங்கம், அரசகுலசிங்கம் பொன்னையா இஸ்டிராங் குலதுங்கம், விஜயகுலசிங்கம் பொன்னையா இஸ்டிராங் குலதுங்கம், புஷ்பமலர் நாகரத்தினம், சுகிர்தமலர் கனகசபாபதி, யோகமலர் இராஜவல்லவன் அவர்களின் பாசமிகு சகோதரியும்,

முத்துக்குமாரு ஆறுமுகதாஸ், முத்துக்குமாரு முத்துக்குமார சூரியர் (பரமானந்தம்), ஞானரஞ்சிதமலர் முத்துக்குமாரசூரியர், மற்றும் காலஞ்சென்றவர்களான இராஜேஷ்வரி ஆறுமுகதாஸ், விஜயலக்ஷ்மி தியாகராஜா, எலிசா பேடஸ் ஹன்ட் தோமஸ் போயேஜ் ஹன்ட், அமுதவல்லி இராஜகுலசிங்கம், தனலக்ஷ்மி அரசகுலசிங்கம், மார்கிரேட் விஜயகுலசிங்கம், கந்தையா நாகரத்தினம், சுப்பிரமணியம் கனகசபாபதி, பரராஜசிங்கம் இராஜவல்லவன், ஆகியோரின் அன்பு மைத்துனியும்,

திருமதி. விஜயலக்ஷ்மி சுப்பிரமணியம் (விஜி), சிவகுமார், விஜயகுமார், ஜெயகுமார், காலம்சென்ற ராஜகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும்,

பாலசுப்பிரமணியம் இரத்தினசிங்கம், கௌரிதேவி விஜயகுமார், ஜெகதீஷ்வரி ஜெயகுமார், வசந்தாதேவி இராஜகுமார், மற்றும் காலம்சென்றவர்களான சாந்தினி சிவகுமார், பிரேமரஞ்சினி விஜயகுமார் ஆகியோரின் பாசமிகு மாமியாரும்,

பிரசன்னா, சுகன்யா, குபேரன், அபினி, ஆசினி, இரஜீவ்குமார் (பிரேமன்), விமோஷனா, சஞ்சீவ் குமார், உறோஷாந்தகுமார், சங்கீதா, சகானா, ஆரூரன், ஆர்த்திகன், மற்றும் சுரேஷ், விட்டோரியா, தயானா, ஆரன்யா ஆகியோரின் பாசமிகு பேத்தியாரும்,

ஆகாஷ், அஞ்சலி, அர்ஜுன், சச்சின், அர்ஜுன், பிரியன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

***அன்னாரின் பூத உடல் பார்வைக்காக 21-09-2024 சனிக்கிழமை அன்று மாலை 5:00 மணி தொடக்கம் 9:00 மணி வரை, மற்றும் 22-09-2024 ஞாயிற்றுக்கிழமை காலை 8:00 மணி தொடக்கம் 9:30 மணி வரை Ajax Crematorium (364 Finley Avenue Ajax ON LIS 2E3) இல் வைக்கப்பட்டு, அதன் பின்னர் அதே இடத்தில் கிரிகைகளுடன் தகனம் செய்யப்படும்.***

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**மேலதிக தொடர்புகளுக்கு:**

**விஜயலஷ்மி சுப்பிரமணியம் (விஜி): (416) 805-1592, விஜயகுமார் சிவஞானம்: (647)-293-9924**

**ஜெயகுமார் சிவஞானம்: (647)-829-9411, வசந்தாதேவி இராஜகுமார்: 49 15566 176806**

# MORTGAGE
# FINANCIAL SOLUTIONS

- RESIDENTIAL
- COMMERCIAL
- INDUSTRIAL
- CONSTRUCTION
- VACANT LAND




**RESIDENTIAL- COMMERCIAL**

- **Purchase**
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- **Refinance**
- **Renewal**
- **Equity line of Credit**

Contact Us Today

**NESAN**
*Subramaniam*
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

**Powered By**

MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Mortgage Agent level 1 Licence # M15001465
Mortgage Alliance, Brokerage #10330

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

# குப்பி விளக்கின் திரியின் தீப்பற்றி மூதாட்டி மரணம்

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

குப்பி விளக்கின் மூலம் உடலில் தீப்பற்றி மூதாட்டி ஒருவர் உயிரிழந்துள்ளார். கிளாலி, எழுதுமட்டுவாள் பகுதியைச் சேர்ந்த நிக்லாஸ்பிள்ளை வல்லமரி (வயது 88) என்ற 9 பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், கடந்த 16ஆம் திகதி குறித்த மூதாட்டி வெளியே செல்வதற்கு குப்பி விளக்கினை பயன்படுத்தியுள்ளார். இதனால் அவர்மீது தீப்பற்றியது. இந்நிலையில் உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றையதினம் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# வடக்கு மாகாணத்தில் நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ள 32 ஆயிரம் வீட்டு திட்டத்திற்கான நிதி மூலத்திற்கு அங்கீகாரம்!

வடக்கு மாகாணத்தில் சன் பவர் குழுமத்தினால் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள 32 ஆயிரம் வீடுகளுக்கான நிதி மூலத்திற்குரிய அங்கீகாரம் கிடைத்துள்ளது. அவுஸ்திரேலியாவை தளமாகக் கொண்ட வங்கி ஒன்றின் ஊடாக இந்த திட்டத்திற்கான நிதி வழங்கப்படவுள்ளது. தலா 50 இலட்சம் ரூபா செலவில் முற்றுமுழுதாக இலவசமாக பயனாளர்களுக்கு இந்த வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்படவுள்ளன.

வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ள சன் பவர் குழுமத்தினால் சுமார் நான்காயிரம் ஏக்கர் காணியில் சூரிய மின்கல பூங்கா (Solar Park) நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கான முழுமையான காணி விடுவிக்கப்பட வேண்டியுள்ளது. இதேவேளை சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை கடன் விடுவிப்பு தொடர்பான சான்றுபடுத்தல் பெறப்படவுள்ளது. இந்த இரண்டு செயற்பாடுகளும் இறுதி கட்டத்தை எட்டியுள்ள நிலையில், இலவச வீட்டு திட்டத்திற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

தலா ஐம்பது இலட்சம் ரூபா செலவில் 32 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. வீட்டு நிர்மாணப்பணிகள் அனைத்தும் சன் பவர் குழுமத்தினால் முன்னெடுக்கப்படவுள்ளன. வீடு முழுமையாக நிர்மாணிக்கப்பட்டதன பின்னரே பயனாளர்களிடம் கையளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்குரிய முன்மொழிவிற்கான அனைத்து அனுமதிகளும் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# யாழ்ப்பாணத்தில் உள்ள ஹொக்கி அணியினரோடு வட்டுக்கோட்டை காவேரி கலா மன்றம் இணைந்து, நடத்திய ஹொக்கி சுற்றுப் போட்டி

யாழ்ப்பாண. மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஹொக்கி அணியினரோடு காவேரி கலா மன்றம் இணைந்து, ஹொக்கி விளையாட்டு போட்டியை வைப்பதற்கூடாக சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்பி சூழலியல் சார்ந்த விடயங்களில் அதிகமான பங்களிப்புகளை கொடுக்க வேண்டும் என்ற நோக்கில் ஹொக்கி போட்டியானது 17-09-2024 அன்று நடாத்தப்பட்டது.

குறிப்பாக தொழுநோயினால் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கின்றபடியினால் அவைகளில் இருந்து நாம் தற்காத்துக் கொள்வதற்கான விழிப்புணர்வை பெறுவதற்கான ஒரு ஊக்கத்தையும் இந்த செயற்பாடுகள் கொடுக்கும் என்று நம்பிக்கையுடன் ஆரம்பித்த KKM SHE Hockey tournament - 2024 இறுதிப்போட்டி யாழ்ப்பாண கல்லூரியின் மைதானத்தில் மிகவும் சிறப்பாக 17.09.2024 அன்று நடைபெற்றது.

இதில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வி.பி.எஸ்.டி.பத்திரன, யாழ்ப்பாண பல்கலைக்கழக உடற்கல்வி பணிப்பாளர் திரு. கே.கணேஷானந்தன், சுற்றுச்சூழல் அதிகார சபை அதிகாரி, காவேரி கலா மன்றத்தின் நிர்வாக உத்தியோகத்தர் இன்பராஜ் சஹானா, யாழ்ப்பாண கல்லூரி உடற்கல்வி இயக்குனர் திரு. குகன் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டார்கள்.

ஆண் பெண் இருபாலர்களின் இறுதிப்போட்டியும் மிக சிறப்பாக நடைபெற்றது. பெண்கள் அணியில் பல்கலைக்கழகம் முதலாவது இடத்தையும் பண்டத்ரி யுனிற்றட் இரண்டாம் இடத்தினையும், யாழ்ப்பாண கல்லூரி பழைய மாணவர்கள் மூன்றாம் இடத்தினையும், ஆண்கள் அணியில் முதலாம் இடத்தினை யாழ்ப்பாண பல்கலை கழகமும், இரண்டாம் இடத்தில் யாழ்ப்பாண கல்லூரி பழைய மாணவர்களும் மூன்றாம் இடத்தினை பழைய மாணவர் crimson னும் பெற்றுக்கொண்டனர்.





(13 பக்கம் தொடர்ச்சி)

# இலங்கையின் அடுத்த ஜனாதிபதி யார்?

கே. பாலா

அதேவேளை சஜித் பிரேமதாசவுடன் தமிழ், முஸ்லிம் கட்சிகள் கூட்டணி அமைத்திருந்தாலும் அதனை ஒரு பலமாக கருதுமளவுக்கு அந்தக் கூட்டணிக் கட்சிகளிடையில் ஒற்றுமை இல்லாத நிலையுள்ளது. உதாரணமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் ரவூப் ஹக்கீமும் ஒரு சில எம்.பி.க்களும் சஜித்துடன் நிற்கின்றார்கள். ஆனால் அக்கட்சியின் ஏனைய எம்.பி.க்கள் ரணிலுடன் நிற்கின்றார்கள். அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் சஜித்துடன் நிற்கின்றார். அவரின் கட்சி எம்.பி.க்கள் ரணிலுடன் நிற்கின்றார்கள், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோகணேசன் சஜித்துடன் நிற்கின்றார் .அவரின் கட்சி எம்.பி. ரணிலுடன் நிற்கின்றார். இலங்கை தமிழரசுக்கட்சியின் எம்.பி.களான சுமந்திரன், சாணக்கியன் சஜித்துடன் நிற்கின்றனர். கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா. சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. ஆகியோர் ரணிலுடன் நிற்கின்றனர். ஸ்ரீதரன் தலைமையிலான ஏனையவர்கள் தமிழ் பொது வேட்பாளருடன் நிற்கின்றனர். இவ்வாறான நிலையில் சஜித்துக்கு எதிர்பார்க்குமளவுக்கு தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் வாக்குகள் கிடைக்குமென எதிர்பார்க்க முடியாது.

தற்போது ஜனாதிபதியாகவும் ஜனாதிபதி வேட்பாளருமாகவுமிருக்கும் ரணில் விக்கிரமசிங்கவுடன் கோத்தபாய ராஜபக்சவை ஜனாதிபதியாக்கிய, சிங்கள வாக்குகளை வேட்டையாடக்கூடிய பொதுஜன பெரமுனவின் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், எம்.பி.க்கள் என 102 பேர் உள்ளனர். அத்துடன் ஐக்கியதேசியக் கட்சியின் பெருமளவான வாக்குகளும் அவருக்கு கிடைக்கும் வாய்ப்பும் உள்ளது. அதுமட்டுமன்றி மலையகத்தில் பலம் வாய்ந்த கட்சியான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ரணிலுக்கு ஆதரவளிப்பதுடன் வடக்கிலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அங்கஜன் ராமநாதன் மற்றும் தமிழரசுக்கட்சியின் ஒரு பிரிவினரும் ரணிலுக்கு ஆதரவளிக்கின்றனர்.

அதேவேளை முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் துறைமுகங்கள் அமைச்சு, வீடமைப்பு அமைச்சு. கிழக்குமாகாண ஆளுநர் பதவி, மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் பதவி என்பனவற்றைக் கோரி சஜித் பிரேமதாசவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளதாகவும் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதில்லை என்ற உத்தரவாதத்தையும் பெற்றுள்ளதாகவும் தகவல்கள் கசிந்துள்ளதால் கிழக்கு மாகாண தமிழ் மக்களில் பலரும் விரும்பியோ விரும்பாமலோ ரணிலுக்கு ஆதரவளிக்கும் மனோ நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதன் மூலம் ரணில் விக்கிரமசிங்க மூவினமக்களின் வாக்குகளையும் பெறக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

எனவே ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாசவை தோற்கடித்து அநுரகுமார திசாநாயக்க வெற்றிபெறுவாரானால் அது உண்மையில் இலங்கையின் வரலாற்றில் பொன் எழுத்துக்களினால் பொறிக்கப்பட வேண்டிய வெற்றியாகவே அமைந்திருக்கும். அவ்வாறான ஒரு வெற்றிக்கு "அரகலய" போன்றதையும் விட வலுவான மக்கள் புரட்சி வெடிக்க வேண்டும்.

# இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள தமிழ்ப் பொது வேட்பாளருக்கு தனது முழுமையான ஆதரவை தெரிவித்துள்ள கனடிய தமிழர் தேசிய அவை

கனடியத் தமிழர் தேசிய அவை
National Council of Canadian Tamils
Conseil National de Tamouls Canadien

இலங்கைத் தீவில் நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள தமிழ்ப் பொது வேட்பாளரால் வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையை, கனடிய தமிழர் தேசிய அவை வரவேற்று அதற்கான முழுமையான ஆதரவையும் தெரிவிக்கிறது.

சிவில் சமூகங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கிராமிய அமைப்புகள், மாணவர் அமைப்புகள், தமிழர் தாயகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் என்பன இணைந்து "தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு" என்ற ஆற்றலுள்ள அணியாக ஒன்றிணைந்துள்ளன. இந்த ஒன்றிணைவின் ஊடாகத் தமிழ்ப் பொது வேட்பாளர் அறிவிப்பும், வேட்பாளர் அறிக்கையையும் வெளிவந்துள்ளன.

இந்த ஒற்றுமையானது, தமிழ் மக்களின் கூட்டு அடையாளத்தை வலுப்படுத்துவதற்கு ஒரு புதிய நம்பிக்கையையும் வலுவான அடித்தளத்தையும் தருகிறது. இலங்கையின் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஏனைய வேட்பாளர்கள் எவரும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை நிறைவு செய்வதில் அக்கறை காட்டாது, தமிழ் மக்களை அடிபணியச் செய்வதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு அதிகாரத்திற்காகப் போட்டி போட்டு வருகின்றனர்.

ஆங்கிலேயர்கள் இலங்கைத் தீவை விட்டு வெளியேறியதிலிருந்து கடந்த 76 ஆண்டுகளாக இந்நிலைமை தொடர்கிறது. ஏனைய வேட்பாளர்களுக்கு வாக்களிப்பது என்பது தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்படுவதையும், தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் தமிழின அழிப்பையும் ஏற்றுக் கொள்வதற்கு ஒப்பானதாகும்.

எனவே, தமிழ் மக்கள் இத்தேர்தலைப் பயன்படுத்தி, தமது நிலைப்பாடு குறித்து அனைவருக்கும் ஒரு தெளிவான செய்தியை அறிவிக்க வேண்டும்.

தமிழ்த் தேசியப் பொது வேட்பாளர் பின்வரும் முக்கிய விடயங்கள் உள்ளடக்கிய தேர்தல் அறிக்கையை வெளியிட்டு இருக்கின்றார். (1) தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய ஒரு தேசம். (2) மாறி மாறி ஆட்சிக்கு வந்த இலங்கை அரசுகளின் இனவழிப்புகளால் தமிழ் மக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளனர். (3) இலங்கை அரசுகளால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட தமிழின அழிப்புக்கான சர்வதேச விசாரணை மற்றும் தண்டனை வழங்கும் பொறிமுறை, தமிழின அழிப்புக்கான பரிகார நீதி என்பவற்றைத் தமிழ் மக்கள் கோருகின்றனர்.

தமிழர் தாயகப் பகுதிகளில் வாழும் தமிழர், சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பதன் மூலம், தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் அறிக்கைக்கு வாக்களிக்கிறீர்கள். தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவு கொடுப்பதன் ஊடாக ஒரு தெளிவான செய்தியை கொடுக்கின்றீர்கள்.


தமிழ் மக்களாக ஒன்றிணைந்து எமது மக்களின் நியாயமான வேணவாக்களை நிறைவேற்றுவதற்கான கூட்டுச் செயற்பாட்டைத் தொடங்குவோம்.

நன்றி!
கனடியத் தமிழர் தேசிய அவை

கனடிய செய்திகள் Canadian News

# "பிரிந்து நின்ற எமது தமிழினம் ஒரு தேசமாக எழுந்த நின்று குரல் எழுப்பும் வாய்ப்பை" தமிழ் பொதுவேட்பாளர் "என்னும் எழுச்சி ஏற்படுத்தியுள்ளது"

முன்பக்கத் தொடர்ச்சி




"கடந்த பல வருடங்களாக இலங்கை அரசியலிலும் தமிழர் அரசியலிலும் பல கூறுகளாக பிரிந்து நின்ற எமது தமிழினம் ஒரு தேசமாக எழுந்த நின்று இணைந்து குரல் எழுப்பும் வாய்ப்பை " தமிழ் பொதுவேட்பாளர்" என்னும் எழுச்சி ஏற்படுத்தியுள்ளது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இந்த முயற்சி ஒரு சாதாரணமான விடயமல்ல. தமிழ் மக்களாகிய எமது எதிர்காலத்தை தீர்மானிக்கவும் திட்டங்களைத் தயாரிக்கவும் ஏற்ற ஒரு ஆரம்பப் புள்ளியாகவே நாம் இந்த " தமிழ் பொதுவேட்பாளர்" என்னும் முக்கிய கருப்பொருளைக் கருத வேண்டும்.

கடந்த காலங்களில் பல்வேறு கட்சிகள்.போராளி இயக்கங்கள் மற்றும் அமைப்புக்கள் என பிரிந்து நின்ற தமிழ் மக்களாகிய நாம் இந்த அவசியமான தருணத்தில் " தமிழ் பொதுவேட்பாளர்" என்னும் கருத்தியலின் அடிப்படையில் ஒன்றுபட்டுள்ளோம். இந்த ஒற்றுமையையும் இணைவையும் நாம் இழந்து விடக்கூடாது. அதைக் கட்டிக் காக்க வேண்டும். எமக்கான ஒரு பொது வேட்பாளரை தெரிவு செய்த பணியானது ஒரு சாதாரணமான ஒன்றாக இருக்கவில்லை என்பதை இந்த மண்டபத்தில் அமர்ந்திருப்பவர்கள் அனைவரும் அறிவார்கள். சுமார் எட்டு மாதங்கள் பல கலந்துரையாடல்களை நடத்திய பல சவால்களைச் சந்தித்தே இந்த முடிவு எடுக்கப்பட்டது. அதன் பின்னரே தமிழ்ப் பொது வேட்பாளரை தெரிவு செய்யும் கட்டம் வந்தது. அதுவும் இலகுவானதாக இருக்கவில்லை. எனவே மிகவும் சிரமங்களையும் சவால்களையும் சந்தித்து முடிவு எடுக்கப்பட்ட " தமிழ் பொதுவேட்பாளர்" என்னும் கருத்தியல் அழிக்கப்பட்டோ அன்றி ஒதுக்கப்பட்டோ போய்விடக்கூடாது. நாம் அனைவரும் ஒன்று பட்டு இந்த கருத்தையும் எழுச்சியையும் பயன்படுத்த வேண்டும்.



மறுபக்கத்தில் சுமந்திரன் போன்றவர்கள் இதை எதிர்க்கின்றார்கள். சுமந்திரன் போன்றவர்கள் கடந்த 40 வருடங்களுக்கு முன்னர் எமது போராட்டத்தின் ஆரம்பக் கால கட்டத்தில் றோயல் கல்லூரியிலும் சட்டக்கல்லூரியிலும் படித்துக் கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் உயர் கல்வியை மேற்கொண்டிருந்த எத்தனையோ தமிழ் மாணவர்கள் விடுதலை இயக்கங்களில் இணைந்து போரிட்டு தங்கள் உயிர்களையும் அர்பபணித்துள்ளார்கள் . ஆனால் இவ்வாறான அர்ப்பணிப்பையோ அன்றி தியாகத்தையோ செய்யாத சுமந்திரன் தான் கல்வி கற்று முடித்துவிட்டு எங்கள் வரலாற்றை விளங்கிக் கொள்ளாதது போன்று பொய்களைச் சொல்லி வருகின்றார். அல்லது மறுக்கின்றார். அவ்வாறனவர்களும் நாம் உண்மையை எடுத்துரைக்கும் வண்ணம் " தமிழ் பொதுவேட்பாளர்" என்னும் கருத்தியல் போராட்டம் வெற்றி பெற உழைக்க வேண்டும். மேலும் எமது தற்போதைய ஒற்றுமையை மேலும் வலுப்பெறச் செய்யவும் நாம் கடுமையாக தொடர்ந்து உழைக்க வேண்டும்"




இவ்வாறு கனடாவில் நடைபெற்ற " தமிழ் பொதுவேட்பாளர்" என்னும் எழுச்சிக்கு ஆதரவு வழங்கும் கூட்டத்தில் உரையாற்றிய ஈபிஆர்எல்எவ் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் ராஜா யோகராஜா அழுத்தமாகத் தெரிவித்தார்.

கனடா மார்க்கம் நகரில் உள்ள கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைமையக கலந்துரையாடல் மண்டபத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் அவரது உரை முக்கியமான ஒன்றாக கருதப்பட்டது. அங்கு உரையாற்றிய இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த திரு வீர சுப்பிரமணியம் அவர்களும் தனது உரையில் சில முக்கியமான தகவல்களை எடுத்துரைத்தார்.







அவர் தனது உரையில் "இலங்கை தமிழரசுக் கட்சியின் அதிகளவு அங்கத்தவர்கள் " தமிழ் பொதுவேட்பாளர்" என்னும் கருத்தியல் ஆயுதத்தை தமது கைகளில் கொண்டுள்ளார்கள். மாறாக தன்னலம் கொண்ட சில தமிழ் தலைவர்களே ஏனைய ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களை ஆதரிக்கின்றார்கள். பல தியாகங்களை அரங்கேற்றிய திருகோணமலை மண்ணின் மைந்தர்கள் சேர்ந்து " தமிழ் பொதுவேட்பாளர்" என்னும் அம்சத்தை வரவேற்று அங்கு தீவிர பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றார்கள்.

வடக்கு கிழக்கு எங்கும் " தமிழ் பொதுவேட்பாளர்" என்னும் கருத்தியலுக்கும் அரசியல் எழுச்சிக்கும் ஆதரவு பெருகி வருகின்றது. எனவே நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து தொடர்ச்சியாக உழைத்து எமது இனத்தைக் காப்பாற்றுவோம்" என்றார்.

மேற்படி கூட்டத்தில் நிமால் விநாயகமூர்த்தி உட்பட சிலரும் உரையாற்றினார்கள்.

Ganesh – Local Journalism Initiative Reporter - 1



கனடிய செய்திகள் Canadian News

முன்பக்கத் தொடர்ச்சி

# "தாம் வாழும் சமூகத்தின் மீது அக்கறை கொண்டவர்களே இலக்கியவாதிகளாக பிரகாசிக்கின்றார்கள்"

## கனடாவில் கவிஞர் "ஆரணி"யின் நினைவிடைத்தோய்தல் கவிதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி புகழாரம்



"தாம் வாழும் சமூகத்தின் மீது அக்கறை கொண்டவர்களே இலக்கியவாதிகளாக பிரகாசிக்கின்றார்கள். அத்துடன் அவர்கள் சமூகத்தின் அங்கமாக விளங்கும் மாந்தர், அரசு மற்றும் அமைப்புக்கள் ஆகியவற்றை நாடி பிடித்துப் பார்த்து தமது அவதானிப்பை கவிதை போன்ற இலக்கிய வடிவங்களின் மூலம் வெளிக்கொண்டுவந்து பிரச்சனைகளுக்கான தீர்வையும் தேடுகின்றவர்களாக விளங்குகின்றார்கள். இந்த வகையில் இலக்கியவாதிகள் கூட ஒரு சமூக வைத்தியர்கள் என்ற முடிவிற்கு நாம் வரலாம்".























இவ்வாறு கடந்த 14-09-2024 சனிக்கிழமையன்று மாலை கனடா மார்க்கம் நகரில் உள்ள அரச சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற யாழ்ப்பாணம் முன்னாள் அரசாங்க அதிபரும் கவிஞர் "ஆரணி" என்னும் புனைபெயரைக் கொண்டவருமான அம்பலவாணர் சிவபாலசுந்தரன் அவர்களின் "நினைவிடைத்தோய்தல்" கவிதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி புகழாரம் சூட்டினார்.

பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மேற்படி கவிதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களில் ஒருவருமான ஆர்.என். லோகேந்திரலிங்கம் வரவேற்புரையையும் அறிமுக உரையையும், கவிஞர் அகணி சுரேஸ் அவர்கள் வெளியீட்டு உரையையும் முனைவர் வாசுகி நகுலராஜா அவர்கள் ஆய்வுரையையும் டாக்டர் போல் ஜோசப் அவர்கள் நயப்புரையையும் ஆற்றினார்கள். மேலும் திருவாளர்கள் கிருஸ்ணபிள்ளை திருவருள். சிவன் இளங்கோ. க. ரவீந்திரநாதன். சி இளஞ்செழியன். குருசாமி சுப்பிரமணியம், தென்புலோலியூர் கிருஸ்ணலிங்கம் ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்கினார்கள்.

விழா நிகழ்ச்சிகளை திருமதி ஜோதி ஜெயக்குமார் சிறப்பாக தொகுத்து வழங்கினார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் தனது உரையில் பின்வருமாறு தெரிவித்தார்.

கலை இலக்கியவாதிகளின் பங்களிப்புக்கள் எமது தமிழ் இனத்திற்கு தற்காலத்தில் மிக அவசியமாகத் தேவைப்படுகின்றன. பல வகையான அடக்குமுறைகளினால் நொந்து போயுள்ள எம் இனத்தின் அவலங்களையும் தேவைகளையும் அவற்றிக்கான தீர்வையும் தீர்க்க தரிசனத்துடன் படைக்க வேண்டிய பொறுப்பு எம் மத்தியில் வாழும் படைப்பாளிக்களுக்கும் கவிஞர்களுக்கும் உள்ளது. அவர்களின் எமது தாயகக் கவிஞர் ஆரணி அவர்கள் தான் வாழும் சமூகத்தினதும் இனத்தினதும் அவலங்களை நல்ல கலையம்சங்களோடு கவிதைகளாக வடித்து அங்கிருந்து நூல்களை இங்கு கொண்டுவந்துள்ளார். அவருக்கு நாம் ஆதரவையும் ஊக்குவிப்பையும் வழங்க வேண்டும்" என்றார்.

அங்கு தலைமையுரையாற்றிய பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்கள் தனது உரையில் "எம் மத்தியில் வெளிவருகின்ற இலக்கியப் படைப்புக்களை நாம் தற்காலத்தில் மூன்று தளங்களில் வைத்து பார்க்க வேண்டும். தாயகம் - தமிழகம் - மற்றும் புலம் பெயர் தேசம் ஆகிய மூன்றுதளங்களில் எமது படைப்புக்கள் பார்வைக்கும் விமர்சனத்திற்குமாக காட்சிப்படுத்தப்பட வேண்டும். அந்த வகையில் எமது இன்றைய நூலாசிரியர் தாயகக் கவிஞர் ஆரணி அவர்கள் தனது கவிதை நூலை தாயகத்தில் வெளியிட்டு வைத்து விட்டு தற்போது நாம் வாழுகின்ற புலம் பெயர் தேசமான கனடாவிற்கு கொண்டு வந்துள்ளார். அவர் ஒரு சரியான இடத்திற்கே கொண்டு வந்துள்ளார் என்றே நாம் கருதுகின்றேன். காரணம் கனடாவில் நாம் பல இலக்கிய அமைப்புக்களை நடத்தி வருகின்றோம். இங்கு நூற்றுக்கு மேற்பட்ட கவிஞர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். கனடாவில் உள்ள கவிஞர்கள் மற்றும் கவிதைச் சுவைஞர்கள் மத்தியில் இந்த நூல் வெளியிடப்படுகின்றது பெருமைக் குரியதும் உயர்ந்த அங்கீகாரத்தைப் பெறக்கூடியதுமாகிய ஒரு விடயமாகும். எனவே நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து கவிதை நூலின் ஆக்ககர்த்தா அம்பலவாணர் சிவபாலசுந்தரன் அவர்களை பாராட்டுவோம் கொண்டாடுவோம்" என்றார்.

மேற்படி வெளியீட்டு விழாவில் சுருவில் சரவணை மற்றும் தீவகம் ஆகிய இடங்களைச் சேர்ந்த நண்பர்கள் உறவினர்கள் மற்றும் இலக்கியவாதிகள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.அவர்கள் அனைவரும் நூலின் பிரதிகளை அன்பளிப்புக்களை வழங்கி நூலாசிரியரிடமிருந்து பெற்றுச் சென்றார்கள்.

இறுதியில் பதிலுரையாற்றிய நூலாசிரியர் அவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் உரையாற்றினார். தனது எழுத்துக்களுக்கும் கருத்துக்களுக்கு மதிப்பளித்து இந்த விழாவை ஏற்பாடு செய்த விழாக்குழுவினருக்கும் நன்றி தெரிவித்து தனது படைப்புக்கள் பற்றிய திறந்த விமர்சனங்களை வழங்கிய அனைத்து உரையாளர்களுக்கும் நன்றி தெரிவித்தார். சுருவில் மற்றும் சரவணை மக்கள் ஒன்றியங்கள் சார்பில் பாராட்டுக் கேடயங்கள் கவிஞர் ஆரணி அவர்களுக்கு வழங்கப்பெற்றன.

**- சத்தியன்**


**TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY**

எல்லாவிமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
aches
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடதய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Head-
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்

**Mrs. K. Vasanthakumar** ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.

**(416) 754-4024**

**5200 Finch Ave., East -- Suit #349**
**Scarborough, ON M1S 4Z5**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# நெடுந்தாரகை பயணிகள் படகை வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் வடக்கு ஆளுநர் உத்தியோகபூர்வமாக கையளித்தார்




சுமார் ஒரு வருடத்தின் பின்னர் நெடுந்தாரகை பயணிகள் படகு 19-09-2024 அன்று தனது சேவையை ஆரம்பித்துள்ளது. படகில் மேற்கொள்ளப்பட்ட திருத்தப்பணிகளை தொடர்ந்து வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களால், வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் நெடுந்தாரகை பயணிகள் படகு அன்று காலை உத்தியோகப்பூர்வமாக கையளிக்கப்பட்டது. நெடுந்தீவு இறங்குத்துறைக்கு சென்ற ஆளுநர் அவர்கள், படகை பார்வையிட்டார். இதுவரை காலம் மாகாண சபையின் பொறுப்பில் காணப்பட்ட இந்த படகானது 52 மில்லியன் ரூபா செலவில் திருத்தப்பட்டு, வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

தமது தீவில் நீண்டகாலமாக காணப்பட்ட போக்குவரத்து பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக்கொடுத்தமை தொடர்பில், ஆளுநர் அவர்களுக்கு நெடுந்தீவு மக்கள் நன்றியை தெரிவித்தனர். ஆளுநர் அவர்களின் கடும் முயற்சியின் பயனாக நெடுந்தாரகை மீண்டும் தமது சேவையை ஆரம்பிப்பதாகவும் மக்கள் குறிப்பிட்டனர்.

நெடுந்தாரகை பயணிகள் படகின் திருத்தப் பணிகளுக்காக துரித நடவடிக்கையை மேற்கொண்ட மேன்மை தங்கிய ஜனாதிபதிக்கும், ஜனாதிபதி செயலகத்திற்கும், துறைசார் அமைச்சுக்கும் இதன்போது ஆளுநர் அவர்கள் நன்றியை தெரிவித்தார். தீவுகளுக்கான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் கௌரவ ஆளுநர் அவர்கள் தெரிவித்தார்.



பயணிகள் சேவையை ஆரம்பித்துள்ள நெடுந்தாரகை படகு தினமும் நெடுந்தீவில் இருந்து ஒரு தடவை குறிகட்டுவான் இறங்குத்துறைக்கு பயணிக்க உள்ளது. நெடுந்தாரகை படகில் ஒரு தடவையில் 80 பேர் பயணிக்க முடியும்.




# கிளிநொச்சியில் தருமபுரம் பொலிசார் வேட்பாளர்களின் கட்டவுட் மற்றும் பெனர், துண்டு பிரசுரங்களை அகற்றினர்



நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான பிரச்சார நடவடிக்கைகள் 18.09.2024 அன்று நள்ளிரவுடன் நிறைவு பெற்றதை அடுத்து கிளிநொச்சியில் தருமபுரம் பொலிசார் வேட்பாளர்களின் விளம்பரங்களுக்காக வைக்கப்பட்டிருந்த கட்டவுட் மற்றும் பெனர், துண்டு பிரசுரங்களை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

# ரொறன்ரோ சர்வதேச தமிழ்த் திரைப்பட விழா 20ம் திகதி வெள்ளிக்கிழமை கனடா மார்க்கம் நகரில் ஆரம்பமாகின்றது

கடந்த பல வருடங்களாக வெற்றிகரமாக நடைபெற்று வருகின்ற ரொறன்ரோ சர்வதேச தமிழ்த் திரைப்பட விழா வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை வழமை போல எமது வாசகர்கள் மற்றும் திரைப்பட ஆர்வலர்கள் ஆகியோரோடு பகிர்ந்து கொள்கின்றோம்.

இந்த வருடமும் இலங்கை இந்தியா போன்ற நாடுகளிலிருந்து பல திரைப்படங்கள் 21ம் 22ம் திகதிகளில் திரையிடப்படவுள்ளன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலதிக விபரங்களுக்கு இங்கு காணப்படும் விளம்பர அறிவித்தல்களைப் பார்த்து இணையவழியில் தொடர்பு கொள்ளவும்.




# புதுவைப் பேராசிரியரும் தமிழறிஞருமான மு. இளங்கோவன் கனடாவிற்கு வருகின்றார்

கனடாவில் புதுவைப் பேராசிரியரும் தமிழறிஞருமான மு. இளங்கோவன் அவர்களது மூன்று நூல்கள் வெளியிடப்பெறவுள்ளன.

விபரங்களுக்கு இங்கே காணப்பெறும் அறிவித்தலைப் பார்க்கவும் அல்லது மருத்துவர் போல் ஜோசப் அவர்களை (416) 986-4903 என்னும் இலக்கத்தில் அழைக்கவும்.



# கூத்தாட்டிகளின் கூடாரமா கூட்டமைப்பு?

- (எஸ்.ஆர்.ராஜா) -

இலங்கையில் தற்போது நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் பல வேட்பாளர்கள் போட்டியிடுகின்றார்கள். வரலாற்றில் அதிக வேட்பாளர்கள் போட்டியிடும் ஜனாதிபதித் தேர்தலாக இது காணப்பட்டது. இந்தத் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களின் சஜித் பிரேமதாஸா, ரணில் விக்கிரமசிங்க, அனுரகுமார திஸநாயக்க மற்றும் முன்னாள் ஜனாதிபதியின் மகன் நாமல் ராஜபக்ஸ ஆகியோர் போட்டியிடுகிறார்கள். இவர்களின் முக்கியமாக முதல் மூன்று வேட்பாளர்களுக்கும் இடையே கடுமையான போட்டி நிலை ஒன்று காணப்படுகின்றது.

இவர்களின் சஜித் பிரேமதாஸா இலங்கையில் பெரும்பாலான சிறுபாண்மைக் கட்சிகளை தன்னுடன் இணைத்துக் கொண்டு தேர்தலில் போட்டியிடுகின்றார். அத்துடன் இவர் தனது ஆட்சியின் 13 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்துவது தொடர்பான கருத்தினை முன்வைத்துள்ளார்.

அதேபோல் சுயேட்சை வேட்பாளராக போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் மஹிந்த ராஜபக்ஸ அணியில் வெற்றிபெற்று நாடாளுமன்றம் சென்ற பெரும்பாண்மையான பாராளுமன்ற உறுப்பினர்களை தன்னுடன் இணைத்துக் கொண்டு போட்டியிடுகின்றார். இவர் பொதுவாக கட்சிகளை உடைப்பதில் வல்லவர் அந்தவகையில் பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர்கள் அனைவரையும் தனது பக்கம் ஈர்த்துள்ளார்.

இவர் கடந்த ஆட்சிக்காளத்தில் ஏற்பட்ட பாதிப்புக்களை மீண்டும் மக்களுக்கு நினைவுபடுத்தி வரிசை யுகம் தோன்றாமல் இருக்க வேண்டுமாயின் எனக்கு வாக்களிக்க வேண்டும் என்று அச்சுறுத்தும் பாணியில் செயற்பட்டு வருகின்றார்.

அநுரகுமார திஸ ாநாயக்க இவர் தனது சிறந்த பேச்சாற்றல் மற்றும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கும் போது அவற்றை புள்ளிவிபரங்களுடன் வெளிப்படுத்தும் ஆற்றல் கொண்ட வேட்பாளராவார். இவர் மாற்றம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்றும் தற்போது பாராளுமன்றத்தில் உள்ள அனைவரும் கொள்ளைக்காரர் என்றும் தான் ஆட்சிக்கு வந்ததும் கொள்ளைக் காரர்கள் அனைவருக்கும் தண்டனை வழங்கப்படும் என்றும் அவர்கள் கொள்ளையடித்த சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் என்றும் பிரச்சாரங்களை முடுக்கி விட்டுள்ளார்.





தற்போது கடந்த நான்கு ஐந்து வருடங்களுக்குள் வாக்காளர் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ள 19 முதல் 24 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர் யுவதிகள் பெரும்பாலும் இவரின் பேச்சாற்றல் மற்றும் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களால் கவர்ந்திழுக்கப்பட்டு இவருக்கு வாக்களிப்பதன் மூலம் இதுவரை காலமும் அரசியல் வாதிகள் செய்து வந்த அனைத்து பித்தலாட்டங்களும் முடிவுக்கு வரும் என்ற கோணத்தில் கருத்துக்களை முன்வைத்து அவருக்கு சார்பாக செயற்படும் எண்ணத்திலும் உள்ளார்கள்.

இவை அனைத்தும் தென்னிலங்கையில் காணப்படும் நிலை ஆகும். அவர்களின் ஒரு சில வேட்பாளர்களுக்கு தமிழ் மக்களின் ஆதரவினைப் பெற்றுக் கொடுப்பதில் சிலர் முன்னின்று செயற்பட்டு வருகின்றனர்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட்டுள்ளார் அவருக்கு தமிழ்மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து வாக்களிப்பதன் மூலம் நாம் சிங்கள ஜனாதிபதிகள் மீதான அதிருப்தியை வெளிக்காட்டுவதுடன் சர்வதே சமூகத்திற்கு எமது கொள்கை தொடர்பில் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றாகப் பயணிக்கின்றார்கள் என்றும் எமக்கான தீர்வுகள் முன்வைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்த முடியும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தவகையில் தமிழ்ப்பொது வேட்பாளர் ஆரம்பத்தில் பல தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து உருவாக்கியிருந்தன. இதில் பொதுவாக வடகிழக்கில் இயங்கும் தமிழ்க் கட்சிகளின் டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி. மற்றும் அங்கஜன் இராமநாதன், மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப் படுத்தும் தரப்பினர் ரணில் விக்கிரமசிங்காவினை ஆதரித்து வருகின்றனர். கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி இத் தேர்தலினை தமிழ் சமூகம் புறக்கணிக்க வேண்டும் என்றே குறிப்பிட்டது. தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களில் சிலர் தவிர்ந்த ஏனைய அனைவரும் தமிழ் பொதுவேட்பாளர் பா. அரியனேந்திரன் அவர்களையே ஆதரிக்கும் முடிவினை எடுத்ததுடன், ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்த தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் வேறு கட்சிகளுடன் சேர்ந்து தற்போது புதிய கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கி உள்ளனர். இது கடந்த வருடம் உள்ளூராட்சி தேர்தலை நடத்த உள்ளதாக ரணில் விக்கிரமசிங்க வெளியிட்ட அறிவிப்பினை அடுத்து தமிழரசுக் கட்சி தனித்து போட்டியிடவுள்ளதாக வெளியான அறிவிப்பினை தொடர்ந்து உருவாக்கப்பட்டதே புதிய கூட்டமைப்பாகும். இதன் உருவாக்கத்திற்கு தேசியத் தலைவரால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உடைவுக்கும் வித்திட்டவர் எம்.ஏ.சுமந்திரன் அவர்களே என அப்போது குற்றம் சுமத்தப்பட்டது.

பொதுவேட்பாளரை ஆதரிக்கும் முடிவினையே தமிழரசுக் கட்சியும் எடுக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போது திடீரென வவுனியாவில் கூடிய தமிழரசுக் கட்சியின் உயர்பீடம் கூடி சஜித் பிரேமதாஸாவினை ஆதரிக்கும் முடிவினை அறிவித்தனர். அறிவிப்பு வெளியானதும் பலர் தாம் அத்தகைய முடிவில் உடன்படவில்லை என்றும் இது தனிநபர் முடிவு என்றும் குறிப்பிட்ட அறிக்கைகளை வெளியிட மேலும் சிலர் தாம் கூட்டத்தில் கலந்து கொள்ளாத சந்தர்ப்பத்தில் இது எடுக்கப்பட்டதாகவும் சிலர் தமக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என தெரிவித்து வந்தனர்.

எனினும் பின்னர் மீண்டும் கூடிய தமிழரசுக் கட்சியின் கூட்டத்தில் சஜித் பிரேமதாஸாவினை ஆதரிப்பதாக அறிவிப்பு வெளியான போதிலும் ஒரு சிலரைத் தவிர ஏனையவர்கள் பொது வேட்பாளரையே ஆதரிப்பதாக அறிவித்துள்ளனர். இதற்கு மேலும் ஒருபடி காலையில் ஒருவரையும் பின்னர் மாலையில் பிறிதொருவரையும் ஆதரிப்பதாக அறிவிக்கின்றனர். இந்தவகையில் தமிழரசுக் கட்சியின் கொள்கையில் உறுதிப்பாடு இல்லையா அல்லது தமிழரசுக் கட்சியின் கட்டுக்கோப்பானது தற்போது சிதைந்து விட்டதா என பலரும் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

ஒரு சில அரசியல் வாதிகள் தமது சுயஇலாப அரசியலுக்காக தென்னிலங்கை அரசியல் தலைவர்களையே ஆதரிக்க வேண்டும் என்றும் பொது வேட்பாளரை ஆதரிப்பதானது சிங்கள மக்களை எதிரான கோணத்தில் சிந்திக்கத் தோன்றும் என்றும் பொதுவேட்பாளரால் வெற்றி பெற முடியாது என தெரிந்தும் போட்டியிடுவது முட்டாள்தனமான முடிவு எனவும் குறிப்பிட்டு வருகின்றனர்.

இதேவேளை, இலங்கை தமிழரசுக் கட்சியின் ஜனாதிபதி தேர்தல் ஆதரவு நிலைப்பாடு என்பது முற்றுப்பெறாத விமர்சனங்களை எழுப்பி வருகிறது. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கடந்த முதலாம் கடந்த திகதி சஜித் பிரேமதாசவை ஆதரிக்கப்போவதாக அறிவித்த நாள் முதல் இன்று வரை கட்சி மீதான விமர்சனங்கள் மேலோங்கி வருகின்றன.

இதேவேளை, சஜித்தை ஆதரிப்பதாக கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா உள்ளிட்ட தரப்பு அறிவித்த போதிலும் பின்னர் மாலையில் அவர்கள் பொது வேட்பாளரை ஆதரிப்பதாக செய்திகள் வெளியாகி இருந்தது.

இவ்வாறு தமிழரசுக் கட்சியில் இரண்டு பிரிவுகள் காணப்பட்ட நிலையில் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி ஜனாதிபதி தேர்தலில் சுயேட்சை வேட்பாளராக களமிறங்கியுள்ள ரணில் விக்ரமசிங்க எவ்வித முன்னறிவித்தலும் இன்றி வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ல்ஸ் நிர்மலநாதனின் வீட்டிற்கு சென்றுள்ளார். இது வடக்கு - கிழக்கில் அதிக தொகையான வாக்காளர்களை கொண்ட வன்னி மாவட்டத்தின் முக்கிய பாராளுமன்ற உறுப்பினரான சார்ல்ஸ் நிர்மலநாதனை ஜனாதிபதி சந்தித்தபோது, அங்கு வன்னி மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏராளமான தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தர்கள் வருகைதந்துள்ளனர். இந்த சந்திப்பில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணிலை ஆதரிக்கும் நிலைப்பாட்டை ஆதரவாளர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

இது இவ்வாறிருக்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றிக்கு ஆதரவு வழங்குவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் அவர்கள் இறுதிநாள் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது கொழும்பிலுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவின் அரசியல் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு இக்கருத்தை வெளியிட்டார்.

இதன் மூலம் தற்போது தமிழரசுக் கட்சி 3 துண்டகளாக பிளவுபட்டுள்ளதாக தெரிகின்றது. கடந்த காலங்களில் பல்வேறு காரணங்களால் கூட்டமைப்பாக காணப்பட்ட கட்சிகள் பிளவுபட்ட இன்று தனிக் கட்சியான தமிழரசுக் கட்சி கூட துண்டாடப்படும் நிலைக்கு வந்துள்ளமை கவலைக்குரிய விடயமாகும்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த வடமாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம தமிழ் தேசிய கட்சிகள் அனைத்தும் மீண்டும் ஒன்றிணைந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாக செயற்படவேண்டும் என்பதே எமது விருப்பம் என்றும், ஆனால் இனி அது கனவாகவே இருக்கும் என்றும் கூறியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், "தமிழரசுக் கட்சி கட்டுக்கோப்பான கட்சி. அதை யாரும் மாற்ற முடியாது. தேர்தல் காலத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்துக்களை முன்வைப்பார்கள். அதனை கட்சி கூடி பேசி முடிவை அறிவிக்கும். அது கட்சியின் முடிவு. அதில் உடன்பாடு இல்லாத தனிநபர்கள் சில முடிவுகளை எடுக்கும் நிலை உருவாகிறது.

அவ்வாறே இந்த தேர்தல் நேரத்தில் இடம்பெற்றுள்ளது. தமிழரசுக் கட்சிக்கு கொள்கை இருக்கிறது. அது நிலையாக இருக்கும். கட்சி ரீதியில் சுமந்திரன் மீதும் தவறு இருக்கும். ஏனையவர்கள் மீதும் தவறு இருக்கும் அது பேசிக்கொள்ளலாம்.

கட்சி நிலையாக இருக்கும். கருத்துச் சொல்வதற்கு சுதந்திரம் இருக்கு. அதன் அடிப்படையில் அவர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்கின்றனர். என்றார்.

எது எவ்வாறான போதிலும் காலத்திற்கு காலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைப்பதில் பல்வேறு தரப்பினரும் பல்வேறு கோணங்களில் செயற்பட்டு வருகின்றமை உண்மையே. எனினும் எதிர்வரும் காலங்களில் கூட்டமைப்பை ஒழுங்குபடுத்தவேண்டும்

தற்போது பல்வேறு கூத்தாட்டிகளும் கூட்டமைப்பை தமது தாளத்திற்கு ஆட்சி வருகின்றனர். இந்த நிலை மாற்றப்பட வேண்டும் அனைத்துத் தரப்பினரும் இணைந்து (புலம் பெயர் தமிழர்கள் உட்பட) ஒரு உறுதியான நிலைப்பாட்டை உருவாக்கி வலுவான கட்டமைப்பு ஒன்றை உருவாக்க முன்வரவேண்டும். அவ்வாறு செயற்படாத சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களின் இருப்புக்கள் கூடக் கேள்விக்குறியாக்கப்படும் நிலை உருவாகக் கூடும். தற்போது இடம்பெறும் ஜனாதிபதித் தேர்தலின் முடிவிலும் அது தங்கியுள்ளது.

தென்னிலங்கை மக்கள் அனைவரும் தற்போது மாற்றம் ஒன்று அவசியம் என்ற அடிப்படையில் புதிய தலைமைத்துவம் புதிய அரசியல் வாதிகள் புதிய எண்ணம் கொண்ட நபர்களை தேடி தமது வாக்குகளை பயன்படுத்தும் நோக்கில் உள்ளமை அண்மைக் காலங்களில் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களின் மூலம் காணக் கூடியதாக உள்ளது. அவ்வாறான ஒரு தென்னிலங்கையில் ஏற்படுமாயின் எதிர்கால அரசியலில் பல மாற்றங்கள் இடம்பெறும். அதேபோல். தமிழ் மக்களின் அரசியல் கட்டமைப்பிலும் இளம் இரத்தம் - புதிய தலைமுறை - புதிய நோக்க கொண்ட நபர்களின் தேவையினை தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் காலம் வெகு விரைவில் உருவாகலாம்.

# இலங்கை ஜனாதிபதி தேர்தல் குறித்து பெரிதும் அலட்டிக்கொள்ளாத இந்திய ஊடகங்கள்

- சிவா பரமேஸ்வரன்

இலங்கை ஜனாதி தேர்தல் செப்டம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் இந்திய ஊடகங்கள் அது குறித்து பெரிதாக அலட்டிக்கொண்டதாக தெரியவில்லை.

இந்தியாவின் அச்சு மற்றும் இலத்தரணியல் ஊடகங்களை அவதானிக்கும் போது ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது இலங்கையில் தொடர்ச்சியான சீனாவின் பிரசன்னம் அதிகரித்து வரும் நிலையில். கேந்திர ரீதியாக இந்தியாவிற்கு மிகவும் முக்கியமான நாட்டின் நடைபெறும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பிலான செய்திகளை தொடர்ச்சியாக வெளியிடுவதில் இந்திய ஊடகங்களிடையே பெரிய ஆர்வம் இல்லை.

"இலங்கை தனது நீண்ட கால நட்பு நாடு" என்றும் இரு நாடுகளுக்கும் இடையே அறிவுசார் ரீதியாகவும், கலாச்சார, மத மற்றும் மொழியியல் ரீதியாகவும் தொடர்பாடல்கள் இருக்கிறது, அந்த உறவுகள் 2500 ஆண்டுகள் பழமையானது என்று இந்தியா கூறிக்கொள்கிறது.

ஆனால், தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வை உறுதி செய்யும் அரசியல் சாசன திருத்தத்திற்கு வழிவகுத்த "இந்தியாவின் மிகப்பெரிய இராதந்திர தோல்வி" கருதப்படுகின்ற இந்திய இலங்கை உடன்பாடு ஏற்பட்டு 37 ஆண்டுகளுக்கு பிறகு இன்றளவும் தொடர்ச்சியாக ஆட்சியில் இருந்த இலங்கை ஜனாதிபதிகளை தனது குழந்தையான 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைபடுத்த வைக்க முடியவில்லை.

எனினும், இப்போது மேலும் ஒரு ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையிலும், அதில் யார் வெற்றி பெறுவார்கள் என்பதற்கு அப்பாற்பட்டு, இந்தியா தனது அண்டை நாடான இலங்கையுடனான உறவை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் புதிய ஜனாதிபதியுடன் தொடர்ந்து செயல்படும் என்பது தான் யதார்த்தம்.

இலங்கை நடைபெறவுள்ள இந்த ஜனாதிபதி தேர்தலானது இந்தியாவின் பார்வையிலிருந்து அண்மைக்காலத்தில் தனித்துவமாக இருக்க வேண்டும். ஏனென்றால் நாட்டில் பெரும்பான்மையாக தமிழ் பேசும் வேட்பாளர்கள் இம்முறை சுயேட்சையாக போட்டியிடும் இரு தமிழ் வேட்பாளர்கள், தமது வெற்றியைவிட ஒருமைப்பட்டை வலியுறுத்தவே போட்டியிருகிறார்கள்.

நாட்டின் வடக்கு கிழக்கில் வாழும் ஈழத்தமிழர்களின் வாக்குகளை குறிவைத்து பொது தமிழ் வேட்பாளராக பாக்கியசெல்வம் அரியநேத்திரன் போட்டியிருகிறார். அதே போன்று மலையகத்தில் இந்திய வம்சாவளி தமிழர்களின் வாக்குகளை இலக்குவைத்து மயில்வாகனம் திலகராஜ் களத்தில் உள்ளார். இந்த விடயம் குறிப்பாக இந்திய ஊடகங்களின் பார்வையை ஈர்த்திருக்க வேண்டும். ஆனால் துரதிஷ்டவசமாக அந்த ஆர்வமோ, பார்வையோ இந்திய ஊடகங்களில் இல்லை. இலங்கையில் நிலவும் ஆழமான அரசியல் நீரோட்டங்கள் குறித்த புரிதல் அவர்களுக்கு இல்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. ஏனென்றால் அந்த இரு சமூகங்களும் இந்தியாவிற்கு மிகவும் முக்கியமானவை என்பதை அவர் கருத மறந்துவிட்டன.

இலங்கை ஜனாதிபதி தேர்தல் குறித்த செய்திகள் இந்திய ஊடகங்களில் தொடர்ச்சியாக இல்லாவிட்டாலும் அவ்வப்போது வெளிவருகின்றன, ஆனாலும் இந்திய வாசகர் அல்லது பார்வையாளர் மத்தியில் அந்த தேர்தல், அதன் நுணுக்கங்கள் மற்றும் முக்கியத்துவம் குறித்த ஆழமான புரிதலை ஏற்படுத்த அவை தவறிவிட்டன.

நிறைவேற்று அதிகார முறைமை என்றால் என்ன, அது எப்படி செயல்படும், அதன் முக்கியத்துவம் என்ன என்பது குறித்து இந்திய ஊடகங்கள் முழுமையாக அறிந்திருக்கவில்லை. அது மட்டுமின்றி இந்தியத் தேர்தல்கள் போன்று இலங்கை தேர்தலில் வாக்களிப்பு என்பது எளிமையானது அல்ல என்பதையும், இரண்டாவது வேட்பாளர் ஒருவருக்கு வாக்களிக்கும் வழிமுறை இலங்கையில் உள்ளது என்பதையும் இந்திய ஊடகங்கள் பெரிதாக அறிந்திருக்கவில்லை.

இந்திய ஊடகங்கள் மற்றுமல்ல, ஆய்வு நிறுவனங்களும், சுயாதீனமாக ஆய்வுகள் எதையும் மேற்கொள்ளாமல் இந்த தேர்தல் குறித்து இலங்கை ஊடகங்களில் வந்த செய்திகளின் தொக்குப்பையே வெளியிட்டன. எந்தளவிற்கு அவர்களுக்கு புரிதல் இல்லை என்பதற்கு ஒரு உதாரணத்தைக் காட்டலாம்.

டில்லியில் ஆட்சியில் இருக்கும் பாரதிய ஜனதா கட்சிக்கு ஆதரவானது என்று கருதப்படும் விவேகானந்தா ஆய்வு மையம், இந்த ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் வெளியிட்டுள்ள ஒரு கட்டுரையில் நாமல் ராஜபக்சவின் படத்திற்கு பதிலாக சாமல் ராஜபக்சவின் படத்தை பதிவிட்டுள்ளனர்.

இதே போன்று பொதுமக்கள் மத்தியிலும் இலங்கை ஜனாதிபதி தேர்தல் குறித்த ஆர்வம் மிகவும் குறைவாகவே உள்ளது. இலங்கையுடன் கலாச்சார, நிலவியல், மதம் மற்றும் மொழி ரீதியாக மிகவும் நெருக்கமாகவுள்ள தமிழ்நாட்டில் கூட இத்தேர்தல் தொடர்பான செய்திகள் மிகவும் குறைவாகவே உள்ளதை காண முடிகிறது. அத்தி பூத்தாற்போல் எப்போதாவது செய்தி வெளியிட்டாலும், அதுவும் தற்போதைய அதிபர் ரணில் விக்ரமசிங்க வெற்றி ஈட்டுவாரா இல்லையா என்பதையே மையப்படுத்.்.பியுள்ளன.

எனினும் முன்னணி தமிழ் தினசரிகளில் ஒன்றான தினமலர். பொது தமிழ் வேட்பாளர் தொடர்பான செய்தி ஒன்றை வெளியிட்டது. அதுவும் அந்த வேட்பாளரை ஆதரிப்பது குறித்து இலங்கை தமிழரசுக் கட்சிக்குள் நிலவும் உள்முரண்பாடுகள் பற்றியே இருந்தது.

"பொது தமிழ் வேட்பாளருக்கு எதிரான நிலைப்பாட்டை நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கொண்டுள்ளார், ஆனால் அதே கட்சியைச் சேர்ந்த மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான சிவஞானம் சிறீதரன் பொது வேட்பாளரை ஆதரிக்கிறார். இது தமிழ் வாக்குகளைப் பிரிக்கக் கூடும்".

இந்தியாவின் தேசிய ஒலிபரப்பாளரான தூர்தர்ஷனும் (இலங்கையில் ரூபவாஹினி போன்று), டில்லியை தளமாக கொண்டுள்ள ஊடகங்களும் அவ்வப்போது இந்த தேர்தல் குறித்த செய்திகளை வெளியிட்டாலும், தமிழ் பேசும் மக்களின் கோரிக்கைகள், அபிலாஷைகள், கருத்துக்கள் மற்றும் தமிழர்களின் தேசியப் பிரச்சனைக்கான தீர்வு, இந்தியாவால் முன்னெடுக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டம் ஆகியவை குறித்து அவர்களின் செய்தி கவனம் செலுத்தவில்லை.

அவர்களின் செய்தி நிலைப்பாடு என்பது அடிப்படையில் யார் முக்கிய வேட்பாளர்கள் என்றும் அவர்களின் பின்னணி, நாட்டின் பொருளாதரப் பிரச்சனை, புதிய அதிபர் இந்தியாவுடன் எப்படியான உறவுகளை பேணுவார் என்று தான் மையப்படுத்தியிருந்ததே தவிர, இந்தியாவிற்கு தொடர்புடைய பிரச்சனைகளில் வேட்பாளர்களின் நிலைப்பாடு என்ன என்பது பற்றி வாசகர்களுக்கு தெளிவாக எடுத்துரைப்பதில் தோல்வியடைந்துள்ளன.

ஒப்பீட்டளவில் சென்னையிலிருந்து இயங்கும் "தி இந்து" தினசரி இந்த தேர்தல் குறித்து கூடுதல் செய்திகளை வெளியிட்டன. அதற்கு முக்கிய காரணம் என்பது கொழும்பில் அவர்களுக்கு முழுநேர செய்தியாளர் ஒருவர் இருப்பதே. அவர்கள் அனுரகுமார திஸ நாயக்கவுடன் ஒரு பேட்டியை வெளியிட்டனர். அதில் போர்க் குற்றச்சாட்டுகளுக்கு ஆளான அரச படையினர் யாரும் தண்டிக்கப்பட மாட்டார்கள் என்று கூறியிருந்தார். அதேவேளை அதற்கு மறுமொழியாக தமிழ் தரப்பின் கருத்துக்கள் அந்தில் இல்லை. அது மட்டுமில்லாமல், தமிழ் நாட்டிலேயே அவர்களுக்கு அதிகளவிலான வாசகர்கள் இருந்தாலும், அரியநேத்திரன் அல்லது திலகராஜுடன் அவர்கள் சிறப்பு செவ்வி எதையும் எடுத்து வெளியிடவில்லை. இவ்வளவிற்கும் "தி இந்து" ஆங்கிலம் மற்றும் ஆகிய இரு மொழிகளில் சென்னையிலிருந்து வெளிவருகிறது.

அதேவேளை இந்தியாவின் முன்னாணி ஆங்கில இணைய ஊடகங்களில் ஒன்றான "்.பர்ஸ்ட்போஸ்ட்" இணைய பக்கத்தில் சிறப்பு கட்டுரை ஒன்றை ஓய்வு பெற்ற மூத்த இராணுவ அதிகாரி லெப்டினண்ட் ஜெனரல் அசோக் மேத்தா எழுதியுள்ளார். இவர் இலங்கை விடயங்களை நெருக்கமாக அவதானித்து வருபவர் என்று அறியப்படுபவர்.

"பாக்கு நீரணையில் இரு பக்கமும் தமிழ் அரசியல் பாரிய மாற்றங்களை கண்டுள்ளது. இலங்கையின் உள்நாட்டு அரசியல் களத்திலிருந்து இலங்கைத் தமிழர்கள் பிரச்சனை என்ற விடயம் மறைந்து போய்விட்டது".

"இந்தியா தனது இராஜதந்திர அணுகுமுறையின் ஒரு அங்கமாக, அபூர்வமான வகையில் இந்தாண்டு பிப்ரவரி மாதம் அனுரவை டில்லிக்கு அழைத்தது. அப்படியான முன்னெடுப்பை மாலத்தீவுகள் மற்றும் வங்க தேசத்தில் இந்தியா செய்யவில்லை. யதார்த்தமாக இந்தியாவின் முதல் தெரிவு ரணில் விகரமசிங்க, அடுத்து சஜித் பிரேமதாஸ பிறகு அனுரகுமார திஸநாயக்க என்ற வரிசையிலேயே இருக்கும்" என்று எழுதியுள்ளார்.

இந்தியாவின் முன்னணி இந்தி மொழி நாளிதழனான "தைனிக் ஜாக்ரன்" நான்கு முன்னணி வேட்பாளர்கள் குறித்த ஒரு ஆய்வை வெளியிட்டுள்ளது.

"தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடுமையான போட்டியை எதிர்கொள்கிறார். எனினும் அவர் இன்னும் இடைவெளியைக் குறைத்து இரண்டாவது விருப்பு வாக்கு மூலம் தேர்தலில் வெற்றிபெற முடியும். மகிந்த ராஜபக்சவின் மகன் நாமல் மற்றைய பிரதான போட்டியாளராக இருந்தாலும், இலங்கை தேர்தல் கண்காணிப்பாளர்களின் கருத்துப்படி அவருக்கு இந்த தேர்தலில் வாய்ப்பு இல்லை. அரசியல் ஊசலாட்டம் எப்பக்கமும் சாயலாம்".

தேர்தலுக்கு இரண்டு கிழமைகளே இருந்த நிலையில், மற்றொரு முன்னணி இந்தி மொழி நாளிதழான தைனிக் பாஸ்கர், நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை காட்டிலும், எதிர்கால இலங்கை-இந்திய உறவுகள் குறித்தே பேசியது. வேட்பாளர்ம், பிரச்சனைகள், எதிர்வுகூறல்கள் ஆகியவை எல்லாம் கவனத்தில் எடுக்கப்படவில்லை.

டில்லியிலிருந்து செயல்படும் பிபிசியின் தமிழ் மொழி சேவையின் இணையம் கூட இந்த தேர்தல் குறித்து போதியளவில் செய்திகளை வெளியிடவில்லை. இவ்வளவிற்கும் அவர் பல தசாபதங்களாக "இலங்கையே எமது ரொட்டியும் வெண்ணெயும்" என்று கூறி வந்தார்கள். ஆனால் போர் முடிவடைந்த பிறகு இலங்கை மீதான அவர்களது கவனம் மிகக் குறைவாக உள்ளது என்பதற்கு அப்பாற்பட்டு அது காத்திரமில்லாமலும் உள்ளது.

இதேவேளை கொழும்பில் இந்திய தேசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிரசன்னமும் மற்ற அண்டை நாடுகளுடன் ஒப்பிடும் போது மிகவும் குறைவாகவே உள்ளது. முன்னர் 1985-2005 காலகட்டத்தில் அங்கு வலுவான செய்தி சேகரிப்பு கட்டமைப்பும் அவர்களுக்கு இருந்தது. அகில இந்திய வானொலியில் கொழும்புச் செய்தியாளராக நீண்டகாலம் இருந்த பா. கண்ணன் இலங்கை விடயங்களில் வலுவான ஆளுமையாக இருந்தார்.

தமிழ்நாட்டில் மிகப்பெரிய தினசரியாக கருதப்படும் "தினமலர்" தவிர, தேசியளவில் செயல்படும் ஆங்கில, இந்தி ஊடகங்கள் பொது தமிழ் வேட்பாளரை முற்றாக புறக்கணித்துள்ளதை காண முடிகிறது. இது அவர்களின் காழ்ப்புணர்ச்சி காரணமாக இருக்கலாம் அல்லது போர் பாதித்த பிரதேசங்களில் நிலவும் அரசியல் செயல்பாடுகள் குறித்த புரிதலின்மையாகவும் இருக்கலாம்.

ஆச்சரியப்படும் வகையில் சஜித் பிரேமதாஸ அல்லது அனுரகுமார திஸநாயக்கவை விட இந்திய ஊடகங்கள் நாமல் ராஜபக்ச மீது கூடுதல் ஆர்வம் கொண்டுள்ளதை காண முடிகிறது. அவர்களுக்கு இலங்கையில் தற்போது நிலவும் அரசியல் சூழல்கள் குறித்த ஆழ்ந்த புரிதல் இல்லை என்பதையே இது காட்டுவதாகப் பார்க்கப்பட வேண்டும்.

இந்திய ஊடகங்களின் பொதுவான கவனம் என்பது ரணில் வெற்றுவாகை சூடுவாரா என்பது குறித்தும் மஹிந்த ராஜபக்ச நாமலை களமிறக்கியுள்ளதையும் சுற்றியுமே உள்ளது. தெற்காசிய நாடுகளில் நிலவும் குடும்ப அரசியலில் பிரதிபலிப்பாகவும் இது இருக்கலாம்.

பெரும்பாலான இந்திய ஊடகங்கள் அனுரவை இடதுசாரி, மார்க்ஸிய-லெனினிய வேட்பாளராக குறிப்பிட்டும் அவரது ஜெ வி பி பின்புலத்தையும் பார்க்கின்றன.

முன்னாணி இந்திய தேசிய ஊடகங்களை பார்க்கும் போது ஒப்பீட்டளவில் ரணில் மற்றும் அனுரவைவிட சஜித் குறித்து குறைவாகவே கவனம் செலுத்தியுள்ளன. அவர்கள் கொழும்பிலிருந்து ஏ எவ் பி, ராய்டர்ஸ் போன்ற பன்னாட்டுச் செய்தி முகமைகளின் கட்டுரைகளையே வெளியிட்டுள்ளன. எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பு முறை எப்படியானது, ஒருவர் வெற்றிபெற பதிவான வாக்குகளில் 50%+1 வாக்கு தேவை என்ற செய்தியை இந்திய மக்களுக்கு தெரிவிக்க முயலவில்லை.

இந்திய-இலங்கை கிரிக்கெட் போட்டிகள் மீது இந்திய ஊடகங்கள் காட்டும் ஆர்வத்தைப் பார்க்கும் போது, கேந்திர ரீதியாக இந்தியாவிற்கு மிகவும் முக்கியமான ஒரு நாடான இலங்கையில் நடைபெறும் தேர்தல்கள் தொடர்பில் அவை பாராமுகமாகவே உள்ளன. இல்லையென்றால் பின்பாட்டு பாடுபவர் போல் ஏதோ நாமும் எழுதிவைப்போம் என்பது போன்று தான் நடந்துகொள்கின்றன.

எப்படி ஒரு காலத்தில் இலங்கை தேயிலை இந்திய மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்று ஒரு தனி இடத்தைப் பெற்று பிறகு அதை இழந்ததோ, அதே போன்று தான் இலங்கை அரசியல் விடயங்களை இந்திய ஊடகங்கள் முன்னர் பார்த்தது போன்று அதே ஆர்வம் மற்றும் அக்கறையுடன் பார்ப்பதில்லை என்பது தான் உண்மை.

இலங்கையில் ஜனாதிபதி தேர்தல்: அதனால் நமக்கென்ன என்ற மனோபாவமே இந்திய ஊடகங்களிடம் மேலோங்கி உள்ளதாக கருத வேண்டியுள்ளது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# பொது வேட்பாளருக்கு வழங்கும் ஆதரவு தெற்கின் முகத்தில் அறைவதாக அமைய வேண்டும்



## சரவணபவன் தெரிவிப்பு!



வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் சங்குச் சின்னத்திற்கு வழங்கும் வாக்குகள் தெற்கின் முகத்தில் அறையைக் கூடியதாக இருக்க வேண்டும் என தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்தார்.

17-09-2024 அன்று செவ்வாய்க்கிழமை மூளாய் - வேரம் பகுதியில் இடம்பெற்ற தமிழ் பொதுவேட்பாளர் ஆதரவுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சிங்கள வேட்பாளர்கள் பணத்தை வழங்கினால் வெற்றிபெறலாம் நினைக்கிறார்கள் அவர்களுக்கு தரகர்களாக தமிழ் அரசியல் வாதிகள் செயற்படுகின்றனர்.

நாட்டின் புரையோடியுள்ள இனப் பிரச்சினை முதல் தமிழ் மக்கள் எதிர்நோக்கம் திட்டமிட்ட பௌத்தமயமாக்கல் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் தமிழர்களின் இனப்பெரும்பலை மாற்றி அமைக்கும் திட்டமிட்ட நகர்வுகள் வேகமாக இடம்பெற்று வருகின்றது.

அது மட்டுமல்லாது காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைகள் இன்னமும் தீர்வு இன்றி நீண்டு கொண்டே செல்கின்ற நிலையில் தேர்தல் வழங்கும் வாக்குறுதிகள் அதிகாரத்துக்கு வந்த பின்னர் மறையும் நிலை காணப்படுகிறது.

இதனால் தான் தமிழ் மக்களின் ஒட்டுமொத்த அரசியல் அபிலாசைகளை வெளிப்படுத்தவும் இம்முறை தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் என்ற நகர்களுக்கு அவசியம் ஏற்பட்டது.

வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் ஒன்றுபட்டு ஒரே குரலாக தமிழர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தவே பொது வேட்பாளர் உருவாக்கப்பட்டது.

பொது வேட்பாளர் என்ற விடயத்தில் கட்சி அரசியல் முதன்மை படுத்தப்படவில்லை. தமிழ் தேசியத்தை முன் நிலைப்படுத்தி வடக்கு கிழக்கு தமிழர்களுக்கான விடிவை எதிர்நோக்கிய ஒரு குறியீடாகவே தமிழ் பொது வேட்பாளர் களம் இறக்கப்பட்டுள்ளார்.

வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சனைகள் தீர்க்கப்படாத நிலையில் தமிழ் மக்களுக்கான உரிமைகளை தெற்கு தொடர்ச்சியாக மறுதலித்து வருகிறது.

பொது வேட்பாளர் என்ற விடயத்தை பலர் ஏற்றுக் கொண்டுள்ள நிலையில் சிறு குழு ஒன்று குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பொது வேட்பாளர் என்ற நகர்வை எதிர்க்கின்றது.

தெற்கு அரசியல் தலைவர்கள் ஜனாதிபதி வேட்பாளர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளை இதயசுத்தியுடன் அணுகவில்லை தங்கள் தேர்தல் அறிக்கையில் வெறும் எழுத்துக்களாக வைத்துள்ளனர்.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாகவோ தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் தொடர்பாகவோ அவர்கள் ஆக்கபூர்வமான எவற்றையும் குறிப்பிடாத நிலையில் எவ்விதமான எழுத்து மூலமாக உறுதிமொழிகளையும் வழங்க அவர்கள் தயாராக இல்லை.

தமிழ் மக்கள் சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவு தாருங்கள் என எம்மில் சிலர் பணத்தைப் பெற்றுவிட்டு மக்களிட்ம் கெஞ்சுகிறார்கள் என்ன அடிப்படையில் ஆதரவு தெரிவிப்பது.

தமிழ் பொது வேட்பாளர் என்பது தெற்குடன் மேற்கொள்ளப்பட்ட டீல் எனக் கூறுபவர்கள் ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும் தமிழ் பொது வேட்பாளர் என்பது தமிழ் தேசியத்தின் வழியில் தமிழ் மக்களின் நலனை நோக்கிய பயணம்.

தமிழ் மக்களின் குரலாக எமது அபிலாசைகளை வெளிப்படுத்த வேண்டும் தமிழ் மக்களின் பிரச்சனைகளை தீர்வு வழங்கினால் மட்டுமே தமிழ் மக்களின் ஆதரவு கிடைக்கும் என்பதை தெற்கின் முகத்தில் அறைந்து கூறக்கூடிய காலம் கனிந்திருக்கின்றது.

இன்னும் சில தினங்களில் நடக்க உள்ள ஜனாதிபதி தேர்தலில் நாம் பொது வேட்பாளருக்கு வாக்குகளை வழங்கி அதை செயல்படுத்தி காட்ட வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்.

ஆகவே நீங்கள் அனைவரும் பொது வேட்பாளருக்கு ஆதரவு பொது வேட்பாளரை வெல்ல வைப்பதன் மூலம் நாட்டுக்கும் சர்வதேசத்திற்கும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை வெளிப்படுத்துங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மாவையும் அவரது மகனும் வடிவேல் பாணியில் செயல்படுகின்றனர் — தம்பி ராசா குற்றசாட்டு!





தமிழரசு கட்சியினுடைய தலைவர் மாவை சேனாதிராஜா மற்றும் அவருடைய மகன் கலை அமுதன் ஆகியோர் தென்னிந்திய நகைச்சுவை நடிகர் வடிவேல்பாணியில் செயல்படுவதாக அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவர் தம்பி தம்பிராஜா குற்றச்சாட்டினார்.

17-09-2024 அன்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவு வழங்குவதற்காக சஜித்தின் பிரச்சார நடவடிக்கைகளை கண்காணிக்கும் தொழிலதிபர் லக்கி என்பவரிடம் சுமார் 30 இலட்சம் ரூபாய்களை மாவை சேனாதிராஜாவின் மகன் கலையமுதன் பெற்றதாக நம்பத் தகுந்த தகவல்கள் மூலம் தகவல்கள் கசிந்துள்ளது.

நகைச்சுவை நடிகர் வடிவேலு திரைப்படம் ஒன்றில் வாக்குச் சீட்டை காட்டி அவருக்கு ஒரு குத்து இவருக்கு ஒரு குத்து என பணம் வாங்கியவர்கள் எல்லோருக்கும் புள்ளடி போட்ட வாக்குச் சீட்டை காண்பித்த மையை படத்தில் பார்த்திருக்கிறோம்.

அவ்வாறு சம்பவமாக மாவை மற்றும் மகனின் செயற்பாடுகளை அவதானிக்க முடிகின்றது.

சஜித்துக்கு ஆதரவு தமிழரசு கட்சி தீர்மானம் என கூறும் தலைவர் மாவை ரணில் விக்கிரமசிங்க தனது வீட்டுக்கு வந்தபோது நீங்கள் தான் ஜனாதிபதியாக வேண்டும் என்கிறார்.

அதன் பின் வவுனியாவில் இடம்பெற்ற தமிழரசு கட்சியின் கூட்டத்தில் சஜித்துக்கு தமிழரசு ஆதரவு வழங்கியதில் மாற்றம் இல்லை எனக் கூறிவிட்டு வரும் வழியில் கிளிநொச்சியில் பொது வேட்பாளர் ஆதரவு மேடையில் ஏறினார்.

மகன் கலை அமுதன் யாழ் வந்த ரணில் விக்கிரமசிங்கவுடன் சந்திப்பில் ஈடுபட்ட புகைப்படங்கள் வெளியாகிய நிலையில் மறுநாள் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து பிரச்சாரம் செய்கிறார்.

இவற்றையெல்லாம் நோக்கும்போது பணம் வாங்கியவர்களிடம் எமது இனத்தை காட்டி கொடுத்து சந்தர்ப்பவாத அரசியலை தகப்பனும் மகனும் செய்கிறார்கள்.

பணம் வழங்கியவர்கள் யாருக்கு வாக்கு போட்டீர்கள் என கேட்டால் வடிவேல் பானில் இருவரும் வாக்கு சீட்டை காட்டி அவருக்கு ஒரு குத்து இவருக்கு ஒரு குத்து என சொல்லு நிலை ஏற்படும்.

தந்தை செல்வாவால் கட்டிக் காத்து வளர்க்கப்பட்ட தமிழரசு கட்சி இன்று பணத்துக்காக பல கோணங்களில் பிரிந்து நிற்கிறது.

தந்தை செல்வாவின் மனைவி இந்த அரசியல் செயற்பாடுகள் உங்களுக்கு வேண்டாம் என மண்ணை அள்ளி அவர் மீது தூவியபோதும் அதனை தட்டிவிட்டு இனத்துக்காக என்னால் முடிந்தவரை போராடுவேன் என கூறிய பெருந்தலைவர் உருவாக்கிய கட்சி.

ஆகவே தமிழரசு கட்சியை சீரழிக்கும் செயற்பாட்டில் ஈடுபடுபவர்கள் தமிழ் மக்களால் விரைவில் துரத்தி அடிக்கப்படுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

# உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 37வது நினைவு தினம் நல்லூரில் அனுஸ்டிக்கப்பட்டது





ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 37வது நினைவு தினம், 15-09-2024 அன்றையதினம் யாழ்ப்பாணம் - நல்லூர் பகுதியில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் அனுஸ்டிக்கப்பட்டது.

திலீபனின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி, ஈகைச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தியதுடன் பலரும் உணர்வுபூர்வமாக கலந்துகொண்டனர்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் புதிதாக திட்டமிடப்படும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும், சிறைகளிலும், முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும், அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும், ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்பட வேண்டும், தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும், என ஐந்து அம்ச கோரிக்கைகளை முன்வைத்து, தியாகதீபம் திலீபன் 15.09.1987 தொடக்கம் 26.09.1987 வரையான 12 நாட்கள் அகிம்சை வழியில் யாழ் நல்லூரில் நீராகாரம் அருந்தாமல் உண்ணாவிரதப் போராட்டம் நடாத்தி சாவைத் தழுவிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஜனாதிபதி தேர்தல் — 2024 சார்ந்த கண்காணிப்பு நடவடிக்கை




இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, ஜனாதிபதி தேர்தல் - 2024 கண்காணிப்பு நடவடிக்கையை எதிர்வரும் 21 மற்றும் 22 ஆம் திகதிக-ளில் மேற்கொள்ள ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. தேர்தல் தினத்தன்று வாக்காளர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றனவா என்பதை கண்காணிப்பதற்கும், தேவை ஏற்படின் குறித்த இடத்திற்கு களவிஜயம் மேற்கொள்வதற்கும் ஆணைக்குழுவின் அலுவலர்கள் கடமையிலிருப்பார்கள்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகமும் எதிர்வரும் 21 ஆம் திகதி தேர்தல் கண்காணிப்பு கடமைகளுக்காக திறந்திருக்கும் என்பதுடன் வாக்காளர்கள் தமது வாக்குரிமையினை பயன்படுத்துவதில் ஏதேனும் உரிமை மீறலை எதிர்கொண்டால் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் எம்முடன் தொடர்புகொள்ளலாம் என்பதை அறியத்தருகின்றேன்.

021-2222021
070-3654910

த. கனகராஜ்
பிராந்திய இணைப்பாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
யாழ்ப்பாணம்

# திருமலை மாவட்டத்தில் வளமான நிலங்கள் தொடர்ந்து அபகரிப்பு

அமெரிக்காவை தளமாகக் கொண்டு, பிரதானமாக காணி உரிமைகள் தொடர்பில் ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகளை மேற்கொள்ளும் மையமான ஓக்லாண்ட் நிறுவனம், இலங்கையின் கிழக்கு மாவட்டமான திருகோணமலையில், வளம் மிகுந்த விளை நிலங்கள் அபகரிக்கப்படுவது வேகமெடுத்துள்ளது என்று தனது புதிய அறிக்கை ஒன்றில் கூறியுள்ளது. பல தசாப்தங்களாக சிங்கள மக்களின் வலிந்த குடியேற்றம் காரணமாக, திருகோணமலை மாவட்டத்தின் குடிபரம்பல் கணிசமாக மாறியுள்ளது என்றும், நில உடமையில் பாரிய சமமின்மை நிலவுகிறது என்றும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

ஐ நா மனித உரிமைகள் பேரவையின் 57ஆவது அமர்வில் இலங்கை தொடர்பான தீர்மானம் முன்னெடுக்கப்பட்டு அதன் மீதான வாக்கெடுப்பு நடைபெறவுள்ள நிலையில் இந்த அறிக்கை வந்துள்ளது.

முன்னதாக ஜேர்மனியில் அரச ஊடகமான டாயிட்ச வெலவுக்கு அளித்த செவ்வி ஒன்றில் அமைச்சர் அலி சப்ரி, நாட்டின் வடக்கு பகுதியல் படைகள் ஆக்கிரமித்துள்ள நிலங்களில் 90% நியாயமான உரிமையாளர்களின் திருப்பியளிக்கப்பட்டுவிட்டதாக கூறியிருந்தார். ஆனால் அது தவறு என்று இலங்கை தமிழரசுக் கட்சியின், யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அதை மறுதலித்திருந்தார்.

எனினும், கிழக்கில் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் கிட்டத்தட்ட ஒரே விகிதார அளவில் வாழ்கின்ற சூழலில், அங்குள்ள நிலவரம் குறித்து அமைச்சர் வாய் திறக்கவில்லை.

திருகோணமலை இலங்கைக்கு கேந்திர ரீதியாக மிகவும் முக்கியமானதொரு பகுதியாகும். மேலும் அங்குள்ள இயற்கை துறைமுகம் பெருமதிப்பு வாய்ந்த நிலையில்-அங்கு தான் நில அபகரிப்பு நடைபெறுகிறது என்று அந்த அறிக்கை கூறுகிறது.

"யுத்தத்தின் பின்னர் கடந்த 15 ஆண்டுகளாக தொடர்ந்தும் இராணுவ ஆட்சியின் கீழ் இருக்கும் திருகோணமலை மாவட்டத்தில் சிங்கள மக்களின் ஆதிக்கம் விரிவடைந்துவருகின்றது" என்று ஓக்லாண்ட் நிலையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் அனுராதா மிட்டல் தெரிவித்துள்ளார். "வடக்கு- கிழக்கு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் ஒன்றிணைந்த தாயகம் என்ற கோட்பாட்டை இல்லாமல்செய்யும் அதேவேளை, அவர்கள் செறிந்துவாழும் பகுதிகளில் அவர்களின் சரித்திரம் மற்றும் கலாசாரம் ஆகியவற்றை அழிப்பதை இந்த நில அபகரிப்பு முன்னெடுப்புக்கள் இலக்குவைக்கின்றன" என்றும் மிட்டல் மேலும் தெரிவித்தார்.

இந்த நில அபகரிப்புக்கள் காரணமாக, திருகோணமலை மாவட்டத்தில் தற்போது 27 சத வீதமாக இருக்கும் சிங்கள மக்கள் அந்த மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பின் 36 சதவீதத்தை தம்வசம் வைத்துள்ளனர். 50 சதவீதத்துக்கும் அதிகமான நிலப்பரப்பு (41,164 ஏக்கர்) அபகரிக்கப்பட்டுள்ள நிலையில் கடந்த 10 வருடங்களில் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவு மோசமான நில அபகரிப்பை சந்தித்துள்ளது என்று அனுராதா மிட்டல் மேலும் தெரிவித்துள்ளார்.

"நீர்ப்பாசன திட்டங்கள், துறைமுக நவீனமயமாக்கல், வலு உற்பத்தி மற்றும் உல்லாசப்பயண மேம்படுத்தல் ஆகியவை உட்பட "அபிவிருத்தி" என்ற போர்வையின் ஒரு பகுதியாக தமிழ், மற்றும் சிங்கள மக்களின் நிலங்களை அபகரிக்கும் "சிங்களமயமாக்கல்" என்று அழைக்கப்படும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்த நில அபகரிப்பு நடைபெற்றுவருகின்றது. தொல்லியல் திணைக்களம், வன இலாகா, மகாவலி அதிகாரசபை மற்றும் உல்லாச அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவை உட்பட பல்வேறு அரச நிறுவனங்கள் இந்த சிங்களமயமாக்கல் நடவடிக்கையில் சம்பந்தப்பட்டுள்ளன."

குச்சவெளி பிரேதேச செயலாளர் பிரிவில் வளர்ச்சி என்ற போர்வையில் தீய எண்ணத்துடன் கேந்திர ரீதியாக வளமான நிலங்கள் எப்படி அபகரிக்கப்படுகின்றன் என்பது குறித்தும் ஓக்லாண்ட் நிலையம் மேலும் விளக்கமாக கூறுகிறது. இதில் "வளர்ச்சி என்று கூறப்படுகின்ற" திட்டங்களில் பெரும்பாலானவை புதிய பௌத்த விகாரைகள் கட்டுவதற்கோ அல்லது இருக்கும் விகாரைகளை மேலும் விரிவாக்கவோ முன்னெடுக்கப்படுகின்றன.

"அந்த பகுதியில் அபகரிக்கப்பட்ட 3,887 ஏக்கர் நிலப்பரப்பில் குறைந்தது 26 விகாரைகள் கட்டப்பட்டுள்ளன. வளமான விவசாய மற்றும் கடற்கரை ஓரமாக இருக்கும் நிலங்கள் பெருமளவில் அபகரிக்கப்பட்டதன் விளைவாக, பாரம்பரிய தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் வாழ்வாதாரங்கள் இழக்கப்பட்டுள்ளன. அந்த நிலங்களை மீட்கும் முயற்சிகளுக்கு அங்கு நிலைகொண்டிருக்கும் பெருமளவிலான இராணுவ பிரசன்னத்தின் காரணமாக தடையாக உள்ளது."

இதன் நோக்கம் என்பது கிழக்குப் பகுதியில் குடிப்பரம்பலை மாற்றி அதன் மூலம் அங்கு நிலவும் சமூக மற்றும் கலாச்சார ஒற்றுமையை குலைப்பதாகும் என்றும் அந்த அறிக்கை குற்றஞ்சாட்டுகிறது.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் செறிந்துவாழும் பகுதிகளில் பௌத்த விகாரைகளை விஸ்தரிப்பதானது பௌத்தமயமாக்கலை மேற்கொள்வதற்கும் குடித்தொகை பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் தமிழ்மற்றும் முஸ்லிம் மக்களின் கலாசார சின்னங்களை அழிப்பதற்கும் வழி செய்கின்றது என்றும் அந்த அறிக்கை மேலும் குற்றஞ்சாட்டுகிறது.

மிகப்பெரும் அளவில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்களிடம் இருந்து நிலம் அபகரிக்கப்பட்டுள்ளமை ஆயிரக்கணக்கான மக்களை பாதித்துள்ளது. வளம்மிக்க விவசாய மற்றும் கடலோர நிலங்கள் அபகரிக்கப்பட்டுள்ளமை காரணமாக அவர்களின் பாரம்பரிய வாழ்வாதாரம் இல்லாமல் போயுள்ளது. தமது பகுதிகளுக்கு மீண்டும் திரும்பி அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத நிலையில், தமது நிலங்களை மீளப்பெற்றுக்கொள்வதற்கு முயற்சி செய்யும் மக்கள் பல்வேறு சட்ட தடங்கல்களையும் மற்றும் குடியேற்றப்பட்ட மக்களிடம் இருந்து அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்கின்றனர்.

நாட்டின் வடக்கு கிழக்கு மாகாணங்களை பூகோள ரீதியாக இணைக்கும் திருகோணமலையின் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவிலேயே மிகவும் மோசமான வகையில் கடந்த 10 ஆண்டுகளில் அதிகப்படியான நிலங்களை இழந்துள்ளது என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

நாடு விடுதலையடைந்ததிலிருந்து தொடர்ச்சியாக சிங்கள ஆக்கிரமிப்பும் குடியேறமும், வளர்ச்சி என்ற போர்வையில் முன்னெடுக்கப்பட்டு வந்தாலும், அது 2009ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பிற்கு தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த அரசுகளால், தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களை மேலும் பலவீனப்படுத்தும் நோக்கில், இந்த நடவடிக்கை தீவிரமடைந்துள்ளது என்றும் அந்த புதிய அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது.

கொழும்பு அரசாங்கத்தால் அபிரிவிருத்தி என்ற பெயரில் நிலங்கள் அபகரிக்கப்பட்டாலும், அவற்றில் பெரும்பாலான திட்டங்கள் யதார்த்த ரீதியில் தொடங்கப்படவே இல்லை என்றும், அடிப்படையில் அது சிங்கள மக்களுக்கு மட்டுமே உதவியுள்ளது என்று தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் நீண்டகாலமாகவே குற்றஞ்சாட்டுகின்றனர்.

கடந்த 2020இல், கிழக்கு மாகாணத்தில் தொல்லியல் பாரம்பரியத்தை பாதுகாத்து நிவகிக்க 11 பேர் அடங்கிய ஜனாதிபதி சிறப்பு செயலணி ஒன்று அமைக்கப்பட்டது. அதில் பெரும்பாலும் இராணுவத்தினர் மற்றும் பிக்குமார்களே இடம்பெற்றிருந்தனர். அந்த குழுவின் நோக்கமே அப்பகுதியிலுள்ள நிலங்களை அபகரிப்பதாகும் என்று ஓக்லாண்ட் நிலையம் கூறுகிறது.

"மத ரீதியான நில அபகரிப்புகள் பற்றிய ஆவணப்படுத்தலின் பின்னர், 2023 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம், அமெரிக்காவின் சர்வதேச மத சுதந்திர ஆணைக்குழு (United States Commission on International Religious Freedom) மத சுதந்திர மீறல்களுக்காக இலங்கையை விசேட கண்காணிப்பில் சேர்க்குமாறு பரிந்துரை செய்திருந்தது." பௌத்த விகாரைகளை மற்றும் மடாலயங்களை கட்டுவதற்கும் விஸ்தரிப்பதற்கும் பௌத்த பிக்குகள் அனுமதிக்கப்படும் அதேவேளை இந்த பகுதிகளில் தமிழ் மக்களின் புராதன இந்து ஆலயங்கள் அழிக்கப்படுவதுடன் அங்கு மக்கள் வழிபாடு செய்வதற்கும் தடை விதிக்கப்படுகின்றது" என்று மிட்டல் மேலும் கூறினார்.

ஓக்லாண்ட் நிலையம் முன்னர் வெளியிட்டுள்ள அறிக்கைகளும் சரி, தற்போது வந்துள்ள அறிக்கையும் சரி, இலங்கை அரசு தனது இராணுவ ஆக்கிரமிப்பின் மூலம், வடக்கு மற்று கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை அடக்கி தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளன என்பதை ஆதாரங்களுடன் ஆவணப்படுத்தியுள்ளது.

"இந்த மாகாணங்களில் தொடர்ந்து இராணுவ பிரசன்னம் மிக அதிகளவில் உள்ளது. இங்கு தான் இலங்கை இராணுவத்தின் ஏழு பிராந்திய தலைமையகங்களில் ஐந்து உள்ளன. இப்படியான மிக அதிக இராணுவ பிரசன்ன இங்குள்ள நிலங்களை அபகரிக்கவும், பௌத்த விகாரைகளை அமைக்கவும், சிங்கள குடியேற்றவாசிகளை கொண்டு வரவும் வழி ஏற்படுத்தி கொடுக்கிறது."

திருகோணமலை மாவட்டத்தில் நம்ப முடியாதளவில் வளான நிலங்களும், கடலோரப் பகுதிகளும் வலிந்து ஆக்கிரமிக்கப்படுவதால் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் தமது வாழ்வாதாரங்களை இழந்துள்ளனர். பாரம்பரியமாக விவசாயம் மற்றும் மீன்பிடியில் ஈடுபட்டுள்ள தமிழர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. தமது நிலங்களை மீட்க முயல்பவர்கள் சட்டரீதியான தடைகளையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்கின்றனர் என்று உள்ளூர் தமிழர்கள் கூறுகின்றனர்.

"எமது எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. நாம் விவசாயம் செய்யவும் முடியாது மீன் பிடிக்கவும் முடியாது. இந்த நிலைமை தொடருமானால், எமது வழித்தோன்றல்கள் இந்த கிராமத்தில் தொடர்ந்து வசிக்கும் சாத்தியம் இருக்காது" என்று குச்சவெளியை சேர்ந்த ஒரு மீனவர் கூறினார். சிங்கள அரசாங்கத்தின் அடக்குமுறையின் மத்தியிலும், துணிச்சலுடன் நீதிக்காக குரல் எழுப்பும் பாதிக்கப்பட்ட பொதுமக்களின் வாக்குமூலங்களை "ஆக்கிரமிப்பின் கீழ் திருகோணமலை" என்ற இந்த அறிக்கை உள்ளடக்கியிருக்கின்றது.

"உள்நாட்டு யுத்ததின் போதும் இன்றுவரையிலும் இலங்கை அரசு மேற்கொண்டுள்ள குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் மற்றும் பரிகாரம் ஆகியவற்றுக்கான எந்தவொரு சாத்தியத்தையும் இந்த அறிக்கையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ள தீவிரம் அடைந்துள்ள இலங்கையின் இனரீதியான நடவடிக்கைகள் (ethnocratic practices) இல்லாமல் செய்வதுடன் ஏற்கனவே இருக்கும் துன்பம், அநீதி, பகையுணர்வு ஆகியவற்றை மேலும் அதிகப்படுத்துகின்றன. தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் நிலம் மற்றும் வாழ்வு ஆகியவற்றுக்கான அடிப்படை உரிமைகளை அரசாங்கம் மதித்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இராணுவமயமற்றதாக ஆக்க ஆரம்பித்தால் அன்றி, சமாதானமும் நல்லிணக்கமும் சாத்தியம் ஆகாது" என்று மிட்டல் மேலும் குறிப்பிட்டார்.

உலகிலேயே இரண்டாவது சிறந்த இயற்கை துறைமுகம் திருகோணமலை துறைமுகம் என்றும் அங்கிருக்க கூடிய நிலம் மற்றும் கடற்பரப்பு கொழும்பு துறைமுகத்தைவிட 10 பங்கு அதி-கம் இலங்கை அரசின் துறைமுக அதிகார சபையின் அதிகாரபூர்வமான இணையதளத்தில் கூறப்பட்டுள்ளது.

---

### வீணாவின் கவிக்கணை

அணில் தீண்டிய பழம் போல
இனிப்பாய் இருந்திடு,
உன்னை சீண்ட வருபவரிடம்
சிறுத்தையாய் சீறிடு,
தெளிந்த நீர் போல் உன்
உள்ளத்தை வைத்திடு,
அதில் கலக்கம் வந்தால்
சூறாவளியாய் மாறிடு,
பொறுத்து போக வேண்டிய
இடங்களில் மட்டும்
பொறுமை காத்திடு,
மற்ற இடங்களில் எல்லாம்
நீ யார் என்பதை காட்டிடு.

# இவ்வார ராசிபலன்

## 20-09-2024 வெள்ளி தொடக்கம் 26-09-2024 வியாழன் வரையும்




**மேஷம்:** ஏற்றமும், மாற்றமும் நிறைந்த வாரம். வீடு, மனை யோகம் உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை. வீண் செலவுகள் தவிர்க்கவும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். வங்கி சேமிப்பு உயரும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. ஆரோக்கியம் சீராகும். அபார சம்பத்துக்கள் சேரும். இல்லத்தில் மகிழ்ச்சியும், அமைதியும் அதிகரிக்கும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர்கள். அரசியல்வாதிகள் ஏற்றம் பெறுவார்கள். புதிய வாகனங்களால் முதலீடு உண்டாகும். ஒரு சிலருக்குக் கௌரவமான பதவிகள் தேடி வரும். பங்குச்சந்தையில் லாபம் கிட்டும். திருமண பாக்கியம் கைகூடும். சுமூகமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை பலப்படும். பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகள் வசூலாகும். பொருளாதாரம் உயரும். தொட்டது துலங்கும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்களில் ஒன்றிரண்டு நடந்தேறும். வெற்றிப் பாதையை அடி எடுத்து வைப்பீர்கள். தீர்த்த யாத்திரை உண்டு. வழக்குகள் சாதகமாகும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. புதிய எண்ணங்கள் நிறைவேறும். நிதி பற்றாக்குறை நீங்கும். இடமாற்றம் ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். வியாபாரம் சிறக்கும். பணப்பிரச்சனை தீரும். தனித்தன்மை வெளிப்படும். முயற்சிகள் பலன் தரும். தெய்வீக ஈடுபாடு குறையும். சுயநலம் கூடும். உருண்டு பிரண்டாலும் கிடைக்காத செல்வம் இன்று கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பெருமாள், அதிர்ஷ்ட எண்: 8,5,4,3

அதிர்ஷ்ட நிறம்: பால் வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,X




**ரிஷபம்:** நவகிரஹ அனுகிரஹம் கிடைக்கும் வாரம். அரும்பிய ஆசையும் விரும்பிய காதலும் நிறைவேறும். பூமியால் லாபம் அடைவீர்கள். பிள்ளைகளால் இருந்து வந்து துன்பம் விலகும். பதவி வாய்ப்பு தேடி வரும். பங்குத்தொழில் பெரிய முன்னேற்றத்தைத் தரும். கட்டிடத் தொழில் முன்னேற்றம் தரும். வருமானத்திற்கேற்ற செலவு ஏற்படும். பழைய பாக்கிகள் வசூலாகும். குதூகலமான நிலை காணப்படும். புத்திரர்களால் மேன்மையுண்டு. அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். ஆடம்பர எண்ணம் அலைமோதும். மங்களச் செய்தியால் மனம் மகிழும். மருத்துவச் செலவுகள் ஏற்பட்டு மறையும். பொருளாதாரத்தில் உயர்வு ஏற்படும். ஆக்கப்பூர்வமான எண்ணம் மனதில் உதயமாகும். பணியாட்களின் ஆதரவு அதிக அளவு பெருகும். பாக்கியங்கள் அதிகரிக்கும். கோபத்தையும், வேகத்தையும் தவிர்த்து லாபத்தை சேர்க்கும். புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். நீண்ட நாட்களாக இருந்த பிரச்சனைகள் முடிவுக்கு வரும். பிரபல்யங்களை சந்திக்கும் வாய்ப்பு உருவாகும். நீண்ட நாட்களாக இருந்த பிரச்சனைகள் முடிவுக்கு வரும். அடுத்த வீட்டார்களின் ஆதரவு கிட்டும். பெருமிதத்தோடு காணப்படுவீர்கள். பிள்ளைகள் தேவைகள் பூர்த்தியாகும். மனைவியால் மரியாதை உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். ஆடை, அணிகலன் சேர்க்கை உருவாகும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வியாபார அபிவிருத்தி ஏற்படும். பணவரவு திருப்தி தரும். வணிகத்தொழில் லாபம் தரும். திருஷ்டிகள் விலகும். மற்றவர்களால் மேன்மை உண்டு.


அதிர்ஷ்ட எண்: 3,5,9,1, அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,R




**மிதுனம்:** உதவியும், பதவியும் கிடைக்கும் வாரம். பட்டம் தேடி வரும். நினைத்த காரியம் நிறைவேறும். தொல்லைகள் ஒழியும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். உறவினர் வருகையால் உற்சாகம் அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்விச்செலவுகள் அதிகரிக்கும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். எதிர்பார்த்த வி'யம் ஒன்று தாமதமாகக் கூடிய காலம். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். வழக்கு முடிவுக்கு வரும். எதிர்ப்புக்கள் குறையும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். உடல்பொலிவு கூடும். பாதகமான சூழ்நிலைகள் அகலும். நல்லோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். முன்னேற்றங்கள் அதிகரிக்கும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். சாதனையான எண்ணம் உதயமாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். ஸ்டே'னரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். வம்ச விருத்திக்கு ஆகக் கூடிய காலம். கலகலப்பான வாரமாக அமையும். பெண்களுக்கு யோகம் கூடி வரும். உறவினர் உதவி செய்ய முன் வருவர். பெரியோர்களை அனுசரித்து செல்வது நல்லது. விரயங்கள் அதிகமாகும். வீண் வம்பு உருவாகும். விளையாட்டுத்துறை லாபம் தரும். இரும்புத் தொழில் ஏற்றம் தரும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. மனச்சஞ்சலம் ஏற்படும். அரசமரப் பிரார்த்தனையால் ஆயுள் விருத்தி கிடைக்கும். பணமும், தனமும் பக்குவமாக கிடைக்கும். முத்தான வாய்ப்புக்கள் பெருகும். முன்னேற்றம் அதிகரிக்கும். பெண் வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். உயர்கல்வி ஆர்வம் ஏற்படும். தெரியாத நபர்கள் மூலம் உங்களுக்கு ஆதாயம் வரும். மங்களச் செய்தி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முத்தாலம்மன், அதிர்ஷ்ட எண்: 5,4,3,1

அதிர்ஷ்ட நிறம்: சந்தன நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,S




**கடகம்:** தேவைகள் பூர்த்தியாகும் வாரம். பிள்ளைகளால் பெருமை சேரும். கடன் தொல்லை தீரும். கற்பனை வளம் கூடும். கட்டிடத்தொழில் கவனம் தேவை. புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். மகான்களின் சந்திப்புக் கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. கணவன், மனைவி கௌரவம் உயரும். சுறுசுறுப்பு அதிகமாகும். மாலை நேரத்தில் இனிப்பான செய்தி வரும். வாசனை திரவியத்தில் ஆர்வம் கொண்டவர் நீங்கள். தெரியாத நபர்கள் மூலம் உங்களுக்கு ஆதாயம் வரும். மங்களச் செய்தி வரும். பெருமையாக நிகழ்வுகளை அருமையாகச் சந்திப்பீர்கள். மன சந்தோஷம் கூடும். உடல்நலம் கவனம் தேவை. வாழ்த்துக்கள் வந்து சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். வெளிநாட்டுப் பயணம் திருப்தி தரும். பேச்சில் துணிவு ஏற்படும். நிதி நிலைமை சீராகும். அரசுப்பணியில் மாற்றம் வரும். தீய எண்ணங்கள் விலகும். கலைத்தொழில் உயர்வு உண்டு. விவசாயம் விளைச்சல் தரும். அனுகூலமானப் போக்கு நிலவும். பூர்வீகச் சொத்துக்கள் சேரும். பிரார்த்தனையால் பலன் உண்டு. எண்ணிய காரியம் கைகூடும். பணவரவு அதிகரிக்கும். சகோதரியால் நன்மை உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் அதிக மதிப்பெண்கள் எடுப்பார்கள். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். சுபகாரியம் கூடி வரும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். கொடுக்கல், வாங்கலில் சுமூகமான தீர்வு வரும். உடல் உபாதை நீங்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். ஆன்றோர்கள் வாழ்த்துக் கிட்டும். அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும்.



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377

வழிபட வேண்டிய தெய்வம்: கால பைரவர், அதிர்'ட எண்: 8,9,2,6

அதிர்ஷ்ட நிறம்: வெளிர் நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,W




**சிம்மம்:** சாதகமான சூழ்நிலை அமையும் வாரம். தொலைதூரப் பயணம் லாபம் தரும். பணிச்சுமை குறையும். வியாபாரத்தில் மந்த நிலை அகலும். சொந்த தொழிலமையும். கவலைகள் அடியோடு விலகும். யோகப் பலன்கள் கிடைக்கும். கிள்ளிக் கிடைக்கும் யோகத்தால் துள்ளிக் குதிப்பீர்கள். புதிய சொத்துக்கள் சேரும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். வெளியூர் பயணம் லாபம் தரும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. எடுத்தக் காரியம் தடைப்படும். எதிலும் கவனம் தேவை. கூட்டுத்தொழிலில் பிரிவு ஏற்படும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. அனுகூலமற்ற சூழ்நிலைகள் உருவாகும். திடீர் தனவரவுகள் அதிகரிக்கும். கணவன், மனைவி கௌரவம் உயரும். இனிய செய்தியால் மனம் மகிழும். சோதனைகள் விலகி சாதனையான எண்ணம் நிறைவேறும். அரசு வழியில் ஆதாயம் உண்டு. உஷ்ண நோய் ஏற்பட்டு மறையும். உடன் பிறந்தோரால் உதவி உண்டு. நிதிப்பற்றாக்குறை நீங்கும். கலைத்தொழில் லாபம் தரும். பொறுமையுள்ள பெண்களுக்கு பெருமை சேரும் அருமையான காலம். அமைதியாக இருப்பது நல்லது. உடல் உபாதைகள் ஏற்பட்டு மறையும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். போட்டி, பொறாமைகள் விலகும். புத்திரர் வழியில் கவலை ஏற்படலாம். புதிய நட்பை தவிர்க்கவும். பணியில் நிம்மதி குறையும். திடீர் செலவுகள் உண்டாகும். உத்தியோக மாற்றம் உண்டு. காலணிகள் காணாமல் போகும். காதல் எண்ணம் உருவாகும். விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். மாற்றமான வாய்ப்புக்கள் கிட்டும். மறைமுக தொல்லை நீங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பூமாதேவி, அதிர்ஷ்ட எண்: 5,1,3,4

அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,Y




**கன்னி:** ஆசைப்பட்ட பொருட்கள் வாங்கும் வாரம். உடல் ஆரோக்கியம் சீராகும். மேலதிகாரியின் ஆதரவு உண்டு. கால்நடைகளால் மேன்மை உண்டு. ஆடம்பர எண்ணம் மேலோங்கும். அரசாங்க அனுகூலம் உண்டு. வேண்டாத நபர்கள் விலகிடுவர். விவேகமான காலமாக அமையும். கட்டிடத்தொழில் லாபம் தரும். விவசாயம் கவனம் தேவை. வீண் வம்பு தேடி வரும். வியாபாரம் திருப்தி தரும். பழைய நண்பரால் பண விரயம் உண்டு. புதிய சிந்தனைகள் உருவாகும். கலையார்வம் கூடும். கேட்ட இடத்தில் கடன் கிட்டும். காரியத்தடை அகலும். இல்லத்தில் மகிழ்ச்சியுண்டு. போட்டிகள் உருவாகி மறையும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். நல்லவர் நட்பு கூடி வரும். நல்ல வாய்ப்புக்கள் தேடி வரும். வருமான வரி தொல்லை உண்டு. பொறியியல் துறை லாபம் தரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். செயல்திறமை அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். கடன் பிரச்சனை முற்றிலும் தீரும். செல்வாக்கு உயரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். புதிய தொழில் அமையும். பாராட்டுக்கள் உயரும். வெளியூர் பயணம் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எண்ணிய காரியம் கைகூடும். மன சந்தோஷம் கூடும். நல்லவர் நட்பு கிட்டும். தோற்றப்பொலிவு கூடும். நேரம் காலம் பார்க்காமல் உழைப்பீர்கள். மாணவர்களுக்கு படிப்பில் உற்சாகம் கூடும். நீண்ட நாளைய பிரச்சனைகள் முடிவுக்கு வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 2,9,5,7

அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,V




**துலாம்:** முன்னேற்றம் கிடைக்கும் வாரம். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரம் லாபம் தரும். முன் கோபம் தவிர்க்கவும். பயணம் பலன் தரும். பெண்களுக்கு கவனம் தேவை. மருத்துவச் செலவு உண்டு. ஆடை, அணிகலன் சேரும். மாற்று இன உதவி கிட்டும். புதிய சொத்து சேரும். உருண்டு பிரண்டாலும் கிடைக்காத செல்வம் இன்று கிடைக்கும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். உறவினர் வருகை ஏற்படும். வழக்கு வெற்றி தரும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. குடும்ப ஒற்றுமை மேலோங்கும். மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். அரசு வழி ஆதாயம் கிட்டும். சகோதரியினால் அனுகூலம் உண்டு. கலைத்துறையில் திருப்பம் ஏற்படும். எதிரிகள் உதிரியாவார்கள். மனோ தைரியம் அதிகரிக்கும். முடியாத வி'யங்களைக் கூட தெளிவாகச் செய்து முடிப்பீர்கள். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் சீராகும். கடல் கடந்த பயணம் லாபம் தரும். சுறுசுறுப்பு அதிகமாகும். மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். பிள்ளைகளால் பெருமை சேரும். கமிஷன் தொழில் லாபம் தரும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. வார்த்தைகளில் நிதானம் தேவை. மங்களச் செய்தி வரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாணவர்களின் கல்வியில் உற்சாகம் அடைவார்கள். உறவினர்களால் உதவி கிட்டும். உயர்கல்வி ஆர்வம் கூடும். வியாபாரம் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மூகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 1,4,5,9

அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,L




**விருச்சிகம்:** வறுமைகள் விலகும் வாரம். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். வினோதமான எண்ணங்கள் விலகும். புதிய முயற்சிகள் பலன் தரும். பிள்ளைகளின் தொல்லை அதிகரிக்கும். மனைவியால் மரியாதை உயரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். புதிய முதலீடு உருவாகும். கற்பனை திறன் அதிகரிக்கும். கௌரவம் உயரும். கடன் தொல்லை குறையும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கிடைக்கும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் கூடும். மரபை மீறிப் பேசிய உறவுகள் மனதாரப் பாராட்டுவார்கள். அணிகலன் சேர்க்கையுண்டு. கன்னிப் பெண்களுக்கு சுபச்செய்தி வரும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். தாய் வழி உறவில் விரிசல் ஏற்படும். அறிமுகம் இல்லாதவர் மூலம் ஆதாயம் கிடைக்கும். பூமி வாங்கும் யோகம் உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்விச் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களால் நன்மை உண்டாகும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். செல்வமும், புகழும் சேரும். பழைய நண்பரை சந்திக்க நேரிடும்.

(தொடர்ச்சி 26 பக்கம்)

# துயர் பகிர்வு

"அருகில் இருக்கும்போதே அள்ளிக்கொள் தொலைந்துபோன பின் தேடாதே
அது மீண்டும் கிடைக்காத பொக்கிஷம் அதுதான் தாய்மையும் தாயின் அன்பும்"

தோற்றம்:
28-09-1948

மறைவு:
15-09-2024



## அமரர் தவமணி கணேசன்

(அமரர் கவிஞர் அச்சுவேலியூர் கு. கணேசன் அவர்களின் மனைவி)

அச்சுவேலையை பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட எமது தாயார் தவமணி கணேசன் அவர்கள் 15-09-2024 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

பார்வைக்கு:
Lotus Funeral and Cremation Centre
(121 City View Dr. Etobicke, ON M9W 5A8
காலம்:
21-09-2024 சனிக்கிழமை
மாலை 6 மணி தொடக்கம் 9 மணி வரை
22-09-2024 ஞாயிற்றுக்கிழமை
காலை 10 மணி தொடக்கம் பி.ப. 1 மணி வரை

தொடர்புகளுக்கு:
Puvi (மகன்): (416) 882-1809
Thaya (மகன்): (647) 505-6167
Nithy (மகன்): (416) 464-4883
GTA Video Kenga (மருமகன்): (416) 400-1760

இந்தியா செய்திகள்
India News

# தமிழ்நாட்டிற்கு 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் வரை 7,24,318 வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும், 17,96,27,146 உள்நாட்டு சுற்றுலா பயணிகளும் வருகை தந்துள்ளார்கள். சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தகவல்

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கூட்டரங்கில், சுற்றுலாத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கா.ராமச்சந்திரன் அவர்கள் தலைமையில், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு. சி.சமயமூர்த்தி.இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் (13.9.2024) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் சுற்றுலாத்துறையில் பணிக்காலத்தில் உயிரிழந்த சிறப்பு நிலை அலுவலக உதவியாளர் எம்.செல்வராஜின் வாரிசுதாரர் செ.ராஜேஷ் (மகன்) கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிக்கான, பணிநியமன ஆணையினை வழங்கினார்.

முன்னதாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஃபார்முலா 4 கார் பந்தயம் வெற்றி பெறும் வகையில் பணியாற்றியதற்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு கலைவாணர் அரங்கில் வழங்கிய பாராட்டு சான்றிதழை, சுற்றுலாத்துறை அமைச்சரிடம் சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் காண்பித்து வாழ்த்து பெற்றார்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் பேசுகையில் தெரிவித்ததாவது, "மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளால் இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முதன்மை சுற்றுலாத் தலமாக முன்னேறி உள்ளது. கொரோனாவிற்கு பிறகு 2021 ஆம் ஆண்டில் 57,622 ஆக இருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 4,07,139 ஆகவும், 2023 ஆம் ஆண்டில் 11,74,899 ஆகவும் உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டிற்கு தற்போது 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் வரை 7,24,318 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளார்கள். இதே போன்று உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2021ல் 11,53,36,719 ஆக இருந்து 2022ல் 21,85,84,846 ஆகவும், 2023ல் 28,60,11,515 என உயர்ந்துள்ளது. தற்போது தமிழ்நாட்டிற்கு 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் வரை 17,96,27,146 உள்நாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செஸ் ஒலிம்பியாட், ஆசிய ஹாக்கி போட்டி, அலைசறுக்கு போட்டி உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு போட்டிகளை நடத்தி தமிழ்நாட்டினை விளையாட்டு



சுற்றுலா மாநிலமாக மேம்படுத்தி வருகின்றார்கள். உலகின் முன்னணி நாடுகளின் சுற்றுலா வளர்ச்சிக்கு விளையாட்டுத்துறை மிக முக்கிய பங்காற்றி வருகின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலுடன் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சீரிய முயற்சியால் சென்னை தீவுத்திடலை சுற்றியுள்ள 3.5 கி.மீட்டர் நீள சாலைகளில் வெற்றிகரமாக நடைபெற்ற ஃபார்முலா 4 கார் பந்தயம் வெளிநாட்டு மற்றும் வெளிமாநில சுற்றுலா பயணிகளின் கவனத்தை




தமிழ்நாட்டின் மீது பெரிய அளவில் ஈர்த்துள்ளது. சலைகளில் ஒரு பக்கம் கார் பந்தயமும், ஒரு பக்கம் சீரான போக்குவரத்தும் ஒரே நேரத்தில் நடைபெற்ற பார்முலா 4 கார் பந்தய வீடியோக்கள், அதிக அளவில் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு தமிழ்நாட்டின் திறமையை பறைசாற்றி வருகின்றன. பார்முலா 4 கார் பந்தயம் காரணமாக அதிக செலவு செய்யும் திறன் கொண்ட அன்னிய செலாவணியை அதிக அளவில் வழங்கும் வகையிலான

சுற்றுலா பயணிகள் வருகை தரும் இடமாக சென்னையும், தமிழ்நாடும் மேம்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டிற்கு ஆண்டு முழுவதும் அதிக சுற்றுலா பயணிகள் வருகை தரும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகளை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள். அதனடிப்படையில் கன்னியாகுமரியில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையை இரவிலும் கண்டு மகிழும் வகையில் ரூ.12.92 கோடி மதிப்பீட்டில் லேசர் தொழில்நுட்ப உதவியுடன் ஒளியூட்டம் செய்யும் பணிகளும், தமிழ் பண்பாடு மற்றும் பாரம்பரிய சின்னமாக விளங்கிய துறைமுக நகரமான பூம்புகாரில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கட்டப்பட்ட பூம்புகார் கலைக்கூடத்தை ரூ.23.60 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகளும், தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் சுற்றுலாத்தலத்தினை ரூ.17.57 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வசதிகளுடன் மேம்படுத்தும் பணிகளும், பிச்சாவரம் சுற்றுலாத்தலத்தினை ரூ.14.07 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வசதிகளுடன் மேம்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

கொல்லிமலை, நீலகிரி மலை, ஜவ்வாது மலை, ஏலகிரி மலை, தருமபுரி மாவட்டத்தில் உள்ள வத்தல் மலை மற்றும் தென்னிந்தியாவின் ஸ்பா என்று அழைக்கப்படும் குற்றாலம் ஆகிய மலைப்பகுதிகளிலும், கன்னியாகுமரி மாவட்டம் முட்டம் கடற்கரை மற்றும் திற்பரப்பு நீர்வீழ்ச்சி, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள முத்துக்குடா கடற்கரை, திருப்பூர் மாவட்டம் ஆண்டிபாளையம் ஏரி உள்பட தமிழ்நாடு முழுவதும் சுற்றுலா வளர்ச்சித்திட்ட பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன" என்று தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை உயர் அலுவலர்கள், மாவட்ட சுற்றுலா அலுவலர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக உயர் அலுவலர்கள், மண்டல மேலாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

## இவ்வார ராசிபலன்

( 24 பக்கம் தொடர்ச்சி)

**விருச்சிகம்:** பணியில் கண்டிப்பு அவசியம். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். அறிவாற்றல் பளிச்சிடும். உடல்நலம் சீராகும். புதிய பதவிகள் கிட்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 8,5,9,3
அதிர்ஷ்ட நிறம்: சந்தன நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,X




**தனுசு:** புதுமைகள் நிறைந்த வாரம். பணியில் உயர்வு உண்டு. இடமாற்றம் நன்மை தரும். பொருள் வரவு திருப்தி தரும். குடும்ப அன்யோன்யம் கூடும். வேலைப்பளு குறையும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு உண்டு. மனோ பயம் ஏற்படும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. முதுகில் வலி வந்து போகும். திடீர் பயணம் உண்டு. மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும். உடன் பிறப்பால் உதவி உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். சுபகாரியம் கைகூடி வரும். சொத்துச் சேர்க்கை உண்டு. தனித்து நின்று ஜெயித்துக் காட்டுவீர்கள். புதிய வாய்ப்புத் தேடி வரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். எதிர்பார்ப்புகள் குறையும். இன்னல்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் கூடும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தொல்லைகள் குறையும். தோல்விகள் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். மன சஞ்சலம் குறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். கல்வியில் மந்த நிலை ஏற்படும். உலோகத்தொழில் உயர்வு தரும். எண்ணிய காரியம் கைக்கூடும். ஏற்றங்கள் அதிகரிக்கும். கட்டுமானப் பணியில் உள்ளவர்களுக்கு கௌரவம் கூடும். சுயத்தொழிலில் கவனம் தேவை. பழையக்கடன் வசூலாகும். உடல்வலி தோன்றி மறையும். விபரீத போக்கு மறையும். நன்மைகள் அதிகரிக்கும் காலம். குதூகல எண்ணம் அதிகரிக்கும். செயலில் துணிவு கூடும். வாகனச் செலவு ஏற்படும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். விருப்பமான தொழிலமையும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 3,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,R




**மகரம்:** பயணம் லாபம் தரும் வாரம். பக்கத்து வீட்டுப் பகை மாறும். உடல்சோர்வு ஏற்படும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். புதிய நட்பு உருவாகும். மெத்தனப் போக்கு மாறும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி தேடி வரும். சந்தர்பங்கள் சாதகமாக அமையும். திறமைகள் பளிச்சிடும். உறவினர் வருகை ஏற்படும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர்கள் ஆலோசனை பயன் தரும். உடல்நிலையில் கவனம் தேவை. நட்பில் பிரிவு ஏற்படும். தனவரவுகள் தடைப்படும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். கண்ணாடித் தொழில் ஏற்றம் தரும். திருப்பங்கள் ஏற்படும். வெளிநாட்டுப் பயணம் லாபம் தரும். கனவு பலிதமாகும். விளையாட்டுத் துறையில் வெகுமதி உண்டாகும். தொல்லை தந்தவர் விலகிடுவர். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றும். சகோதர வழியில் சகாயம் கிட்டும். நடுத்தரமான நன்மைகள் கிடைக்கும் காலம். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். சேமிப்பு உயரும். விவாத முயற்சி வெற்றி பெறும். குடும்பத்தில் குதூகலம் தாண்டவமாகும். ஆசைகள் பூர்த்தியாகும். பெண்களின் கௌரவம் உயரும். இயந்திர பணியில் நிதானம் தேவை. சொல்லில் கவனம் தேவை. ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். இனியச் செய்தியால் மனம் மகிழும். பெருமைகள் கூடும். வறுமைகள் விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: குருபகவான், அதிர்ஷ்ட எண்: 4,3,2,5
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**கும்பம்:** நட்பு வட்டம் விரிவடையும் வாரம். மாணவர் திறமை பளிச்சிடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. வீடு, மனை யோகம் உண்டு. தன்னம்பிக்கை கூடும். நிர்வாகத் திறமை கூடும். அரசாங்க அனுகூலம் உண்டு. நினைத்தது நிறைவேறும். அந்தஸ்து அதிகமாகும். வாழ்க்கை வசதி பெருகும். பழையக்கடன் ஒழியும். இடமாற்றம் நன்மை தரும். சாதனைகள் நிகழ்த்தும் காலம். தாய் வழி உறவால் நன்மைகள் உண்டாகும். வியாபாரத்தில் விரயங்கள் கூடும். கடன் தொல்லை குறையும். கூட்டுத்தொழிலில் மோசடி ஏற்படும். இடையூறுகள் அதிகமாகும். குழந்தைகளால் குதூகலம் கூடும். வழக்கு வெற்றி தரும். தொழில் வழி தொல்லை குறையும். கஷ்ட காலம் விலகும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடி வரும். பொருளாதார வளர்ச்சி பெருகும். மகிழ்வான நிகழ்வுகளை சந்திப்பீர்கள். கலை ஆர்வம் பெருகும். விபரீதப் போக்கு மாறும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். சொல்லில் கவனம் தேவை. புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. அலைபேசி செய்தி ஆனந்தம் தரும். பாராட்டுக்கள் தேடி வரும். கடமையில் தடங்கல் ஏற்படும். காதலில் பிரிவு ஏற்படும். கல்விக்கடன் ஏற்படும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். கணவன், மனைவி ஒற்றுமை அதிகரிக்கும். கல்வித்துறையில் உள்ளவர்களுக்கு கைமேல் பலன் கிடைக்கும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். கடன் பிரச்சனை தீர்வுக்கு வரும். செயல்திறமை வெளிப்படும். வருமானம் உயரும். காதலில் கண்ணியம் கூடும். நெருக்கடிகள் நீங்கும். அரசியலில் புகழ் சேரும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். கர்ஜனையோடு வலம் வருவீர்கள்.
வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக கணபதி, அதிர்ஷ்ட எண்: 5,4,3,2
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,J




**மீனம்:** போட்டிகள் உருவாகி மறையும் வாரம். கூட்டுத்தொழில் லாபம் தரும். பணிமாற்றம் ஏற்படும். உத்தியோகத் திருப்பம் ஏற்படும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். சோதனைகள் குறையும். தொழில் போட்டி உருவாகும். கல்விச் சலுகைகள் கிட்டும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். இனிய நட்புக்களால் பெரிய வெற்றி கிடைக்கக் கூடிய காலம். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். கல்வியில் மேன்மை கிட்டும். திடீர் தனவரவு உண்டு. அரசியலில் புகழ் கூடும். அடிப்படை தேவைகள் நிறைவேறும். ஆரோக்கியம் கூடும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. அரசு உதவிகள் கிட்டும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. சுபகாரிய செய்தி வரும். தகுதியோடும், மிகுதியோடும் வலம் வரக்கூடிய ஜெயமான காலம். அனுகூலமான போக்கு நிலவி வரும். மன சந்தோஷம் கூடும். சினத்தைத் தவிர்ப்பது நல்லது. புத்தாடை ஆபரணச் சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்பு ஏற்படும். கடனால் பிரச்சனை வரும். வெற்றிகள் குவியும். ஆன்றோர் வாழ்த்துக் கிட்டும். கொள்கையில் பிடிப்பு ஏற்படும். சாதனை நிகழும் காலம். உடல் உபாதை தீரும். வேற்று மதத்தினரால் உதவிகள் கிட்டும். மாற்று எண்ணங்கள் உதயமாகும். தோற்றம் பொலிவு கூடும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். உறவினர்கள் பாராட்டுக் கிட்டும். பழைய நட்புத் தொல்லை தரும். இறுகிய நிலை மாறும். பணிமாற்றம் நன்மை தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 4,5,7,9
அதிர்ஷ்ட நிறம்: செந்நிறம் (சிகப்பு), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,P

# பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸ் நகரில் நடைபெற்று வரும் புகழ்பெற்ற ஐ.ஃப்டிஎம் டாப் ரேசா 2024 சுற்றுலா வர்த்தககண்காட்சியில் தமிழ்நாடுசுற்றுலாத்துறை அரங்கினை பிரான்ஸ் நாட்டிற்க்கானஇந்திய தூதர் திரு. ஜாவத் அஷ்ரப் திறந்துவைத்தார்



பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸ் நகரில் நடைபெற்றுவரும் ஐ.ஃப்டிஎம் டாப் ரேசா 2024 (IFTM TOP RESA 2024) சுற்றுலாவர்த்தக கண்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் அரங்கினை சுற்றுலா ஆணையர் மற்றும்தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு. சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், பிரான்ஸ்நாட்டிற்கான இந்திய தூதர் திரு. ஜாவத் அஷ்ரப் அவர்கள் (17.9.2024) அன்று குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்பான நடவடிக்கைகளால் தற்போது, இந்தியாவிலேயே சுற்றுலாத்துறையில் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகின்றது. சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டி, சர்வதேச அலைச்சறுக்கு போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் மாமல்லபுரத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக மாமல்லபுரம் உலகளவில் முக்கியத்துவம் பெற்று வெளிநாட்டவர்களால் அதிக அளவில் பார்வையிடப்படும்சுற்றுலாத்தலமாக விளங்கி வருகின்றது. தற்போது தீவுத்திடலைச்சுற்றி நடைபெற்ற ஃபார்முலா 4 சாலை கார் பந்தயம் சென்னைநகரின் பெயரை உலக விளையாட்டு ரசிகர்களின் மனதில் நீங்காதஇடம் பெறச் செய்ததுடன், தமிழ்நாட்டிற்கு வெளிநாட்டு சுற்றுலாபயணிகள் அதிக அளவில் வருவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது. தஞ்சாவூர் பெரிய கோவில், ஊட்டி மலைரயில், கொடைக்கானல், முதுமலை சரணாலயம் உள்ளிட்ட பலதரப்பட்ட சுற்றுலாத்தலங்கள் தமிழ்நாட்டிற்கு உலகம் முழுவதும் உள்ள சுற்றுலா பயணிகளை ஈர்த்து வருகின்றன.

தமிழ்நாடு சுற்றுலாத்துறை வெளிநாட்டு மற்றும் வெளிமாநில சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் தமிழ்நாடு சர்வதேச பலூன்திருவிழா, சர்வதேச பட்டம் விடும் திருவிழா, சென்னை திருவிழா, மாமல்லபுரத்தில் இந்திய நாட்டிய விழா உள்ளிட்ட பல்வேறுவிழாக்களை நடத்தி வருகின்றது.

தமிழ்நாட்டில் உள்ள பழமையான சுற்றுலாத்தலங்கள், கோவில்கள், இயற்கை எழில் கொஞ்சும் மலைகள், நீர்வீழ்ச்சிகள், கடற்கரைகள் குறித்த கழுகுக்கண் பார்வை (TOP ANGLE VIEW) அனுபவத்தையும், சுற்றுலா பயணிகள் நேரில் சென்றுபார்வையிட்டதைப் போன்ற அனுபவங்களையும் தரும் வகையிலானகுறும்படங்கள் உலகமெங்கும் உள்ள சுற்றுலா பயணிகளை எளிதில்சென்றடையும் வகையில் தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் யூடியூப், பேஸ்புக், எக்ஸ் (டிவிட்டர்), இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட பல்வேறுசமூக வலைதளங்கள் மூலமாக தொடர்ந்து வெளியிடப்பட்டுவருகின்றன.

அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளைதமிழ்நாட்டிற்கு ஈர்ப்பதற்காக வெளிநாட்டு சுற்றுலாஏற்பாட்டாளர்கள் பங்கு பெறும் இந்திய அளவிலான பயண சுற்றுலாசந்தைகள், வெளிநாடுகளில் நடைபெறும் புகழ்பெற்ற பயணசுற்றுலா வர்த்தக சந்தைகள் மற்றும் கண்காட்சிகளில் தமிழ்நாடுசுற்றுலாத்துறையின் அரங்கம் அமைக்கப்பட்டு சுற்றுலா சிறப்புகளை தெரிவிக்கும் குறும்படங்கள் திரையிடப்பட்டும், புத்தகங்கள், சிறு கையேடுகள் ஆகியவை பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டும் கவன ஈர்ப்பு செய்யப்படுகின்றது.

இதுபோன்ற முயற்சிகளின் காரணமாக கொரோனாவிற்கு பிறகு 2021 ஆம் ஆண்டில் 57,622 ஆக இருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 4,07,139 ஆகவும், 2023 ஆம் ஆண்டில் 11,74,899 ஆகவும் உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டிற்கு தற்போது 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் வரை 7,24,318 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளார்கள்.

இதே போன்று உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2021ல் 11,53,36,719 ஆக இருந்து 2022ல் 21,85,84,846 ஆகவும், 2023ல் 28,60,11,515 என உயர்ந்துள்ளது. தற்போது தமிழ்நாட்டிற்கு 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் வரை 17,96,27,146 உள்நாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளார்கள்.

பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸ் நகரில் 17.9.2024 தொடங்கி 19.9.2024 வரை நடைபெற உள்ள புகழ்பெற்ற ஐ.ஃப்டிஎம்டாப் ரேசா 2024 (IFTM TOP RESA 2024) சுற்றுலா வர்த்தககண்காட்சியில் தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் அரங்கம்அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்து வகை நிலப்பகுதிகளில் அமையப்பெற்ற புகழ் பெற்ற சுற்றுலாத்தலங்களை விளக்கும்வகையிலான அரங்கத்தில் தமிழ்நாட்டின் கலாச்சாரத்தினை பிரதிபலிக்கும் வகையில் ஜல்லிக்கட்டு காளை மற்றும் காளையைதழுவி நிற்கும் வீரனின் சிலை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.


தமிழ்நாட்டின் சுற்றுலாத்தலங்களின் சிறப்புகளை பிரஞ்சுமொழியில் விளக்கங்களுடன் தெரிவிக்கும் புகைப்படங்கள் அடங்கிய புத்தகத்தினை சுற்றுலாத்துறை அலுவலர்கள் அரங்கத்திற்கு வருகை தந்த சுற்றுலா பயணிகள் மற்றும் சுற்றுலாதொழில் முனைவோர்களிடம் வழங்கினர்.

இந்த அரங்கத்தை ஏராளமான வெளிநாட்டு சுற்றுலாபயணிகளும், சுற்றுலா தங்கும் விடுதி துறையினர், சுற்றுலா பயணஏற்பாட்டாளர்கள் பார்வையிட்டு தமிழ்நாட்டின் சிறப்புகளைஅறிந்தனர்.

இந்நிகழ்ச்சியில் இந்திய சுற்றுலாத்துறை உதவி இயக்குநர் திருமிகு. மோனிகா ஜாம்வால், இந்திய தூதரக அலுவலர்கள், சுற்றுலாத்துறை அலுவலர்கள், சுற்றுலாத் தொழில் முனைவோர்கள்கலந்து கொண்டனர்.

# தமிழ் மக்கள் சஜித்துக்கு வாக்களிப்பார்களா?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**



ஜனாதிபதி தேர்தல் தொடர்பான பரபரப்புகளுக்குள் அமுங்கிப் போன ஒரு விடயம் ஜெனிவா கூட்டத்தொடர் ஆகும். இப்பொழுது ஒரு ஜெனிவா கூட்டத் தொடர் போய்க் கொண்டிருக்கின்றது. இக்கூட்டத் தொடரில் கடந்த வாரம் மனித உரிமைகள் ஆணையாளரால் வெளியிட்ட அறிக்கையானது, இலங்கை அரசாங்கத்திற்கு நெருக்கடிகளை உருவாக்கக்கூடியது என்று அவதானிக்கப்படுகின்றது. பொறுப்புக்கூறல் தொடர்பில் போர் குற்றங்கள் தொடர்பான சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான அலுவலகம் தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் இயங்குவதற்கு அனுமதி கோரப்படலாம் என்ற எதிர்பார்ப்பும் உண்டு அல்லது அரசாங்கத்திற்கு எதிராக மேலும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படலாம் என்ற ஊகமும் உண்டு.

ஜெனிவாவில் உள்ள இலங்கை அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ பிரதிநிதி மனித உரிமைகள் ஆணையருடைய நிலைப்பாட்டை சிறீலங்கா ஏறுகொள்ளவில்லை என்று தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அரசாங்கம் தன் நிலைப்பாட்டை வெளிப்படையாக அறிவித்திருக்கிறது. இப்பொழுது கேள்வி என்னவென்றால், இந்த விடயத்தில் எதிர்க்கட்சித் தலைவராகிய சஜித் பிரேமதாசவும் மாற்றத்தை கொண்டுவரப் போவதாகக் கூறும் மற்றொரு வேட்பாளராகிய அனுரவும் என்ன சொல்லப் போகிறார்கள் என்பதுதான்.

அரசாங்கம் வழமைபோல ஐநா மனித உரிமைகள் ஆணையருடைய அறிக்கையை எதிர்க்கிறது. ஆனால் மாற்றத்தை கொண்டு வரப் போவதாகக் கூறும் அனுர இந்த விடயத்தில் என்ன மாற்றத்தை தமிழ் மக்களுக்குக் காட்டப் போகிறார்?

பொறுப்புக்கூறல் தொடர்பாக அவர் இதுவரையிலும் பொறுப்பான பதில் எதையும் கூறியிருக்கவில்லை. அசோஸியேற்றற் பிரஸ் ஊடகத்துக்கு வழங்கிய பதிலில்... "பொறுப்புக்கூறல் பிரச்சினையை எடுத்துக்கொண்டால், இது பழிவாங்கும் வழியில் அல்ல, யாரையும் குற்றஞ்சாட்டுவது அல்ல, உண்மையை வெளிப்படுத்துவதுதான் தான்" என்று கூறியுள்ள அனுர, "பாதிக்கப்பட்டவர்கள் கூட யாரையும் தண்டிக்க விரும்பவில்லை. அவர்கள் என்ன நடந்தது என்பதை அறிய விரும்புகிறார்கள்." என்றும் கூறியுள்ளார். அதாவது தமிழ் மக்கள் நீதியை கேட்கவில்லை என்று அனுர கூறுகிறார்.

அடுத்தவர் சஜித் பிரேமதாச. அவருக்குத்தான் சுமந்திரன் தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று தலைகீழாக நிற்கிறார். தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற விரும்பும் சஜித் பிரேமதாக, ஐநா மனித உரிமைகள் ஆணையத்தின் நிலைப்பாடு தொடர்பாக தனது நிலைப்பாட்டை இதுவரை வெளிப்படுத்தியிருக்கவில்லை. இதற்கு முன்னரும் அவர் பொறுப்பு கூறல் தொடர்பாக தனது நிலைப்பாட்டை தெளிவாக முன்வைத்திருக்கவில்லை.

பொறுப்புக்கூறல் என்பது இறந்த காலத்துக்கு பொறுப்பு கூறுவது. இறந்த காலத்தில் போர்க்களத்தில் இடம்பெற்ற குற்றங்களுக்கும் கொடுமைகளுக்கும் பொறுப்புக் கூறுவது. இறந்த காலத்துக்கு பொறுப்புக் கூறத் தயாராக இல்லாத ஒரு சிங்கள தலைவர் நிகழ் காலத்துக்கும் வருங்காலத்துக்கும் தமிழர்களுக்கு பொறுப்பு கூறுவார் என்று எப்படி எதிர்பார்ப்பது? அப்படிப்பட்ட ஒரு தலைவர் தமிழ் மக்களுக்கு தீர்வைப் பெற்றுத் தருவார் என்று சுமந்திரன் நம்புகின்றாரா? இது தேர்தல் காலம். தமிழ் வாக்குகளை எதிர் பார்க்கும் சஜித் இது விடயத்தில் தமிழர்களுக்கு பொறுப்புக்கு கூறத் தயாரா?

கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவாக ஒரு பெரிய கூட்டம் இடம்பெற்றது. இதில் சுமந்திரன் சி வி கே சிவஞானம் ஆகியோர் கலந்து கொண்டார்கள். சிவிகே சிவஞானம் சஜித்தை ஆதரிக்கும் கட்சியின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்ட போதிலும், பிரச்சார மேடைகளில் சஜித்துக்கு ஆதரவாகத் தான் பேசப்போவதில்லை என்று பகிரங்கமாக அறிவித்திருந்தார். எனினும் சுமந்திரன் சி வி கே சிவஞானத்தை எதையோ கூறி நம்பச் செய்து தன்னோடு சேர்த்து மேடைக்கு அழைத்து வந்து விட்டார். மேடையில் அவர் பொது வேட்பாளருக்கு எதிராக ஆக்ரோஷமாக உரையாற்றினார். சஜித்தை ஏன் ஆதரிக்க வேண்டும் என்பதற்கு காரணத்தையும் சொன்னார். நாங்கள் இலங்கைக்குள் இணைந்து வாழ விரும்புகிறோம் என்பதுதான் அவருடைய பேச்சின் சாரம். அவ்வாறு பேசிய பின் அவர் தமது விசுவாசிகளால் வெளியிடப்படும் ஒரு பத்திரிகையையும் சஜித்திடம் கையளித்தார். அந்த பத்திரிகைக்கு பெயர் "சுமந்திரம்" என்பதாகும்.

தமிழரசுக் கட்சியின் உத்தியோகபூர்வ பத்திரிகைக்கு பெயர் சுதந்திரன். இப்பொழுது சுமந்திரன் தன்னுடைய பெயரில் ஒரு பத்திரிகையை வெளியிடுகிறார். சுதந்திரன் சுமந்திரம் ஆனது போல தமிழரசுக் கட்சியின் சமஸ்டி கோரிக்கையும் 13க்குள் சுருக்கப்பட்டு விட்டதா?

சஜித் பிரேமதாச 13ஐ முழுமையாக நிறைவேற்றுவேன் என்ற ஒரு வாக்குறுதியை மட்டும்தான் வழங்கி வருகிறார். அதை நம்பி அவருக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று சுமந்திரன் கேட்கிறார்.

தமிழரசுக் கட்சிக்கு மற்றொரு பெயர் சமஸ்டிக் கட்சி என்பதாகும். சமஸ்டிக் கட்சி எப்பொழுது சமஸ்ரியை கைவிட்டது? அதற்கு சுமந்திரன் தமிழ் மக்களுக்கு விளக்கம் கூற வேண்டும்.

அதோடு ஐநா மனித உரிமைகள் ஆணையாளருடைய அகப் பிந்திய அறிக்கைக்குப் பதில் கூற வேண்டும். அந்த அறிக்கை தொடர்பான சஜித்தின் நிலைப்பாட்டை தமிழ் மக்களுக்கு அவர் தெரிவிக்க வேண்டும்.

கடந்த 15 ஆண்டுகளாக இன அழிப்பு, போர்க் குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறத் தயாராக இருக்காத சஜித் பிரேமதாச, அதிலும் குறிப்பாக ஒரு ஜனாதிபதித் தேர்தல் காலத்தில், தமிழ் மக்களின் ஆதரவை எதிர்பார்த்து இருக்கும் ஒரு காலகட்டத்தில் கூட, பொறுப்புக்கூறல் தொடர்பாக தமிழ் மக்களுக்குச் சாதகமான ஒரு முடிவை எடுக்கத் தயாரற்ற சஜித் பிரேமதாசவுக்கு வாக்களிக்க வேண்டும் என்று சுமந்திரன் எந்த முகத்தோடு தமிழ் மக்களைப் பார்த்துக் கேட்கின்றார்?

ஏற்கனவே 2015 இல் இருந்து 18 வரையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணில் மைத்திரி அரசாங்கத்தை ஆதரித்ததன் விளைவாக ஆறு ஆசனங்களை இழந்தது. அதிலிருந்து சுமந்திரன் எதையுமே கற்றுக் கொள்ளவில்லை. இப்பொழுது பொது வேட்பாளரும் வந்து விட்டார். ஒரு தமிழ் வேட்பாளருக்கு எதிராக கடுமையான சொற்களைப் பயன்படுத்தும் சுமந்திரன், தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட இன அழிப்பு குற்றங்களுக்கு எதிராக பொறுப்புக் கூறத் தயாரற்ற சஜித் பிரேமதாசாவை ஆதரிக்குமாறு தமிழ் மக்களைக் கேட்பதன்மூலம் முடிவில் தானும் தோற்று சஜித்தையும் தோற்கடித்து தமிழ் மக்களையும் தோற்கடிக்க விரும்புகின்றாரா?

அவர் வேண்டுமானால் தோற்கட்டும். அவரை நம்பி தமிழ் மக்களிடம் வாக்கு கேட்கும் சஜித் வேண்டுமானால் தோற்கட்டும். ஆனால் தமிழ் மக்களைத் தோற்கடிப்பதற்கு அவருக்கு உரிமை இல்லை. தமிழ் மக்கள் தோற்கடிக்கப்பட முடியாத ஒரு மக்கள் என்பதனால்தான், மீண்டும் மீண்டும் எழுகிறார்கள். இப்பொழுது ஜனநாயக வழிமுறை ஒன்றுக்கூடாக அவர்கள் மீண்டும் எழு முயற்சிக்கிறார்கள். அதுதான் பொதுத் தமிழ் வேட்பாளர் என்ற நகர்வு ஆகும். அதன் மூலம் தமிழ் மக்கள் தாங்கள் யார் என்பதனை சுமந்திரனுக்கு நிரூபிக்க வேண்டும். தவறின், இன அழிப்புக்கு எதிராக சிங்கள தலைவர்கள் பொறுப்புக்கூறத் தேவையில்லை என்று சுமந்திரன் கூறுவதை தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டதாக எடுத்துக்கொள்ளப்படும்.

## பாரதி யார்?

--------------------------

எட்டயபுரம் என்ற எழில்மிகு ஊரில்
எளிமைவாழ் சின்னச் சாமிஅய்யர்
லட்சுமி அம்மாவென லட்டான தாய்க்கும்
லட்சிய மகனாக பிறந்தார்
கட்டுக் கோப்புடன் கல்வி கற்றே
கானம் பலவகை ஆக்கினார்
எட்டுத் திக்கும் இசைத்த பாடலால்
ஏற்றம் பெற்றது பாரதமே!

பாரதி என்னும் பெயரைப் பெற்றான்
பாரதம் என்ற தேசத்தில்
பாரினில் மக்கள் பண்புடன் வாழ்ந்திட
பாடல்கள் ஆயிரம் பாடினான்
தேச விடுதலை தோன்ற என்றே
தேசிய கீதங்கள் ஆக்கினார்
மாசற்ற வீர மறவனின் வாழ்வை
மாண்புடன் நாமும் வாழ்த்துமே!.

அச்சமில்லை தொடங்கி அந்திப் பொழுதும்
அக்கினிக் குஞ்சையும் ஆக்கினார்
துச்சாதனன் சபையில் திரௌபதியைப் பாடலாக்கி
துட்ட செயலெனச் சுட்டினார்
வண்டிக் காரன்பா விடுதலைக் காதலுடன்
விதுரனைத் தூது விட்டாரே!
கண்ணனென் காதலன் கதையைச் சொல்லி
கண்ணம்மா என்காதலி என்றாரே!

பாப்பாப் பாட்டும் பாஞ்சாலி சபதமும்
புதுமைப் பெண்ணையும் காட்டினார்
சாப்பாட்டுப் பஞ்சத்தை சந்தித்த போதும்
சலிக்காமல் கவிதைகள் ஆக்கினார்
பாட்டுக் கொருபுலவன் பாரதி என்பார்
பாரதி தாசனின் குருவென்பர்
பாட்டால் பாரத தேசத்தை எழச்செய்த
பாரதியார் புகழைப் பாடுவோமே!.

--------------------------

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
*(416) 844-7453*

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

PRIME LEGAL
YOUR TRUSTED LEGAL PARTNER
Your one-stop solution for migration services.
CANADA IMMIGRATION SERVICES
REFUGEE CLAIMS APPLICATIONS





26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்


அதி விரைவான விண்ணப்பத்தின் மூலம் விரைவாக WORK PERMIT & BENEFITS விரைவாகக் கிடைக்கின்றன.
அத்துடன்
VISITING VISA
VISA EXTENSION
SUPERVISA FOR PARENTS
PNP/LMIA/WORK PERMIT
EXPRESS ENTRY
STUDY PERMIT
SPOUSAL SPONSORSHIP
VISITOR VISA CONVERSION TO LMIA
சம்பந்தமான அனைத்து தேவைகளும் கனடாவின் அங்கீகாரம் பெற்ற சட்டத்தரணிகளின் மூலம் நிறைவேற்றித் தரப்படும்.
மேலதிக விபரங்களுக்கு
+1 (905) 334-6851
thecarpettocanada@gmail.com
Unit 231- 5928 Finch Avenue East, Scarborough, ON.
(Opposite the ERAA supermarket)



உதயம் 1485 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 20, 2024


## ஸ்காபுறோ விஜயா நகை மாளிகை வாடிக்கையாளர்களுக்காக நடத்திய அதிஸ்ட்ட குலுக்கலில் Audi A3 காரை பரிசாகப் பெற்ற பெண்மணி



ஸ்காபுறோவில் மார்க்கம்-ஸ்டீல்ஸ் சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள Vijaya Jewellery தங்க நகை மாளிகை நிறுவனத்தினர் தமது திறப்பு விழாவை முன்னிட்டு அன்றைய நாட் தொடக்கம் நடத்திய வாடிக்கையாளர்களுக்கான அதிஸ்டக் குலுக்கல் திட்டத்தில் கடந்த 14-09-2024 சனிக்கிழமையன்று அதிஸ்டம் பார்க்கப்பட்ட போது Audi A3 புதிய காரை வென்றவராக பெங்களூரைச் சேர்ந்தவரான திருமதி விஜயலட்சுமி பத்மநாபா அறிவிக்கப்பட்டார். அன்றைய தினம் அவர் மொன்றியால் நகரில் இருந்தமையால். அடுத்த நாள் தனது கணவருடன் ஸ்காபுறோவிற்கு வந்து Vijaya Jewellery தங்க நகை மாளிகை நிறுவனத்தின் உரிமையாளர் ருபன் அவர்களின் புதல்வரிடமிருந்து பரிசாகப் பெற்ற புதிய காரைப் பெற்றுக் கொண்டார். அப்போது எடுக்கப்பெற்ற படம் இங்கே காணப்படுகின்றது. Vijaya Jewellery நிறுவனத்தின் உரிமையாளரை வாழ்த்துவதற்கு 437 833 3197 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.

## ரொறன்ரோ சர்வதேச தமிழ்த் திரைப்பட விழா 20ம் திகதி வெள்ளிக்கிழமை கனடா மார்க்கம் நகரில் ஆரம்பமாகின்றது

கடந்த பல வருடங்களாக வெற்றிகரமாக நடைபெற்று வருகின்ற ரொறன்ரோ சர்வதேச தமிழ்த் திரைப்பட விழா வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை வழமை போல எமது வாசகர்கள் மற்றும் திரைப்பட ஆர்வலர்கள் ஆகியோ-ரோடு பகிர்ந்து கொள்கின்றோம்.

இந்த வருடமும் இலங்கை இந்தியா போன்ற நாடுகளிலிருந்து பல திரைப்படங்கள் 21ம் 22ம் திகதிகளில் மார்க்கம் நகரில் உள்ள யோர்க் சினிமா திரையரங்கில் திரையிடப்படவுள்ளன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி 9ம் பக்கம்




## கணபதி ரவீந்திரன்– ரூபி யோகதாசன் வழங்கும் நாடகப் பெருவிழா–2024 ஒக்டோபர் 19ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது

(உள்ளே 19ம் பக்கத்தில்)

## Durham Tamil Association hosts ‘Hope for Homeland Projects Gala Night

## டுறம் தமிழர் சங்கம் நடத்திய ‘தாயகத்திற்குரிய உதவித் திட்டங்கள்’ நோக்கம் கொண்ட இராப்போசன விருந்து



கனடாவில் வெற்றிகரமாக கடந்த பல ஆண்டுகளாக இயங்கிவரும் “டுறம் தமிழர் சங்கம்“ (Dur-ham Tamil Association) நடத்திய “தாயகத்திற்குரிய உதவித் திட்டங்கள்“ நோக்கம் கொண்ட இராப்போசன விருந்து கடந்த 15ம் திகதித ஞாயிற்றுக்கிழமையன்று மாலை பிக்கரிங் நகரில் உள்ள மண்டபத்தில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பெற்று நேர்த்தியாக நகர்ந்து சென்றது..-

இந்த நல்நோக்கம் கொண்ட இராப்போசன விருந்து விழாவை அறிவிப்பாளர் மதிசயன் அவர்கள் தொகுத்து வழங்கினார்

தொடர்ச்சி 12ம் பக்கம்

## கனடா நண்பர்கள் மத்தியில் அன்பு அறிவிப்பாளர் ‘அப்துல் ஹமீட்

“அன்பு அறிவிப்பாளர்“ அப்துல் ஹமீட் அவர்களின் தற்போதைய கனடா வருகையின் போது அவரது நண்பர்கள் குழாம் ஒன்றிணைந்து வரவேற்பு உபசாரம் ஒன்றை வர்த்தகப் பிரமுகர் குலா செல்லத்துரை அவர்களது NETWYN வர்த்தக நிறுவன மண்டபத்தில் நடத்தினார்கள். கடந்த 16-09-2024 அன்று திங்கட்கிழமை மாலை நடைபெற்ற இந்த நிகழ்வில் “அன்பு அறிவிப்பாளர்“ அப்துல் ஹமீட் அவர்கள் மனந்திறந்து பல விடயங்களை பொறுமையாகப் பகிர்ந்து கொண்டார்.

அத்துடன் அவர் தனது மனதை திறந்த வார்த்தைகளில் சில துன்பியல் அனுபவங்கள் பற்றிய விபரங்களை வெளிப்படையாக எடுத்துரைத்த போது. அவற்றை செவிமடுத்த அனைத்து நண்பர்களுக்கும் அவர் மீதான பாசத்தை அதிகரித்தன என்றால் மிகையாகாது.



## கனடிய வர்த்தக வெற்றியாளர்கள் கணேசன் சுகுமார்–குலா செல்லத்துரை ஆகியோரின் சேவைக்காக வழங்கப்பெற்ற கௌரவங்கள்

கனடா வாழ் வர்த்தகத்துறை முன்னோடிகளும் சமூக நலன் விரும்பிகளுமான வர்த்தக வழிகாட்டிகளுமான திருவாளர்கள் கணேசன் சுகுமார்-குலா செல்லத்துரை ஆகியோரின் சேவையைப் பாராட்டி கனடிய அரசாங்கத்தின் சிபார்சின் பேரில் அவர்கள் இருவருக்கும் வழங்கப்பெற்ற உயர் கௌரவங்களை அண்மையில் நடைபெற்ற அரச வை-பவம் ஒன்றில் பெற்றுக் கொண்டார்க்ள மேற்படி உயர் கௌரவங்களை கனடா வாழ் 18 சேவையாளர்கள் பெற்றுக் கொண்டார்கள். மேன்மைதங்கிய இங்கிலாந்து மன்னர் மூன்றாம் சார்லஸ் மன்னரின் முடிசூட்டுப் பதக்கங்களே இந்த பதின்மருக்கு வழங்கப்பெற்றன.

தொடர்ச்சி 12ம் பக்கம்

